திருமா மணிநங்கை வந்தாள்! – எங்கள்
தேசந் தழைத்திட வந்தாள்! வந்தாள்!



# கூடல்

## பரல் : 7

கண்ணகி கலை இலக்கிய விழா மலர் – ௨௦௧௮

கண்ணகி கலை இலக்கியக் கூடல்
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கூடல்' சிறப்புற வாழ்த்துகின்றோம்

AHILA HARDWARE

# Ahila Hardware

General Hardware Merchants

# 16, Station Road, Batticaloa.
Tel : 065 222 2784 Fax : 065 222 7703
E-mail : ahilahardware@yahoo.com

Authorised Dealer for

Nippon, Tokyo Super, Pozzolana Cement,
Lanka Tor Steel, PE+ Delivery Centre
Pepsi - Batticaloa

அன்றாட வீட்டுப்
பாவனைக்கான பொருட்களை
மொத்தமாகவும் சில்லறையாகவும்
ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

'கூடல்' சிறப்புற வாழ்த்துகின்றோம்

SUN FANCY HOUSE
PRIDE OF BATTICALOA

சன் பன்சி ஹவுஸ்



இல. 163, திருமலை வீதி,
மட்டக்களப்பு

தொ.பே. இல.
065 2 223092

புதிய பிரமாணத்தில், மிகப் பிரமாண்டமான காட்சியறையில், சுயதேவை அடிப்படையில்
புத்தகங்கள், பொருட்கள், யாவும் கொள்வனவு செய்யும் வகையில் பல்பொருள் அங்காடியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமா மணிநங்கை வந்தாள்! - எங்கள்
தேசந் தழைத்திட வந்தாள்! வந்தாள்!

# கூடல்

பரல் – 7

## கண்ணகி கலை இலக்கிய விழா மலர் – 2018

**செப்டெம்பர் 06, 07, 08, 09 – 2018**
**தேற்றாத்தீவு கொம்புச் சந்திப் பிள்ளையார் ஆலய முன்றல்,**
**களுதாவளை கலாசார மண்டபம்.**

**விழாமலர் அனுசரணை :**
களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயம்

**கண்ணகி கலை இலக்கியக் கூடல்,**
**மட்டக்களப்பு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமா மணிநங்கை வந்தாள்! - எங்கள்
தேசந் தழைத்திட வந்தாள்! வந்தாள்!



# கூடல்

**பரல் – 7**

**கண்ணகி கலை இலக்கிய**
**விழா மலர் – 2018**

**தொகுப்பாசிரியர்**

கதிரவன் த. இன்பராசா

**மலர்க்குழு**

செங்கதிரோன் த.கோபாலகிருஸ்ணன்
அ.அன்பழகன் குருஸ்
ச. மதன்
மா.தவராஜா
து.நகுலேஸ்வரன்

**படங்கள்**

அ. அன்பழகன் குருஸ்
ஜீ. எழில்வண்ணன்
த.அமர்நாத்
தங்கராசா கோபாலகிருஸ்ணன்

**கண்ணகி கலை இலக்கியக் கூடல்**
45A, பிரதான வீதி, சின்ன ஊறணி,
மட்டக்களப்பு.
தொ.பே.இல: 0777492861 0652053003
மின்னஞ்சல் : kannahivizha@gmail.com
இணையத்தளம்: www.kannakikoodal.com

## கூடலில் கூடுவோம்

எட்டாவது கண்ணகி கலை இலக்கிய விழா இவ்வாண்டு மண்முனை தென்எருவில் பற்று, களுவாஞ்சிகுடிப் பிரதேச செயலகப் பிரிவை மையப் படுத்தி களுதாவளை எனும் பழம் பதியில் நடைபெறு கின்றது. தொடராக எட்டு விழாக்களைக் காணும் கண்ணகி கலை இலக்கியக் கூடலின் செயற்பாடுகள் விரிவடைந்து இவ்வாண்டு களுவாஞ்சிகுடிப் பிரதே சத்திற்கும் வியாபிக்கின்றமை வலுவான முன்னெடுப் பாகும். கண்ணகி கலையிலக்கியக் கூடல் தாபிக்கப் பட்டதன் நோக்கம் மக்கள் மயப்பட்டு வருவதன் அடையாளத்தினை இவ்விழா சான்றுப்படுத்தி நிற்கின்றது.

தெற்கே துறைநீலாவணை தொடங்கி வடக்கே செட்டிபாளையம்வரை இவ் விழாவின் கைகோர்ப்பு நிகழ்ந்துள்ளது. இப்பிரதேசத்தின் மையமான களுதாவளைமக்கள் முழுமூச்சுடன் இயங்கி கண்ணகி கலை இலக்கியப் பெருமையை பரவலாக்குவது அதிமுக்கிய முனைப்பாகும். இப் பிரதேச மக்களும், அவர்தம் கண்ணகியம்மன் பற்றிய பிரதிக்ஞையும், அவர்களது பண்பாட்டுப் பாரம்பரியங்களும் கண்ணகி கலையிலக்கியங்களை விரிவாக்கம் செய்யப் பெரிதும் முயன்றுள்ளன. குறிப்பாகக் களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய பாரிபாலன சபையின் ஒத்துழைப்பும், விழாக்குழுவின் அதீத முயற்சியும் இவ்விழாவின் ஆதாரங்களாகும்.

இப்பிரதேச மக்களிடமிருந்து மறைந்துபோன, மறந்துபோன போர்த்தேங்காயுடைத்தல் மற்றும் கொம்புமுறிச் சடங்கின் மீளுருவாக்கம் ஆகியன இவ்வருட விழாவில் சிறப்படைகின்றன. இதனை முன்னின்று நடாத்தும் தேற்றாத்தீவுப் பெருந்த கைகளுக்கு அந்த வரலாற்றுப் பெருமை சேருகின்றது.


எமது பொதுநோக்கத்தின் அடிப்படையில் கூடலில் கூடுவோம் வாருங்கள் எனும் அறைகூவல் அதிகளவானவர்களை எம்மோடு இணைப்பது சிறந்த வாய்ப்பாக நாம் காணுகின்றோம். எமது கூடல் மேலும் கூடி, கூடிமகிழ்ந்து கண்ணகி கலையிலக்கியப் பண்பாட்டுத் தளத்தில் மக்களை ஒன்றிணைக்கும் எனும் நம்பிக்கையோடு மீண்டும் ஒரு கூடலில் கூடுவோம்.

**அன்பழகன் குருஸ்**
செயலாளர், கண்ணகிகலை இலக்கியக் கூடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணகி இலக்கிய விழாப் பட்டயம்



**த**மிழ் மண்ணோடும் தமிழ் மரபோடும் இணைந்த கதை கண்ணகி கதை. அவளின் திண்மையும், தீரமும் நிறைந்த வாழ்வும், மக்கள் நலன் நாட்டமும் அவளை மக்களின் தெய்வமாக்கின.

சோழ நாட்டில் பிறந்து, பாண்டிய நாட்டிலே வழக்குரைத்து, சேர நாட்டில் தெய்வீகமான கண்ணகி, ஈழ நாட்டில் சிங்கள தமிழ் மக்களின் மத்தியில் வழிபாட்டிற்குரிய தெய்வமானாள்.


பின்னாளில் கண்ணகி "கண்ணகையம்மன்" என கிழக்கிலங்கையில் நிலைபெற்று விடுவதுடன், கிழக்கிலங்கையின் பண்பாட்டு அடையாளங்களுள் ஒன்றாகவும் ஆகிவிடுகின்றாள். கிழக்கிலங்கையில் வைகாசித் திங்கள் அவளுக்குரியதாகும். இதன்போது கிழக்கிலங்கை விழாக்கோலம் பூணும்.

மக்கள் தெய்வமான கண்ணகியின் கதை சிலப்பதிகாரம், சிலம்பு கூறல், கண்ணகி காவியம், கண்ணகி வழக்குரை, குளுத்திப் பாடல், கண்ணகையம்மன் நாடகம், கண்ணகி வசந்தன், கும்மி, கரகம், காவடி, கொம்பு முறிப்பு, குரவைக் கூத்து என தமிழில் கண்ணகி கலை, இலக்கியமாக விரிந்துள்ளது.

கண்ணகிக்குரித்தான வைகாசி மாதத்தில் அவளை நினைவுகூரவும், அவளது இலக்கியங்களைப் பரவலாக்கவுமான நோக்குடன் கண்ணகி இலக்கிய விழா 2011.06.18 அன்று எம்மால் தொடக்கி வைக்கப்படுகின்றது.

இவ்விழா எதிர்காலத்தில் வருடம் தோறும் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லப்படும் எனவும் இத்தால் பிரகடனப்படுத்தப்படுகின்றது.

இப் பட்டயம் கண்ணகி இலக்கிய விழாக் குழுவினரால் 2011.06.18ம் திகதி நடைபெற்ற "கண்ணகி இலக்கிய விழா 2011" இன் தொடக்க விழாவில் காரைதீவைச் சேர்ந்த ஓய்வுபெற்ற அதிபர் திருமதி **கோமேதகவல்லி செல்லத்துரை** அவர்களால் பிரகடனப்படுத்தப்பட்டு, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் **திரு.சுந்தரம் அருமைநாயகம்** அவர்களிடம் கையளிக்கப்பட்டது.



# "கண்ணகி கலை இலக்கியக் கூடல்"

## 'கூடல்' குடும்ப (செயற்குழு) உறுப்பினர்கள் விபரம் – 2018

**காப்பாளர்** : **பேராசிரியர் சி.மௌனகுரு**
45/19, 2ம் குறுக்கு, சின்ன உப்போடை, மட்டக்களப்பு. 0773405414, 0652223053

**துணைக் காப்பாளர்** : **எஸ்.எதிர்மன்னசிங்கம்**
22, 5ம் குறுக்கு, திஸ்ஸவீரசிங்கம் சதுக்கம், மட்டக்களப்பு. 0772029888

| இல | முழுப் பெயர் | முகவரி | தொ. பே. எண் |
|---|---|---|---|
| 1 | தம்பியப்பா கோபாலகிருஸ்ணன். **(தலைவர்)** | 607, பார்வீதி, மட்டக்களப்பு. | 0771900614 |
| 2 | அ.அன்பழகன் குரூஸ். (JP) **(செயலாளர்)** | 45A, பிரதான வீதி, சின்ன ஊறணி, மட்டக்களப்பு. | 0777492861 |
| 3 | ச.ஜெயராஜா. (பொருளாளர்) | 19, முதலாம் குறுக்கு, கல்லடி, மட்டக்களப்பு. | 0777249729 |
| 4 | மாணிக்கப்போடி சதாசிவம். (JP) (துணைத்தலைவர்) | புதுக்குடியிருப்பு, ஆரையம்பதி. | 0757735507 |
| 5 | செல்வி. கதிராமன் தங்கேஸ்வரி. **(துணைத்தலைவர்)** | 268/26, பார் வீதி, மட்டக்களப்பு. | 0776854619 |
| 6 | சி.சாமித்தம்பி. **(துணைத்தலைவர்)** | 32/2, கண்ணகியம்மன் கோவில் வீதி, தாண்டவன்வெளி, மட்டக்களப்பு. | 0772933537 |
| 7 | கதிரவன் த.இன்பராசா (JP) | கதிரவன் கலைக்கழகம், புதுக்குடியிருப்பு - EP, மட்டக்களப்பு. | 0754265201 |
| 8 | ச.மதன் | புதுக்குடியிருப்பு, ஆரையம்பதி. | 0773620328 |
| 9 | திருமதி. சுந்தரமதி வேதநாயகம். **(துணைச்செயலாளர்)** | 12/8A, திருமகள் வீதி தெற்கு, மட்டக்களப்பு. | 0652225090 |
| 10 | அ.செல்வேந்திரன் | 23/1, டயஸ் லேன், மட்டக்களப்பு. | 0773618402 |
| 11 | சட்டத்தரணி கி. துரைராசசிங்கம். | 73, வாவிக்கரைவீதி-1, மட்டக்களப்பு. | 0718497158 |
| 12 | க. செல்வாநந்தம். | 10, சிவன்கோவில் வீதி, பனங்காடு, அக்கரைப்பற்று. | 0771272984 |
| 13 | ச.தெய்வேந்திரன் | 394/42A, நாகதம்பிரான் கோவில் வீதி, ஞான சூரியம் சதுக்கம், மட்டக்களப்பு. | 0777917577 |
| 14 | க.டணிஸ்கரன். | 111, அருச்சுனர் வீதி, பாண்டிருப்பு-1, கல்முனை. | 0778511890 |
| 15 | வெ.ஜெயநாதன். | 157, விஷ்னு கோயில் வீதி, காரைதீவு. | 0672250442 |
| 16 | ஆர்.சயனொளிபவன் | 90, கண்ணகியம்மன் கோவில் வீதி, மட்டக்களப்பு. | 0774368089 |
| 17 | எஸ்.பி.நாதன். | "பொதிகை", V.C. வீதி, தம்பிலுவில் -02. | 0779230682 |
| 18 | த.கைலாயப்பிள்ளை. | நாவலர் வீதி, விபுலாநந்த இல்லம், அக்கரைப்பற்று. | 0773664282 |
| 19 | வ.ஜயந்தன். | சந்தை முன் வீதி, தம்பிலுவில். | 0775024968 |
| 20 | ம.வேதநாயகம். | 12/8A, திருமகள் வீதி தெற்கு, மட்டக்களப்பு. | 0718112652 |
| 21 | செ.துரையப்பா. | 4, முதலியார் வீதி, மட்டக்களப்பு. | 0652222547 |
| 22 | த.அழகையா. (JP) | 14/10, கூழாவடி, மட்டக்களப்பு. | 0773599875 |
| 23 | காசுபதி நடராஜா. | 42, 2ம் குறுக்கு, கல்லடி வேலூர், மட். (34A ½ , Initium Rd, Dehiwala) | 0773247132 |
| 24 | செ.தபராசா | 17, நல்லையா வீதி, மட்டக்களப்பு. | 0652225848 |

| | | | |
|---|---|---|---|
| 25 | கதிர் பாரதிதாசன். | 15/4, அதிகார் வீதி, மட்டக்களப்பு. | 0770837335 |
| 26 | மண்டூர் அசோகா. | 8/22, பிள்ளையார்கோவில் கல்லடி, மட்டக்களப்பு. | 0771026140 |
| 27 | திருமதி. சி.ஞானசூரியம். | 25/2, மாரியம்மன் கோவில் வீதி, கல்லடி, மட்டக்களப்பு. | 0771768830 |
| 28 | இ.பாக்கியராஜா | 10/4, 1ம் குறுக்கு, கல்லடி, மட்டக்களப்பு. | 0779068411 |
| 29 | க.சுதர்சன் | தலைவர் வீதி அக்கரைப்பற்று - 08 | 0774004984 |
| 30 | இ.தேவராசா | வில்லியம் பிள்ளை வீதி, தம்பிலுவில்-01. | 0672265294 |
| 31 | அ.குலேந்திரராஜா. | விபுலாநந்த வீதி, புதுக்குடியிருப்பு (கி.மா) | 0778163717 |
| 32 | ப.குணசேகரம். | வன்னியர் வீதி, களுதாவளை -01. | 0777626105 |
| 33 | தா.தங்கவேல். | பண்டிங்ஸ் ஒழுங்கை, மட்டக்களப்பு. | 0773444124 |
| 34 | கா.இராமச்சந்திரன். | விஷ்ணுவித்தியாலய வீதி, வந்தாறுமூலை | 0777238674 |
| 35 | மு.மகேந்திரராசா. | பழைய டி.ஆர்.ஓ ஒழுங்கை, செங்கலடி. | 0779415620 |
| 36 | மா.சசிகுமார் | 114/1. ஜெயந்தி வீதி, ஜெயந்திபுரம், மட்டக்களப்பு. | 0772350374 |
| 37 | ஞா.சிறிநேசன் | 56/03, திருமலை வீதி, மட்டக்களப்பு. | 0766648048 |
| 38 | சு.முருகேசபிள்ளை. | 65/14, கூளாவடி வீதி, மட்டக்களப்பு. | 0776166711 |
| 39 | திருமதி. சரஸ்வதி விஜயநாதன். | பிரதான வீதி, ஆரையம்பதி. | 0772768072 |
| 40 | மூ.சிவாநந்தராஜா. | 141/5, புதிய கல்முனை வீதி, மட்டக்களப்பு. | 0775155903 |
| 41 | தி.புலேந்திரகுமார். | கன்னன்குடா, மட்டக்களப்பு. | 0776966786 |
| 42 | பொறியியலாளர் வ.கருணநாதன் | சாண்டோ சங்கரதாஸ் வீதி, நாவற்குடா, மட்டக்களப்பு. | 0773876361 |
| 43 | பொறியியலாளர் அரிமா P.D.A ஜெயக்குமார் | 06, கிளனி ஒழுங்கை, மட்டக்களப்பு. | 0779771600 |
| 44 | க.தவராஜா | 515/41, திருமலை வீதி, மட்டக்களப்பு. | 0752869984 |
| 45 | மா.திருநாவுக்கரசு | நாவலர் வீதி, குருக்கள்மடம். | 0652250292 |
| 46 | மு.விநாயகமூர்த்தி | 191/23, பார்வீதி, மட்டக்களப்பு. | 0776044810 |
| 47 | திருமதி. பிரியா கருணாகரன். | 8/21, 1ம் குறுக்கு. பிள்ளையார் கோவில் வீதி, கல்லடி, மட்டக்களப்பு. | 0770303550 |
| 48 | சிவ. வரதகரன் | 163, திருமலை வீதி, மட்டக்களப்பு. | 0771530901 |
| 49 | இரா.கலைவேந்தன் | 71, தண்ணீர்க் கிணற்றடி வீதி, பாலமீன்மடு, மட்டக்களப்பு | 0776746922 |
| 50 | சௌந்.லெனாட் லோரன்ஸோ | தாழங்குடா - 02, ஆரையம்பதி | 0772276543 |
| 51 | ஜீ.எழில்வண்ணன். | 32/2, கூட்டுறவுக் கடை வீதி, கிரான்குளம். | 0771995932 |
| 52 | திருமதி. கயல்விழி வினோதரன். | பேத்தாழை, வாழைச்சேனை. | 0775113174 |
| 53 | ஆ.தனுஷ்கரன் (சோலையூரான்) | கொக்கட்டிச்சோலை. | 0779008943 |
| 54 | செ.துஜியந்தன். | கடற்கரை வீதி, புதுக்குடியிருப்பு. | 0754303309 |
| 55 | த.அமர்நாத் | 'பேரின்பகம்', விபுலாநந்த வீதி, வாழைச்சேனை. | 0772288383 |
| 56 | மா.தவராஜா. | தபாற்கந்தோர் வீதி, கிரான். | 0773821575 |
| 57 | து.நகுலேஸ்வரன். | 218, சர்வோதய வீதி, சின்ன ஊறணி, மட்டக்களப்பு. | 0776168859 |
| 58 | க.ஜெகதீஸ்வரன். | 134, இந்துக் கல்லூரி வீதி, வாழைச்சேனை. | 0777756474 |
| 59 | கலாநிதி சு.சிவரெத்தினம் | பிரதான வீதி, களுதாவளை - 01 | 0770075898 |
| 60 | மு. ஜீவன் | தேவாலய வீதி, களுதாவளை - 02 | 0777113119 |
| 61 | அழகப்பன் தனுராஜ் | அம்பிலாந்துறை, கொக்கட்டிச்சோலை | 0750337860 |
| 62 | செல்வி. நடராசா தர்சினி | மகிழடித்தீவு, கொக்கட்டிச்சோலை | 0750732706 |


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# முரசம்

கதிரவன் த.இன்பராசா
தொகுப்பாசிரியர் 'கூடல்'

எட்டுத் திக்கும் ஓர் அதிர்வு
ஏற்றம் பெற்ற விழாஇது முதிர்வு
எட்டாவது விழா களுதா வளையில்
கொட்டுதே முரசு குதூகல நிலையில்

ஆடலும் பாடலும் அரங்கை நிரப்புது
ஆன்றோர் அரங்கமோ அறிவைப் பரப்புது
தேடலும் தேட்டமும் 'கூடல்' சிறக்குது
தேசம் முழுவதும் வாசம் வீசுது

மண்முனை தென் எருவில்பற்றுப்பிரதேச
மரபு மாறாத கிரான் பிரதேச
கண்ணகி விழாவின் தரவுகள் சுமந்து
'கூடல்' பரல் ஏழு பிறக்குது

கண்ணகி வழிபாடு வைகாசி திங்களில்
பண்டுமுதல் மக்களை பக்தியில் நிறைத்திடும்
கண்ணகி பண்பாடு கிழக்கின் அடையாளம்
மண்ணிலே மக்களை புத்தியில் நிறைத்திடும்

கண்ணகி இலக்கியம் கலையாமல் பெருகிட
கலைகளும் நிலையாகி பிழையாமல் உயர்ந்திட
மண்ணிலே கண்ணகி பண்பாடு ஓங்கிடும்
கண்ணகி விழாஇது கதைபல சொல்லுது

மண்ணோடும் மரபோடும் கண்ணகி வரலாறு
மக்களின் வாழ்வோடு மங்காது இணையுது
திண்மையும் தீரமும் பெண்மையும் நீதியும்
கண்ணகி கதைகளில் கண்களைத் திறக்குது

சிலப்பதிகாரம் குடிமக்கள் காப்பியம்
சிறப்பான காவியம் கண்ணகி வழக்குரை
பழங்காலம் தொட்டதன் அடியாக எழுந்திட்ட
பனுவல்கள் பலநூறு பழக்கங்கள் சொல்லுது

கூத்தோடு கரகம் கும்மி கோலாட்டம்
கொம்புமுறி விளையாட்டு காவடி ஆட்டம்
ஆத்தாவின் பெயரிலே ஆயிரம் கலைகள்
அரங்கேற நம்கலை நிலைக்கும் ஆதலால்

கண்ணகி கலை இலக்கியக் கூடல்
கண்ணகி கலை இலக்கிய விழாவை
ஆண்டுகள் தோறும் அறிவுசார் விழாவாய்....
ஆற்றுகை புரிய ஆதரவு தாரீர்.

தொன்மங்கள் தொலைந்தால் வன்மங்கள் தோன்றும்
தொன்றுதொட் டெழுந்த தொன்மங்கள் காக்க
அன்பான 'கூடல் குடும்பம்'' ஒன்றாக
அன்னையின் வழியில் அனைவரும் எழுவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணகி கலை இலக்கிய விழா 2018
## விழாக்குழு - களுதாவளை



**அமர்ந்திருப்போர் (இடமிருந்து வலம்) :**
திரு.த.ஜயேந்திரராசா, திரு.க.நாராயணபிள்ளை, திரு.இ.கோபாலபிள்ளை, கலாநிதி.சு.சிவரெத்தினம், திரு.ப.குணசேகரன், திரு.ஆ.அரசரெத்தினம், திரு.வி.இராசலிங்கம், திருமதி.வேதநாயகி குணநாயகம், திரு.கா.வேலாயுதபிள்ளை, திரு.க.நீதிராஜா, திரு.ஞா.யோகநாதன்.

**நிற்பவர்கள் (இடமிருந்து வலம்) :**
திரு.த.யோகநாதன், திரு.கா.சச்சிதானந்தம், திரு.மு.சதாகரன், திரு.மு.இளைஜன், திரு.த.பிரபாகரன், திரு.ப.கோபாலகிருஸ்ணன், திரு.சி.கனகசபை, திரு.க.கனேசபிள்ளை, திரு.சோ.கணபதிப்பிள்ளை, திரு.கோ.கயிலாயபிள்ளை, திரு.மா.திருநாவுக்கரசு, திரு.த.கணேசமூர்த்தி, திரு.மு.ஜீவன், திரு.சே.அருள்ராஜ், திரு.ச.ரகுபதி, திரு.கு.நாகேந்திரன், திரு.சோ.சற்குணராஜா, திரு.சீ.லவகுமார், திரு.பெ.புவனசுந்தரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கண்ணகி கலை இலக்கியக் கூடல்" செயற்குழு - 2018



**அமர்ந்திருப்போர் (இடமிருந்து வலம்) :**

திருமதி. சி.ஞானசூரியம், செல்வி க.தங்கேஸ்வரி [துணைத்தலைவர்], திரு. ப.குணசேகரம், செங்கதிரோன் திரு. த. கோபாலகிருஸ்ணன். [தலைவர்], திரு. எஸ்.எதிர்மன்னசிங்கம். [துணைக் காப்பாளர்], சட்டத்தரணி கி.துரைராஜசிங்கம், திரு. மாணிக்கப்போடி சதாசிவம் JP [துணைத்தலைவர்], திரு.வேதநாயகம், திரு. இ.தேவராசா, திரு. த.கைலாயப்பிள்ளை, திரு. எஸ்.ஜெயராஜா. [பொருளாளர்], திருமதி. சரஸ்வதி விஜயநாதன், திருமதி. சுந்தரமதி வேதநாயகம். [துணைச் செயலாளர்].

**நடுவரிசையில் நிற்பவர்கள் (இடமிருந்து வலம்) :**

திருமதி. மண்டூர் அசோகா, திரு.சோ.கணபதிப்பிள்ளை, கதிரவன். த.இன்பராஜா ["கூடல்" தொகுப்பாசிரியர்], பொறியியலாளர் அரிமா PDA ஜெயக்குமார், திரு. எஸ்.தெய்வேந்திரன், திரு. ஆர்.சயனொளிபவன், திரு. மு.மகேந்திரராஜா, திரு. செ.துரையப்பா, திரு. க.தவராஜா, கலாநிதி.சு. சிவரெத்தினம், திரு. த.அழகையா, திரு. மு.விநாயகமூர்த்தி, திரு. கு.நாகேந்திரன், திரு. வ.ஜயந்தன், திருமதி. ஞானரெட்ணம், திரு. அ.அன்பழகன் குரூஸ் JP [செயலாளர்].

**பின்வரிசையில் நிற்பவர்கள் (இடமிருந்து வலம்) :**

திரு.த.டிஷாந்தன், திரு.மு.தீவன், திரு. மா.சசிகுமார், திரு. க.செல்வாநந்தம், திரு.அ.குலேந்திரராஜா, திரு.ஆ.தனுஷ்கரன் [சோலையூரான்], திரு.மூ.சிவாநந்தராஜா, திரு. க.ஜெயதீஸ்வரன், திரு. ச.மதன், , திரு. கதிர் பாரதிதாசன். திரு.எஸ்.பி.நாதன், பாலமீன்மடு இரா. கலைவேந்தன், கவிஞர். ஜீ. எழில்வண்ணன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## நிகழ்ச்சித் தொகுப்பு

2017 செப்டம்பர் 03, 04 ஆகிய தினங்களில் மட்டக்களப்பு மாவட்டம், கோறளைப்பற்று - தெற்கு (கிரான்) மட்/கசு/ கிரான் மத்திய கல்லூரியில் மற்றும் கிரான் றெஜி கலாசார மண்டபத்தில் நடைபெற்ற ஏழாவது கண்ணகி கலை இலக்கிய விழாவான "கண்ணகி கலை இலக்கிய விழா - 2017" இன் நிகழ்ச்சிகள் தொகுக்கப்பட்டுள்ளன.

– தொகுப்பாசிரியர் கதிரவன் த.இன்பராசா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# [illegible] கலை இலக்கிய விழா 2017

– கிரான் –



## 03 செப்டம்பர் 2017, ஞாயிற்றுக்கிழமை - முதலாம் நாள் காலை

## தொடக்கவிழா (காலை 7.00 - பி.ப. 1.40)

### பண்பாட்டுப் பவனி. (காலை 06.30 - 09.00)

பண்பாட்டுபவனியின் ஒரு அணி கறுவாக்கேணி முத்துமாரியம்மன் ஆலயத்திலிருந்து **கலாபூஷணம் க.நடேசன்** அவர்களின் தலைமையிலும் மற்றொரு அணி சந்திவெளி கண்ணகை அம்மன் ஆலயத்திலிருந்து **அதிபர் த.கணபதிப்பிள்ளை** அவர்களின் தலைமையிலும் இன்னுமொரு அணி புலிபாய்ந்தகல் பிள்ளையார் கோயிலிலிருந்து **கோ.பத்மயோகன்** அவர்களின் தலைமையிலும் புறப்பட்டு மூன்று அணிகளும் கிரான் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய முன்றலில் ஒன்றிணைந்து பின் அங்கிருந்து விழா மண்டபத்தை அடைந்தது.


### பண்பாட்டுப் பவனி இணைப்பாளர்கள் :-

- கறுவாக்கேணி : திரு.மு. கோகுலதாசன்
- சந்திவெளி : திரு.கு. சுதாகரன்
- புலிபாய்ந்தகல் : திரு.க. சிவப்பிரகாசம்




கறுவாக்கேணி முத்துமாரியம்மன் ஆலயத்திலிருந்து புறப்பட்ட அணி



சந்திவெளி கண்ணகி அம்மன் ஆலயத்திலிருந்து புறப்பட்ட அணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புலிபாய்ந்தகல் பிள்ளையார் கோயிலிலிருந்து புறப்பட்ட அணி




மூன்று அணிகளும் கிரான் சித்தி விநாயகர் ஆலய முன்றலில் ஒன்றிணைவு




பண்பாட்டுப் பவனி விழா மண்டபத்தை அடைதல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




▲
விழா மண்டப நுழைவாயில்



பேராளர் பதிவு



வரவேற்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலை அமர்வு - 1 (மு.ப 9.00 - மு.ப 11.00)

# "கூலவாணிகன் சாத்தனார் அரங்கு"

**மங்கல விளக்கேற்றல்**




**திரு.க. பாஸ்கரன்**
வலயக்கல்விப் பணிப்பாளர், மட்டக்களப்பு கல்வி வலயம்




**எழுத்தாளர் உடப்பூர் வீரசொக்கன்**




**திரு.மா. தவராசா**
விழாக்குழுத் தலைவர் / அதிபர் சந்திவெளி சித்திவிநாயகர் வித்தியாலயம்



**சட்டத்தரணி கி. துரைராஜசிங்கம்**
செயற்குழு உறுப்பினர்,
கண்ணகி கலை இலக்கியக் கூடல்




**திரு. ப. குணசேகரம்**
செயற்குழு உறுப்பினர்,
கண்ணகி கலை இலக்கியக் கூடல்



**செங்கதிரோன் த.கோபாலகிருஷ்ணன்**
தலைவர், கண்ணகி கலை இலக்கியக் கூடல்



Digitized by Noolaham Foundation.



**மௌன இறைவணக்கம்**



**தமிழ்மொழி வாழ்த்து**

**திருமதி. பிரியதர்சினி ஜதீஸ்வரன்**

(விரிவுரையாளர், சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம்.)



**கண்ணகி கலை இலக்கிய விழாக் கீதம்**

**திருமதி. கௌசல்யா சஜீரூபன்** பி.ஏ (சங்கீதம்)


(ஆசிரியை, கன்னன்குடா மகா வித்தியாலயம்)




**வரவேற்பு நடனம் – கிரான் மத்திய கல்லூரி மாணவிகள்**

நெறியாள்கை – **திருமதி. நிலக்ஷி அன்ரனி** (நடன ஆசிரியை)


Digitized by Noolaham Foundation.



**வரவேற்புரை**

**திரு.மு. மகேந்திரராசா**

(விழாக்குழுத் துணைத்தலைவர்)



**அரங்க அறிமுகம்**

**திரு.து. நகுலேஸ்வரன்**


(விழாக்குழுச் செயலாளர்)



**கண்ணகி இலக்கிய விழாப் பட்டயம் வாசித்தல்**

**திருமதி. சுந்தரமதி வேதநாயகம்**

(துணைச்செயலாளர், கண்ணகி கலை இலக்கியக் கூடல்)



**தொடக்கவுரை**

**செங்கதிரோன் த. கோபாலகிருஷ்ணன்**

(தலைவர், கண்ணகி கலை இலக்கியக் கூடல்)



**தலைமையுரை**

**திரு.மா. தவராஜா**

(விழாக்குழுத் தலைவர்)



**கண்ணகி கலை இலக்கியக் கூடல்**


**செயற்பாட்டறிக்கை (2011–2017)**

**திரு.அ. அன்பழகன் குரூஸ்**


(செயலாளர், கண்ணகி கலை இலக்கியக் கூடல்)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



தொடக்க விழா காலை அமர்வு 1 இல் அவையோர்





நிகழ்ச்சித் தொகுப்பு
திருமதி. கயல்விழி வினோதரன்
(விழாக்குழு உறுப்பினர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## 'கூடல்' (பரல் - 06) விழா மலர் - 2017 வெளியீடு

- வெளியீட்டுரை : கதிரவன் த.இன்பராசா (தொகுப்பாசிரியர்)
- வெளியீடு : திரு. சி.சாமித்தம்பி (துணைத்தலைவர், கண்ணகி கலை இலக்கியக் கூடல்)
- அனுசரணை : சட்டத்தரணி கி.துரைராசசிங்கம்



'கூடல்' (பரல் – 6) விழாமலர் 2017 வெளியீடு

வெளியீடு : திரு.சி. சாமித்தம்பி (துணைத்தலைவர், கண்ணகி கலை இலக்கியக் கூடல்)




முதற்பிரதி பெறுநர்

தொழிலதிபர் சைவப்புரவலர்

வி. ரஞ்சிதமூர்த்தி

(பொருளாளர், மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கம்)



வெளியீட்டுரை

கதிரவன் த.இன்பராசா

(கூடல் தொகுப்பாசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடக்கவுரை



**செங்கதிரோன்.த.கோபாலகிருஸ்ணன்**
(தலைவர், கண்ணகி கலை இலக்கியக்கூடல்)

2017 செப்டம்பர் 3, 4 ஆம் திகதிகளில் மட்டக்களப்பு மாவட்டம், கிரானில் நடைபெற்ற ஏழாவது "கண்ணகி கலை இலக்கிய விழா - 2017" இன் முதல் நாள் கலை அமர்வு - 1 இல் "கூலவாணிகன் சாத்தனார்" அரங்கில் கண்ணகி கலை இலக்கியக் கூடல் தலைவர் செங்கதிரோன் த.கோபாலகிருஸ்ணன் அவர்கள் ஆற்றிய தொடக்கவுரை

முல்லையும் மருதமும் நெய்தலும் ஒன்றிணைந்த கோறளைப்பற்று தெற்குப் பிரதேச செயலாளர் பிரிவில் கிரானிலே நடைபெறுகின்ற ஏழாவது கண்ணகி கலை இலக்கிய விழாவான 'கண்ணகி கலை இலக்கிய விழா – 2017' இன் தொடக்க விழா அரங்கான கூலவாணிகன் சாத்தனார் அரங்கிற்குத் தலைமை வகிக்கின்ற விழாக்குழுத் தலைவரும் அதிபருமான மதிப்பிற்குரிய திரு மா.தவராஜா அவர்களே!

அரங்கை அணிசெய்கின்ற முதன்மை அதிதிகளே! சிறப்பு அதிதிகளே! அரங்க ஆற்றுகையாளர்களே! அவையில் நிறைந்திருக்கின்ற கண்ணகி கலை இலக்கிய ஆர்வலர்களே! எழுத்தாளர்களே! கலைஞர்களே! ஊடகவியலாளர்களே! ஊர்மக்களே! அனைவருக்கும் இனிய காலை வணக்கங்கள்.

திருமாமணி நங்கை வந்தாள் - எங்கள்
தேசந் தழைத்திட வந்தாள் - வந்தாள்

வஞ்சகமில்லாத வாழ்க்கை முறையையும் - விருந்திருக்க உண்ணாத வேளாண்மைத் தனத்தையும் - வந்தாரை வாஞ்சையோடு வரவேற்று வாழவைப்பதில் வற்றாத மனப்போக்கையும் – சாதிமதபேதமற்ற சமரச நோக்கையும் - சகோதரத்துவ உளப்பாங்கையும் உடைய கிழக்கிலங்கைத் தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டு அடையாளமாக விளங்கும் கண்ணகி கலாசாரத்தைப் பேணி வளர்த்தெடுக்கும் வகையிலும் - அப்பண்பாட்டிற்கு அடிநாதமாக விளங்கும் கண்ணகி கலை இலக்கியங்களை மக்கள் மயப்படுத்திப் பரவலாக்கும் வகையிலும் - கிழக்கிலங்கைத் தமிழ்ச்சமூகத்தை ஒரு குடும்பமாக ஒரு பண்பாட்டுத்தளத்தில் ஒன்றிணைத்து அதன் மூலம் அவர்களது சமூக, பொருளாதார, பண்பாடு, கல்வி, கலை, இலக்கிய, சூழல் பாதுகாப்பு மற்றும் ஆன்மீக மேம்பாட்டை நோக்கி அவர்களை அறிவுபூர்வமாக ஆற்றுப்படுத்தும் வகையிலும் முதலாவது கண்ணகி கலை இலக்கிய விழா 2011 இல் மட்டக்களப்பு நகரிலும், தொடர்ந்து இரண்டாவது விழா 2012இல் மட்டக்களபபு மாவட்டம் புதுக்குடியிருப்பிலும், மூன்றாவது விழா 2013இல் அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றிலும், நான்காவது





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விழா 2014இல் அம்பாறை மாவட்டம் தம்பிலுவிலிலும், ஐந்தாவது விழா 2015இல் மட்டக்களப்பு மாவட்டம் வந்தாறுமூலையிலும், ஆறாவது விழா 2016இல் மட்டக்களப்பு மாவட்டம் கன்னன்குடாவிலும் வருடந்தோறும் ஒழுங்காகவும் சிறப்பாகவும் நடைபெற்று வந்துள்ளது. இவ்விழாத் தொடரின் ஏழாவது விழா இவ்வருடம் மட்டக்களப்பு மாவட்டம் கிரானிலே தடம்பதித்துள்ளது.

எதிர்காலத்தில் இவ்விழாக்களை மட்டக்களப்பு மாநிலத்திற்கு வெளியே திருகோணமலை மாவட்டத்திற்கும் கிழக்கு மாகாணத்திற்கும் வெளியே வடமாகாணத்திலே வற்றாப்பளை போன்ற இடங்களுக்கும் காரியம் கைகூடுமானால் கடல் கடந்து தமிழ்நாட்டுக்கும் கண்ணகி முதன்முதலாக கோயில் கொண்ட இந்தியாவின் கேரள மாநிலத்திற்கும் எடுத்துச்செல்ல நாம் எண்ணம் கொண்டுள்ளோம்.

கண்ணகி கலை இலக்கியக் கூடலின் இயங்குதளம் சமூகம் ஆகும். சமூக மேம்பாட்டையும் மறுமலர்ச்சியையும் நோக்கிய ஒரு சமூக அசைவியக்கமாகவே கண்ணகி கலை இலக்கிய விழாக்கள் கட்டமைக்கப்படுகின்றன. யாழ்ப்பாணத்திற்குக் கந்தப்புராணகலாசாரம் என்பது போல் மட்டக்களப்பின் கலாசாரம் கண்ணகி கலாசாரமே என்பதையே கண்ணகி கலை இலக்கிய விழாக்கள் சுட்டி நிற்கின்றன.

கண்ணகி கலை இலக்கிய கூடல் 2011 இல் ஆரம்பித்து வைத்த பயணம் தொலைநோக்குடனானது. தூய்மையான இலக்கினையுடையது. இப் பயணம் நீண்ட நெடும் பயணமாகும். மக்கள் நலன் மட்டுமே இப் பயணத்தின் தாரக மந்திரம். எதிர்காலத்தில் வருடாந்த கலை இலக்கிய விழாக்களோடு மட்டும் நின்று விடாமல் - கலை இலக்கிய செயற்பாடுகளோடு மட்டும் முடங்கி விடாமல் கண்ணகி கலை இலக்கியக் கூடலை ஒரு பாரிய பண்பாட்டு நிறுவனமாகக் கட்டியெழுப்பி அதனூடாக சமூகம் நாடி நிற்கின்ற பலவிதமான வாழ்வியல் தேவைகளை நிறைவேற்றும் வகையில் சமூக சேவையிலும் ஈடுபடவுள்ளோம்.

இதற்குத் தேவையான வளங்களையும் அவை நிதி அன்பளிப்பாக இருக்கட்டும் அல்லது ஆரோக்கியமான ஆலோசனைகளாக இக்கட்டும் அல்லது உடல் உழைப்பாக இருக்கட்டும் அல்லது வேறு வடிவிலான ஒத்தாசையாக இருக்கட்டும் மகாகவி பாரதியாரின் கவிதை வரிகளிலே கூறப்போனால் நிதிமிகுந்தவர் பொற்குவைதாரீர்! நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்! அதுவுமற்றவர் வாய்சொல் அருளீர்! ஆண்மையாளர் உழைப்பினை நல்கியும் இப்பெருந் தொழில் நாட்டுவம் வாரீர்! என உங்கள் அனைவரிடமும் அன்பான வேண்டுகோள் விடுக்கிறேன். கண்ணகி கலை இலக்கியக் கூடலில் செயலாளர் திரு. அன்பழகன் குரூஸ் இன் வார்த்தைகளில் கூறுவதாயின் வாருங்கள்! கூடலில் கூடுவோம்! ஒரு குடும்பமாக ஒன்றிணைவோம்.

மேலும் எனது தொடக்கவுரையை நிறைவு செய்யுமுன் சில நன்றியறிதல்களை செய்ய வேண்டிய கடமைப்பாடு எனக்குண்டு.

i. பரீட்சைகள் ஆணையாளருடன் தொடர்பு கொண்டு விழாமண்டபத்தை ஏற்பாடு செய்து உதவிய திரு. ஞா. ஸ்ரீநேசன் பா.உ (தாய்ச் சங்க உறுப்பினர்) - மட்டக்களப்பு வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.கபாஸ்கரன் மற்றும் கல்குடா வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.தி.ரவி, அதிபர் திரு.ம.சிவசுந்தரம் அத்துடன் இதனைத் துரிதப்படுத்தத் தூண்டுகோலாக அமைந்த கதிரவன் த.இன்பராசா அவர்களுக்கும் கண்ணகி கலை இலக்கிய கூடலின் தலைவர் என்ற வகையில் எனது நன்றிகள்.

ii. இவ்விழாவை இத்தினத்தன்று சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள விழாக்குழுத் தலைவர், செயலாளர், துணைத்தலைவர், துணைச் செயலாளர், பொருளாளர் மற்றும் விழாக் குழு உறுப்பினர்கள், உபக் குழுக்களைச் சேர்ந்தவர்கள், இணைப்பாளர்கள், தொகுப்பாளர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

iii. விழா மலரான ''கூடல் - பரல் 6'' இற்கு கூடுதலான அனுசரனை வழங்கிய விழாக்குழு ஆலோசகரும்/ தாய்ச் சங்க உறுப்பினருமான, சட்டத்தரணி கி. துரைராணஜ சிங்கம் அவர்களுக்கும் கண்ணகி வழக்குரை மீள்பதிப்புக்கு முற்பணம் தந்துதவ முன் வந்துள்ள கண்ணகி அம்மன் ஆலயங்களின் பரிபாலன சபையினருக்கும் உளம் கனிந்த நன்றிகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iv. விருந்தோம்பல் பொறுப்பை ஏற்றுள்ள ஆலயங்களின் பரிபாலன சபையினருக்கும் தாய்ச் சங்கத்தின் நன்றிகள்.

v. இவ்விழாசிறப்புறப் பங்களித்த கல்குடாத் தொகுதி மக்களுக்கும் குறிப்பாக கோறளைப்பற்று மற்றும் கோறளைப்பற்று தெற்குப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஊர் மக்களின் உழைப்புக்கும் ஒத்தாசைக்கும் தலை வணங்குகின்றேன்.

## அன்பானவர்களே! வாருங்கள்!!

- கலை இலக்கியங்களினூடாகச் சமூக மாற்றத்தையும் மறுமலர்ச்சியையும் ஏற்படுத்துவோம்.
- கலை, இலக்கியங்களினூடாக மனித மனங்களைச் செழுமைப்படுத்தி மனித உறவுகளையும் மனித விழுமியங்களையும் கட்டியெழுப்புவோம்.
- கலை இலக்கியங்களினூடாகப் பொருளாதார வளங்களை மேம்படுத்துவோம்.
- கலை இலக்கியங்களினூடாக இயற்கை அனர்த்தங்களினாலும் யுத்தக் கொடுமைகளாலும் வாழ்வியல் துன்பங்களினாலும் நொந்து போய் உள்ள மனித மனங்களை ஆசுவாசப்படுத்துவோம்.
- கலை இலக்கியங்களினூடாகப் பண்பாட்டுத்தளமொன்றில் ஒன்றிணைவோம்.
- கலை இலக்கியங்களினூடாக அறிவார்ந்த சமூகமொன்றை நிர்மாணம் செய்வோம்.

*நன்றி! வணக்கம்!!*

*****



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தலைமையுரை




**மா. தவராஜா**
(விழாக்குழுத் தலைவர் / அதிபர், சந்திவெளி சித்திவிநாயகர் வித்தியாலயம்)

**"நீதியை நிலை நிறுத்தவே மதுரையை எரித்து தான் ஒரு பத்தினியே என சீற்றம் தணிந்து வந்தாறி அருள்பாலிக்கும் அன்னையின் பாதங்கள் பணிந்தவனாக..."**

எமது கிரான் பிரதேசத்தில் நடைபெறும் கண்ணகி கலை இலக்கியவிழாவிற்கு வருகை தந்திருக்கின்ற கண்ணகி கலை இலக்கிய கூடலின் தலைவராக இருந்து வழிநடாத்திக் கொண்டிருக்கின்ற செங்கதிரோன் த. கோபாலகிருஸ்ணன் ஐயா உட்பட வருகை தந்திருக்கின்ற அனைத்து பெரியோர்களுக்கும் பிரதேச மக்களுக்கும் பங்காளர்களுக்கும் எனது இனிய காலை வணக்கத்தை கண்ணகி கலை இலக்கியகூடல் கிரான் கிளை சார்பாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

கொட்டும் மழையாக இருந்தாலும் எமது பண்பாட்டுக்கு முன்னுரிமை வழங்கி உணர்வோடு இந் நிகழ்வில் பங்குகொள்ளும் உள்ளங்கள் அனைவரையும் தலைவணங்கி நிற்கின்றேன். மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பல தெய்வ வழிபாடுகள் காணப்படுகின்றன. இந்த வழிபாட்டு முறைகளிலே மிகவும் பிரதான இடத்தை வகிக்கும் வழிபாடு கண்ணகி அம்மன் வழிபாடாகவே காணப்படுகின்றது. வைகாசி மாதம் பிறந்துவிட்டால் கண்ணகியின் கதை கூறும் குளிர்த்தி பற்றியே கதைப்பது தொன்று தொட்டு எமது கிராமங்களில் காணப்படுவதொன்றாகும்.
மட்டக்களப்பு மாவட்டத்தில் பல ஊர்களில் கண்ணகி அம்மன் வழிபாடு சிறப்பாக நடைபெற்று வருகின்றது. அதனடிப்படையில் எமது பிரதேசத்தில் பெரிய கோராவளி கண்ணகி அம்மன் வழிபாடு நடைபெறுவது வழமை. இங்கு சித்தாண்டி, முறக்கொட்டான்சேனை, சந்திவெளி, கோரகல்லிமடு, கிரான், கிண்ணயடி, மீறாவோடை ஆகிய ஊர்ப்பந்தல்களோடு தாய்ப்பந்தல் எனும் ஓர் பந்தலும் அமைத்து ஏழு ஊரார்கள் சேர்ந்து கண்ணகி அம்மனுக்கு விழா எடுப்பது இப் பிதேசத்தின் சிறப்பாக இருப்பதைக் காணலாம்.

இவ்வாறு தாய் வழிபாடாகக் காணப்படுகின்ற கண்ணகி அம்மன் வழிபாட்டின் பெருமையை மேலும் மெருகூட்டும் வகையிலும் இளம் சந்ததியினருக்குக் கொண்டு செல்லும் வகையிலும் வருடா வருடம் கண்ணகி கலை இலக்கியக் கூடல் கண்ணகி கலை இலக்கிய விழாவினை பிரதேசங்கள் தோறும் நடாத்தி வருகின்றது. அதனடிப்படையில் இம்முறை எமது கிரான் பிரதேசத்தில் இவ்விழா நடைபெறுவதையிட்டு மிகவும் மகிழ்வடைகின்றோம். சந்திவெளி கிராமத்தில் இருந்து கண்ணகி சிலையினைக் காட்சிப் பொருளாக வடிவமைத்து ஊர்வலம் கொண்டு வந்த எமது அன்பு உறவுகளுக்கு விசேட பாராட்டைத் தெரிவிக்க வேண்டியுள்ளது. மேலும் சந்திவெளி, புலிபாய்ந்தகல் சந்தி, கறுவாக்கேணி போன்ற இடங்களில் இருந்து வந்த ஊர்வலங்கள் கிரான் சந்தியில் சங்கமித்து விழா நடைபெறும் இடத்திற்கு ஒன்று சேர்ந்தது இந்த விழாவிற்குப் பெருமை சேர்க்கிறது.



இந்த விழா சிறப்பாக நடைபெற ஒத்துழைத்த அனைவருக்கும் விசேட நன்றிகள் கூறுவதோடு இந்நிகழ்வு சிறப்பாக நேர்த்தியாக நடைபெற விநாயகரை வணங்கி விடைபெறுகின்றேன்.

*****


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கண்ணகி கலை இலக்கியக் கூடல்

# செயற்பாட்டறிக்கை (2011-2018)


**அ. அன்பழகன் குரூஸ்**
(செயலாளர், கண்ணகி கலை இலக்கியக் கூடல்)


### கண்ணகி கலை இலக்கியக் கூடலின் நோக்கங்கள் :

- கண்ணகி தொன்மங்கள் தொடர்பான கலை இலக்கியத் தேடல்களுக்கும், ஆய்வுகளுக்கும், செயற்பாடுகளுக்கும் களம் அமைத்துக் கண்ணகி கலை இலக்கியங்களை மக்களிடையே பரவலாக்குதல்.
- 2011 இன் தொடக்கவிழாவில் (2011.06.18) பிரகடனப்படுத்தப்பட்ட கண்ணகி இலக்கியவிழாப் பட்டயத்திற்கமைவாக வருடம் தோறும் 'கண்ணகி கலை இலக்கியவிழா' க்களை நடாத்துதல்.
- கண்ணகி தொடர்பான பாரம்பரியக் கலை இலக்கியங்களையும், பண்பாட்டு விழுமியங்களையும் அருகிவிடாமல் பேணிப்பாதுகாத்து வளர்த்தெடுத்தல்.
- கண்ணகி கலை இலக்கியச் செயற்பாடுகளினூடாகப் பண்பாட்டுத் தளத்தில் சமூகத்தை ஒன்றிணைத்து அவர்களைச் சமூக, பொருளாதார மேம்பாட்டை நோக்கி அறிவுபூர்வமாக ஆற்றுப்படுத்தல்.
- கண்ணகி கலை இலக்கியச் செயற்பாடுகளினூடாகப் புலமைசார் கல்விச் சமூகமொன்றினைக் கட்டிவளர்த்தல்.

### கண்ணகி கலை இலக்கியக் கூடலின் ஆரம்பம் : 06.04.2011

விழாப்பட்டய வெளியீடு - 18.06.2011 திருமதி கோமேதகவல்லி செல்லத்துரை (காரைதீவு) அவர்களால் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திரு. சுந்தரம் அருமைநாயகம் அவர்களிடம் கையளிக்கப்பெற்று மாவட்ட செயலக சுவடிகள் கூடத்தில் பேணப்பெற்றுவருகின்றது. **இதுவரை 07 புதுப்பிப்புக்கள்.**

### கண்ணகி கலை இலக்கிய விழாக்கள் :



| | | | |
|---|---|---|---|
| 1 வது விழா | - | 18, 19 ஜுன் | 2011 - மட்டக்களப்பு. |
| 2 வது விழா | - | 28, 29 ஜுலை | 2012 - புதுக்குடியிருப்பு. |
| 3 வது விழா | - | 15, 16 ஜுன் | 2013 - அக்கரைப்பற்று. (அம்பாறை) |
| 4 வது விழா | - | 01,02,93 ஆகஸ்ட் | 2014 - தம்பிலுவில் (அம்பாறை) |
| 5 வது விழா | - | 13, 14 ஜுன் | 2015 - வந்தாறுமூலை. |
| 6 வது விழா | - | 25, 26 ஜுன் | 2016 - கன்னன்குடா. |
| 7 வது விழா | - | 03, 04 செப்டெம்பர் | 2017 - கிரான். |
| 8 வது விழா | - | 06, 07, 08, 09 செப்டெம்பர் | 2018 - களுதாவளை. |

இதுவரை 19 நாட்கள் விழா நடைபெற்றுள்ளன.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

❖ இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழென 35 அரங்குகளில் நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. .

❖ 03 வெளியரங்குகளில். போர்த்தேங்காய் உடைத்தல், கொம்புமுறி நிகழ்த்தப்பட்டுள்ளன. (தம்பிலுவில், தேற்றாத்தீவு)

❖ களரிக்கூத்து - 01, "சிலம்புச் செல்வி" – கன்னன்குடா முத்தமிழ் மன்றத்தின் தென்மோடிக் கூத்து நிகழ்த்தப்பட்டது. (2016)

❖ பண்பாட்டுப் பவனி - 15 திசைமுக ஒருங்கிணைவுகளில், 08 ஊர்வலங்கள்.

❖ கண்ணகி கலையிலக்கியம் மற்றும் வழிபாடுகள் தொடர்பான ஆய்வரங்கங்கள் - 08 ஆய்வரங்குகள்.
 - 32 ஆய்வுக் கட்டுரைகள்.

❖ 07 பிரதான சொற்பொழிவுகள் -
 ஆறுதிருமுருகனின் 03 சொற்பொழிவுகள்.
 தமிழருவி சிவகுமாரனின் 01 சொற்பொழிவு.

❖ 05 சிறு சொற்பொழிவுகள்.

❖ கூடல் - 07 பரல்கள் வெளியீடும் ஆவணப்படுத்தலும்.

❖ 2011ல் முதலாவது கண்ணகி கலை விழாச் சிறப்பு மலராக "செங்கதிர்" (ஜூன் 2011) வெளியிடப்பட்டது.

❖ நூலங்காடிகள் - 08

❖ கண்காட்சிகள் - 08

❖ புகைப்படக் கண்காட்சிகள் - 03.

❖ வழக்காடு மன்றம் - 01 (2015) வந்தாறுமூலை - சட்டத்தரணி பாடும்மீன் ஸ்ரீகந்தராசா தலைமையில்.

❖ இலக்கியச் சமர் 01 (2016) கன்னன்குடா - சட்டத்தரணி பாடும்மீன் ஸ்ரீகந்தராசா தலைமையில்.

❖ பட்டிமன்றம் - 02. (2017) கிரான் - தமிழருவி சிவகுமாரனின் தலைமையில்.
 (2018) களுதாவளை - கதிரவன் த.இன்பராசா தலைமையில்.

❖ கண்ணகி கலையிலக்கியங்களை மக்கள் அறியும் வகையிலான அதிதியுரைகள்- 100க்கும்மேல்.

❖ இணைப்பாளர்கள் 40 - தொகுப்பாளர்கள் - 34

❖ 08 பிரதேச செயற்பாட்டுக்குழுக்கள்.
 46 மேற்பட்ட உப குழுக்கள்.

❖ தாய்குழு உறுப்பினர்கள் 62 பேரோடு 1500 தாண்டிய பேராளர்கள்
 இவர்களே எமது பொதுச்சபை.
 இவர்களது அங்கத்துவம் சான்றிதழ்களால் உறுதிப்படுத்தப்பெறுகின்றன.

❖ கண்ணகி கலை இலக்கிய முயற்சிகளை ஒன்றிணைக்க தேசிய ரீதியான ஒருங்கிணைப்பு.

❖ அடுத்த செயற்பாடாக சர்வதேச அளவிலான அடியெடுப்பு.

❖ அளவில்லாப் பணியாளர்களும், பார்வையாளர்களும்.

❖ 08 பண்பாடு மாறாத பகலுணவுப் பரிமாற்றங்கள். 33 உபசரணைகள்.
 பண்பாட்டுப் பவனிகளின்போது தாக சாந்திகளும் ஏராளம்.

❖ கண்ணகி வழக்குரை (மீள்பதிப்பு) - 1000 பிரதிகள்.

❖ கிரான் பெரிய கோராவளியம்மன் பாமாலை - வெளியீடு. ஆசிரியர் முத்துமாதவன்.

❖ சுடச் சுடரும் பொன் - ஆசிரியர் திருமதி பாக்கியரெத்தினம் ஆறுமுகம்.

❖ "வசந்தன் கவித்திரட்டு" நூல் தொகுப்பும் மீள்பதிப்பும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

- “நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்” – சட்டத்தரணி பாடும்மீன் ஸ்ரீகந்தராசா அவர்களின் ஒலிப்பேழை வெளியீடு இரண்டு தடவைகள்.
- www.kannakikoodal.com - இணையத்தளம்.

## கண்ணகி கலை இலக்கிய விழா தவிர்ந்த பிற செயற்பாடுகள்.

- **ஊர்திகள் -**
  - கி. மா. பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடாத்திய கிழக்கு மாகாண முத்தமிழ் விழாவில் கூடலின் பண்பாட்டு ஊர்தி பவனிவந்தது. (2016)
  - சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டுச் சபை நடாத்திய விபுலாநந்தரின் 125ம் ஆண்டு விழாவில் கூடலின் பண்பாட்டு ஊர்தி பவனிவந்தது.
  - நினைவேந்தல் நிகழ்வு 06.03.2016 - தாபக உறுப்பினரும், முன்னாள் பொருளாளரும், முன்னாள் துணைத்தலைவருமான அமரர் க. ஆறுமுகம் அவர்களுக்கான அஞ்சலி நிகழ்வு.
    உரை – “ஆறுமுகமும் நானும்” திரு.மா.சதாசிவம். “கூடல்” துணைத்தலைவர்.
  - **நூல் அறிமுக நிகழ்வு -**
    கோயிலூர் செல்வராஜனின் “ஊருக்குத் திரும்பணும்” சிறுகதைத் தொகுப்பு வெளியிட்டு வைக்கப்பட்டது.

**எம்மோடு பயணித்தவர்களில் காலமானாலும் காலங்கடந்து நெஞ்சிலிருப்பவர்கள்.**

- அமரர் க. ஆறுமுகம். -
  தாபக உறுப்பினரும், முன்னாள் பொருளாளரும், முன்னாள் துணைத்தலைவரும்.
- அமரர் மு.தவராஜா
  ஆரம்பகால உறுப்பினரும், செயற்பாட்டாளரும்.


*****


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அரங்கு"



அரங்க அறிமுகம்
இ. அச்சுதன்
(விழாக்குழு உறுப்பினர்)




தலைமையுரை
சட்டத்தரணி கி. துரைராசசிங்கம்
(ஆலோசகர், கண்ணகி கலை இலக்கிய விழா - 2017 / செயற்குழு உறுப்பினர், கண்ணகி கலை இலக்கியக் கூடல்)



நூல்வெளியீடு : 'கிரான் பெரிய கோராவெளி கண்ணகை அம்மன் பாமாலை' – 2ம் பாகம்
வெளியீடு : திரு.கா. இராச்சந்திரன் (செயற்குழு உறுப்பினர், கண்ணகி கலை இலக்கியக் கூடல்)
முதற்பிரதி பெறுநர் : திரு.ஆ. பன்னீர் (தொழிலதிபர்)




நூலாசிரியர் அறிமுகம்
திருமதி. ரூபி வலன்ரீனா பிரான்சிஸ்
(சிரேஸ்ட விரிவுரையாளர், மொழித்துறை, கிழக்குப்பல்கலைக்கழம்)



வெளியீட்டுரை
திரு கு.சுதாகரன்
(ஆசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நூல் வெளியீடு



நூலாசிரியர் ஏற்புரை

கறுவாக்கேணி முத்துமாதவன்



உரை

செல்வி. சப்தவி கிருபாகரன்

(மட்/வின்சன் மகளிர் உயர்தர பாடசாலை மாணவி)

**"சிலப்பதிகாரத்தின் பாத்திர வார்ப்புகள்"**



தொடக்க விழா காலை அமர்வு II இல் அவையோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நூல் வெளியீடு – 'சுடச் சுடரும் பொன்'

வெளியீடு : செ.எதிர்மன்னசிங்கம் (துணைக்காப்பாளர், கண்ணகி கலை இலக்கியக் கூடல்)



நூலாசிரியர் அறிமுகம்

திரு. வல்லிபுரம் சிவசுந்தரம்

(ஓய்வுநிலை ஆசிரியர்



வெளியீட்டுரை

சைவப்புலவர் திருமதி. சிவானந்தஜோதி ஞானசூரியம் எம்.ஏ



முதற்பிரதி பெறுநர்

திரு. கி. மகாதேவன்

(தலைவர், களுவாஞ்சிகுடி முருகன் கோயில்)



நூலாசிரியர் ஏற்புரை :

திருமதி. பாக்கியரெத்தினம் ஆறுமுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் : கிரான் பெரிய கோராவெளி கண்ணகை அம்மன் பாமாலை – 2ம் பாகம் – கறுவாக்கேணி முத்துமாதவன்

# நூலாசிரியர் அறிமுகவுரை







**திருமதி. ரூபி வலன்ரீனா பிரான்சிஸ்**

(சிரேஸ்ட விரிவுரையாளர், மொழித்துறை, கிழக்குப்பல்கலைக்கழகம்)


கலாபூஷணம் கறுவாக்கேணி முத்துமாதவன் சுமார் நான்கு தசாப்தங்களுக்கு மேலாக எழுதி வருபவர். எனது கணவரின் மிக நீண்டகால நண்பர். மட்டக்களப்பு எழுத்தாளர் வரிசையில் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் உடையவர். குறிப்பாக கோறளைப் பற்றுப் பிரதேசத்தின் இலக்கியத்திற்கு வளம் ஊட்டுபவர். 1970 களின் பிற்கூறில் இவர் எனக்கு அறிமுகமானார். 'சுடர்' சஞ்சிகையில் இக்குறிப்பிட்ட காலத்தில் அவர் பல ஆக்கங்களை எழுதியிருந்தார். அவரது எழுத்துக்களை நான் முதலில் 'சுடர்' மூலமே அறிந்தேன். இனவுணர்வும், தமிழ்ப்பற்றும் மிக்கனவாக அவரது ஆக்கங்கள் அமைந்திருந்தன.

இவ்விழாவில் அவரை அறிமுகம் செய்யக் கிடைத்தமையையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைவதுடன் அதற்கான வாய்ப்பை அளித்த விழாக் குழுவினருக்கு எனது நன்றியினையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கறுவாக்கேணி முத்துமாதவனின் இயற்பெயர் மகாதேவன். மூத்ததம்பி – சொர்ணம்மா தம்பதியினரின் மகனாக 1953இல் ஓட்டமாவடியில் இவர் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை ஓட்டமாவடி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலும் (தற்போதைய ஓட்டமாவடி மத்திய கல்லூரி), இடைநிலைக் கல்வியை மட்/ கறுவாக்கேணி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலும் (தற்போதைய கறுவாக்கேணி விக்னேஸ்வரா வித்தியாலயம்) பயின்றார். இவரது மனைவி பத்மாதேவி. இவர்களுக்கு ஐந்து பிள்ளைகள் உள்ளனர். தொழிற்பயிற்சி ஆசிரியராகப் பணிபுரிந்த இவர், 1975இல் எழுத்துலகில் அறிமுகமானார். கவிதை, சிறுகதை, உருவகக் கதை ஆகியவற்றைப் படைத்துள்ளார். சமயம் தொடர்பான பக்திப் பாமாலைகளையும் இயற்றி யுள்ளார். இவரது ஆக்கங்கள் பல இன வன்முறையில் இவரது வீடு எரிக்கப்பட்டபோது இழக்கப்பட்டமையை அறிய முடிகின்றது. இவரால் நூற்றுக்கும் மேற்பட்ட கவிதைகளை எழுதியுள்ளார். இவற்றுள் பெரும் பாலானவை சமூகப் பிரச்சினைகள், தமிழ்த்தேசியம் தொடர்பானவையே. உதாரணமாக: 'வாழப் பிறந்தவர்கள்'(சுதந்திரன் - 1979), 'விடுதலை'(சுடர் - 1980), 'சுதந்திரம்'(சுடர்: 1981), 'கிழக்கு வெளுக்குமா?' (வீரகேசரி: 1990) ஆகியவை தமிழ்த்தேசியம் தொடர்பான கவிதைகள். அதேபோல 'வறுமையும் புலமையும்'(மித்திரன்: 1980), 'ஏழையின் கண்ணீர்' (தினகரன்: 1991), 'ஒரு மழை நாளும் எனது கிராமமும்' (வீரகேசரி: 1985), 'நன்றும் தீதும்'(வீரகேசரி: 1981) ஆகியவை சமூகப் பிரச்சினைகளை மையமாகக் கொண்டவை. இவற்றைவிட பொங்கல், சித்திரைப் புத்தாண்டு முதலான சிறப்பு நாட்களில் அவ்வப்போது பத்திரிகைகளுக்கு தன் ஆக்கங்களை






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கியுமுள்ளார். 'புத்தாண்டே வருக' (தினகரன்: 1982), 'பொங்கலோ பொங்கல்' (வீரகேசரி: 1982) ஆகியன அத்தகையன.

சிறுகதைகளைப் பொறுத்தவரை அவை எழுதப்பட்ட சமகாலத்தில் எதிர்நோக்கப்பட்ட பிரச்சினைகளைக் கதைப் பொருளாகக் கொண்டமைந்துள்ளமையைக் காணலாம். யுத்த வன்முறை, சமூகச் சீர்கேடுகள், இயற்கை அனர்த்தங்கள் ஆகியவை சிறுகதைகளில் எடுத்தாளப்பட்டுள்ளன. 'வெள்ளைச் சட்டை', 'அம்மா', 'கண்ணீரிலே ஒரு கனகாம்பரம்' ஆகியன சமூகப் பிரச்சினைகளைப் பற்றிய கதைகளாகும். 'பதிவு', தாலிக்கொடி' ஆகியன யுத்த வன்முறையால் குடும்பங்கள் பாதிக்கப்படுவதைக் கூறுகின்றன. 'கடலும் அழிவும்' என்னும் கதை, ஆழிப்பேரலையினால் ஏற்பட்ட பாதிப்பைப் பற்றியது. இவரது பல சிறுகதைகள் பல்வேறு பரிசுகளையும் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். கோறளைப் பற்று பிரதேச கலாசாரப் பேரவை நடத்திய சிறுகதைப் போட்டியில் பல சந்தர்ப்பங்களில் முதற்பரிசினை இவர் பெற்றுள்ளார். 'வெள்ளைச் சட்டை'(1987), 'பதிவு' (1999), 'கடலும் அழிவும்' (2005) ஆகியவற்றை உதரணங்களாகக் குறிப்பிட முடியும். 'மௌனிக்காத மரணங்கள்' என்னும் சிறுகதை, 2000இல் 'தொண்டன்' சஞ்சிகை நடத்திய போட்டியில் முதலிடம் பெற்றது. 'அம்மா' என்னும் சிறுகதை, 1990இல் நோர்வே தமிழ்ச்சங்கம் நடத்திய போட்டியில் ஆறாம் இடத்தினைப் பெற்றது. இவரது சில சிறுகதைகள் அடங்கிய தொகுதி 'வேரும் விழுதுகளும்' என்னும் தொகுப்பாக வெளிவர விருப்பதாக அறிய முடிகின்றது.

இவர் அவ்வப்போது நகைச்சுவைக் குறுங்கதைகளையும் எழுதிவருகின்றார். 'நவீன ஹோட்டலில் நடந்த நாட்டுக் கூத்து' (வீரசேகரி: 1996), 'அன்னம்மாவும் ஆறுமுகத்தாரும்' (வீரசேகரி: 1996), 'வைரமுத்தரும் பாணிச்சேவலும்' (வீரகேசரி: 2005) ஆகியன அவற்றுள் குறிப்பிடத்தக்கன. எளிமையான மொழி நடை, விறுவிறுப்பான கதைப் போக்கு, ஓசை நயத்துடனான மொழிப் பயன்பாடு ஆகியவற்றை இவற்றிற் காணலாம். அத்துடன் 'அணைகடந்த வெள்ளம்' முதலான உருவகக் கதைகளும் இவரால் எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர் சங்க வெளியீடான 'கிழக்கொளி' என்னும் சஞ்சிகையில் 1990களில் 'மெழுகுவர்த்தி எரிகின்றது' என்னும் கதையினைத் தொடராக அவர் எழுதினார். நாவலாக அதனை நூலுருப் பெறச் செய்ய வேண்டியது அவசியமாகும்.

இவற்றைவிட 'கோராவெளி அம்மன் பாமாலை', 'கறுவாக்கேணி முத்துமாரியம்மன் பொன்னூஞ்சல்', 'கறுவாக்கேணி முத்துமாரியம்மன் பாமாலை', 'முத்தமிழ் முருகன் பாமாலை' முதலிய பக்திப் பாடல்களையும் இவர் இயற்றியுள்ளார். 'சித்தாண்டி சித்திரவேலாயுத சுவாமி' என்னும் தலைப்பிலான இவரது ஆய்வுக் கட்டுரை, பேராசிரியர் சி. பத்மநாதனால் வெளியிடப்பட்ட 'கிழக்கிலங்கை இந்துக் கோயில் வரலாறு' என்னும் நூலில் இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இறுதியாக அவரது கவிதை ஒன்றுடன் இவ்வறிமுகவுரையினை நிறைவு செய்ய விரும்புகின்றேன். பல்வேறு கவிஞர்களும் கவிதைகளின் பொருள் எவ்வாறு இருக்க வேண்டும், அவை எவ்வாறு எழுதப்பட வேண்டும் என்பன போன்ற விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார்கள். பாரதியும் எளிமையான வகையிலும் யாவரும் விரும்பக் கூடிய வகையிலும் எழுத வேண்டும் எனக் குறிப்பிட்டான். முத்துமாதவனின் இக்கவிதையிலும் புலவர்களை நோக்கிய வேண்டுகோள் முன்வைக்கப்பட்டிருக்கின்றது. இக்கவிதை பல விடயங்களைப் பேசியுள்ளது. தமிழரின் அவலம் நிறைந்த வாழ்க்கை, சிறுவர்களைத் துஷ்பிரயோகம் செய்தல், போதைக்கு அடிமையாதல், சிறை வாழ்க்கை என பல குறிப்பிட்ட விடயங்களை வெளிப்படுத்தி படைப்பாளியின் பொறுப்பினைச் சுட்டிக்காட்டியுள்ளது.

*****


Digitized by Noolaham Foundation.



நூல் : கிரான் பெரிய கோராவெளி கண்ணகை அம்மன் பாமாலை – 2ம் பாகம்



# வெளியீட்டுரை

**திரு. கு. சுதாகரன்**
ஆசிரியர்

கண்ணகி கலை இலக்கிய கூடலில் இதயங்களைப் பறிகொடுத்து, இலக்கிய மணம் வீசும் இந்த இனிமையான அரங்கிலே அமர்ந்திருக்கின்ற இலக்கிய அபிமானிகள் அனைவர்க்கும் அன்பின் பணிவு.


கலாபுஷணம் கறுவாக்கேணி முத்துமாதவனின் கருவில் உருவான இந்த "கண்ணகை அம்மன்பாமாலை" என்னும் நூல் எளிமையான இனிமையான சொற்கோவைகளின் மாளிகையாக விளங்குவதைக் காணமுடிகிறது. ஒவ்வொரு வரியும் எதுகை மோனையுடன் படிப்பவர்களுக்கு எளிதில் விளங்கும் வண்ணம் அழகுற மிளிர்கிறது. இது சிறு பாடலாக இருந்தாலும் கண்ணகியாளின் கதையினை பாடலிலே சொல்கிற பாங்கு வியக்கவைக்கிறது. கிராமங்களின் வளத்தை வர்ணிக்கும் விதம் மெச்சத் தகுந்ததாக இருக்கிறது.

விளை நிலங்களை அவர் மிகச்சிறப்பித்திருப்பது கிராமிய அழகிற்கு மெருகூட்டுவதாக அமைந்துள்ளது. இலக்கியரசனையும், எழுத்தாற்றலுமிக்க கவிஞர் இந்நூலின் மூலம் தன்னை அடையாளப்படுத்தியிருக்கிறார். தமிழ் கூறும் நல்லுலகம் இந்நூலின் சிறப்பறிந்து அவருக்கு வாழ்த்துக் கூறுவது வரவேற்கத்தக்கதாகும். அவர் இது போன்ற இனிய கவிதை நூல்களை தர வேண்டும் எனக் கூறி, பேராளர் மத்தியிலே இந்நூலுக்கான விமர்சனம் செய்யும் பாக்கியம் கிடைத்தமைக்காக இறைவனுக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

*****




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நூல் : கிரான் பெரிய கோராவெளி கண்ணகை அம்மன் பாமாலை – 2ம் பாகம்



# ஏற்புரை

**கலாபூஷணம் முத்துமாதவன்**
கறுவாக்கேணி

**கி**ழக்கின் செழிப்பிற்கு அழகும், ஆத்மீக உணர்வும், இலக்கிய நயமும் வழங்குகின்ற கண்ணகி கலை இலக்கிய கூடலின் ஏழாவது விழா மாபெரும் முத்தமிழ் விழாவாக முகிழ்ந்துள்ள இவ்வேளையிலே கிரான் மகாவித்தியாலய அரங்கிலே எனது கண்ணகை அம்மன் பாமாலையினை அலசி ஆய்ந்து, அழகுற அறிமுக உரையை தனக்கே உரித்தான மிடுக்குடன் இனிமையான குரலில், தமிழ்ச் சுவையுடன் நிகழ்த்திய கிழக்குப்பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி.ரூபி வலன்ரீனா பிரான்சிஸ் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புத்தகத்தின் எழுத்துக்களைவிட, அவர் கூறிய வார்த்தைகளில் மிளிர்ந்த தொனி, மிக நன்றாக இருந்தது. கிழக்கிலங்கையென்னும் தமிழ் கூறும் நிலத்திலே கண்ணகி கலை இலக்கிய கூடல் அமைப்பினர், குறிப்பாக செங்கதிரோன் திரு. தம்பியப்பா கோபாலகிருஷ்ணன் அவர்கள் சிரமங்களைத் தாங்கியபடி பல பெரியார்களின் பெயர்கள் தாங்கிய மகுடங்களின் விழாக்களை நடாத்தி வெற்றி காண்பது என்பது பெரும் சாதனையானது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

கண்ணகியாள் பாமாலை, கிரான் கிராமத்தின் எழிலையும், கோரா வெளி கிராமம் அதனை அண்டிய கிராமங்களினதும் இயற்கை அழகினையும், விளை நிலங்களின் மேன்மையினையும், மக்களது வாழ்வியலையும் கிராமிய மணம் கமழும் வகையில் தருகிறது. வெளியீட்டுரையினை மகிழ்வோடு செவியேற்ற அனைவர்க்கும் நன்றி கூறி எனது ஏற்புரையினை நிறைவு செய்கின்றேன். நன்றி வணக்கம்.

வாழ்க தமிழ், வளர்க கண்ணகி கலை இலக்கியக் கூடல்.

*****





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 'சிலப்பதிகாரத்தின் பாத்திர வார்ப்புகள்'

# உரை




**செல்வி. சப்தவி கிருபாகரன்**
(மட்/ வின்சன்ட் மகளிர் உயர்தர பாடசாலை)

இங்கு வந்திருக்கும் அனைவருக்கும் வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு, கண்ணகி கலை இலக்கிய விழாக்குழுவால் அழைக்கப்பட்டிருக்கும் முதன்மை அதிதிகளுக்கும், சிறப்பு அதிதிகளுக்கும் இவ்விழாவை தலைமை தாங்கி சிறப்பிக்கும், பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இணைப்பாளருக்கும், காப்பாளர்களுக்கும் செயற்குழு உறுப்பினர்களுக்கும், தொகுப்பாளர்களுக்கும் இக்கண்ணகி விழாவைச் சிறப்பிக்க நல்ல பல விடயங்களை எடுத்துரைக்க வந்திருக்கும், திறன்சார் பெரியார்களுக்கும் இக்கருத்துக்களை கேட்டு மகிழ வந்திருக்கும் அவையோருக்கும் எனது பேச்சை செப்பனிட்டு வழங்கிய எனது தமிழ் ஆசிரியை செல்வி. சுப்ரமணி அம்மணி அவர்களுக்கும் இக்கணம் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

பட்டவனம் பால்வடிக்க, பச்சை மயில் தான் நடிக்க, ஒட்டமன பொதிகையிலே ஊண் எடுத்து உயிர் வளர்த்து கற்றுணர்ந்த பாவலர்தம், கைகளிலே விளையாடி முற்றுணர்ந்த ஞானியர்தம் மூச்சாகி, பேச்சாகி ஒற்றுமர வெற்றிகண்ட கொற்றவர்க்கு பின் என்னைப் பற்றி வரும் பூந்தமிழே, உன்பாதத்தை வணங்குகின்றேன்.

நான் இன்று தங்கள் முன் பேசலாம் என எடுத்துக்கொண்ட விடயம், சிலப்பதிகாரத்தின் பாத்திர வார்ப்புக்கள் ஆகும்.
மண்ணில் பிறந்த மானுடரின் வாழ்வைச் செம்மைப்படுத்த நம் தமிழில் சீரிய இலக்கியங்களோ ஏராளம். அவற்றுள் தலையாய ஐம்பெரும்காப்பியங்கள். அவற்றுள் தமிழணங்கை ஆராதிக்கும் சிலப்பதிகாரமே சிந்தையைத் தூண்டும் சீரிய காவியமாகும்.

**"பெண்ணிற் பெருந்தக்க யாவுள - கற்பெனும்**
**திண்மை உண்டாகப் பெறின்."**



இது வள்ளுவ தாத்தாவின் வாய்மொழி. இக்குறளிற்கு இந்த ஒன்றே முக்கால் அடிக்கு – ஏழு சொற்களைக் கொண்ட குறளிற்கு ஒரே சொல்லில் பொருள் சொல்வதானால் கண்ணகி என்றுரைத்தாலே போதும். கற்பு நிலை தவறாமல் வாழும் பெண்ணிற்கு முன்னே உலகின் எந்தவொரு சக்தியாலும் வெற்றி பெறமுடியாது. இதற்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டு கண்ணகிதான். கண்ணகி மட்டும் தான்!!

இங்கே கற்பின் செல்வியாய் சிலப்பதிகாரத்தில் சிறந்து விளங்கும் பாத்திரம் கண்ணகியே! சிந்தையில் தென்றல் - செயலில் குளிர் நீர் என அமைதியாக வாழ்ந்தவள் அவள்.

மாசாந்துவான் என்ற வணிகனின் மருமகள். பூம்புகாரில் பிறந்த பொற்குவை, சுருங்கச் சொன்னால் பரா சக்தியின் மறுவடிவம், அந்த


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஆரணங்கைப் பூரணப்படுத்த வந்தவன்தான் கோவலன்.

திரை கடலோடித் திரவியந் தேடும் வணிகன், அவன் சோர்விலான் சொல்லிற் கர விலான், செயலிற் தளர் விலான், சேர்ந்தார்க்குச் சுமையிலான், நீதிக்கு தலை வணங்கிய நிலாமகன், கண்ணகிக்குத் துணைநின்ற காவலன், மாரிபோல் மனதுடையான், மங்கலச் சொல்லுடையான் மாசற்ற மனிதனவன் - கண்ணகிக்கு மன்னன்.

இயல்பிலேயே நல்லவனான கோவலன் எப்படி மாறினான் என்று சிலப்பதிகாரம் காட்டுவதைக் காண்போம் வாருங்கள்.

இல்லறம் கண்ட இளஞ்சிட்டுகள் வண்ணமாய் வானில் சிறகடித்துப் பறந்த எண்ணத்தில் மண் விழுந்தது. இல்லை, இல்லை, ஊழின் வலி ஊடறுத்து வந்தது.

**''ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று**
**சூழினும் தான் முந்துறும்''**

என்ற குறளின் பொருளாக, (கோவலன் வாழ்வில் கேவலனானான்) யாழிசைத்துப் பரதமாடும் பரத்தையர் குலத்திற் பிறந்த ஏழிசை கலந்த ஏந்திழையாள் மாதவி. ஊழின் வலி அவள் வடிவில் உட்புகுந்தது. கள்ளில் வீழ்ந்த வண்டானான் கோவலன்.

சிலப்பதிகாரத்தின் சீரிய அழகுப் பாத்திரமான மாதவி எவ்வாறு இங்கு இளங்கோவடிகளால் காட்டப்படுகின்றாள் என்பதை பாருங்கள். நீள்கூந்தல், நிலா முகம், கயலொத்த கண்ணழகு. கொவ்வை நிகர்ச்செவ்வாய், முத்துப்பல்வரிசை, எடுப்பான நாசி, ஆழ்கடலின் சங்கொத்த நீள்கழுத்து, ஆரவளர தடம்புரட்டும் மார்பழகு, மெல்லிடை – மெதுநடை – புன்னகை இதற்குள் புதைந்து போனான் கோவலன்.

மாதவியோ மாசற்ற பெண். மனதாலும் பிறரை தீண்டாத கற்புடைப்பெண் அவள். நாட்டியம் அவளது தொழில். ஆடவரைத் தீண்டி வாழும் பெண்களே அவளது உறவுகள். ஆனாலும் மாதவியோ சேற்றில் முளைத்த செந்தாமரை. செகத்தில் அவள் கோவலனுக்கு மட்டுமே சேர்த்தி. பாவம் செய்தறியா பாவை. கண்ணகி மணாளனைக் கவர்ந்ததால் பெரும்பாவியானாள்!

தன் கணவன் வேறொருத்தி சுகம்தேடிச் சென்றதை அறிந்தும் சகித்தவள் கண்ணகி. எதையும் சகிப்பாள் ஒருபெண், இதை மட்டும் ஒருபோதும் சகிக்க எண்ணாள். நீதி கேட்டு, நாலுபேரைக் கூட்டி வைத்து, நீயா, நானா என்று, சக்களத்தி போர் செய்யும் உலகத்தில் ஊமையைப் போல் பேசாதிருந்தால் கண்ணகி. "தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசார்ந்த சொற்காத்து சோர்விலாள் பெண்" என்ற பெருமைக்குரியவள் கண்ணகி.

ஒரு கணம் அவள் சினந்து எழுந்திருப்பின் மாதவிப் பெண் நாணிச்செத்திருப்பாள். கோவலனே காடேகிக் காணாமல் போயிருப்பான். மதுரையும் தப்பிப், பாண்டியனும் பிழைத்திருப்பான்.

ஊழின் வலி சும்மாவா? ஒன்றுடன் ஒன்றை பின்னிய பெருவடமல்லவா அது!

கள்ளில் விழுந்த வண்டான கோவலன் மீண்டான். உண்டு களித்து, உறங்கித்தெளிந்து, வெளிவந்தது போல கோவலன் மீண்டான். மாதவியை இனி தீண்டேன் என்று சபதங்கொண்டான்.

கோவலன் வரவை தோழியர் கூற கேட்ட கண்ணகி "பீடு அன்று" எனக்கூறி, வேறேதும் உரைத்திலாள்.

பொன்னிழந்து, பொழிவிழந்து உன்னிடத்தில் வந்துள்ளேன் என்னை மன்னித்து விடு, என கெஞ்சிய கோவலனுக்கு "போற்றா ஒழுக்கம் புரிந்தீர்" என்று மட்டும் பதிலளித்தாள். எடுத்தெறிந்து பேசவில்லை "புதுவாழ்க்கை தொடங்குவோம்" என்ற கோவனுக்கு "சிலம்புளக்கொள்க" என்றாள் கண்ணகி. வேறேதும் செப்பினாளில்லை.

கோவலன் பிரிவால் மாதவி துடித்தாள். ஆற்றாது அனுப்பினாள் தூது. தன் கூந்தலில் ஓர் முடி கழற்றி ஓலைச் சுவடியில் சுற்றி அனுப்பினாள். என் கூந்தலை நினை, என் குளிர்முகம் தேடிவா தேன் சுவை தருவேன் என்பதற்கு அடையாளமே அந்த முடி!


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தூது கண்ட கோவலன் இனி பூம்புகாரில் வாழ்வது கடினமென்று பொன்பொருள் தேட மதுரை செல்வோம் என புதுமண தம்பதிகளாய்ப் புறப்பட்டனர். கோவனும் கண்ணகியும் மதுரையில் மனைகண்டு, குடியிருந்த ஒருநாளில் சிலம்பை விற்கச் சென்ற கோவலன் - அரச காவலரால் சிரம் கொய்யப்பட்டான்.

முற்பிறப்பில் "சங்கமன்" என்ற பொற்கொல்லனை ஒற்றன் உளவாளி எனப் பொய் கூறி அவன் தலை கொய்யப்பட காரணமாயிருந்தவனே இக் கோவலன். இப்பிறப்பில் அவன் இனத்தவன் ஒருவனால் கள்ளன் என்று பொய்யுரைக்கப்பட்டு அரச கட்டளைப்படி சிரமிழந்து போனான்.

செய்தி கண்ணகியின் காதுகளுக்கு எட்டியது. தென்றலாய் வாழ்ந்தவள் புயலாய் மாறினாள் கடல் இல்லா மதுரையில் கடல் கோள் வந்தது போல் ஆவேசம் கொண்டு கண்களில் தீச்சுடர் காட்டினாள் தலைமுடி கலைந்தது. தன்னிலை மறந்தாள்.

மதங் கொண்ட யானையாய் மதுரை வீதியே அதிரும்படி நடந்தாள். கையில் ஒற்றைச் சிலம்பேந்தி என் கணவனோ கள்வன் அல்லன், அல்லன் என்று கதறியபடி பாண்டியன் அரண்மனை அடைந்தாள். தடுத்து நின்ற வாயிற் காவலனிடம் எடுத்துச் சொல் என் வரவை என்று இரைந்தாள். அனுமதி கிடைத்ததும் ஆழிப் பேரலையாய் உள்ளே புகுந்தாள்.

"நீர் வார் கண்ணாய் எம்முன் வந்தோய் யாரையோ நீ மடக் கொடியோய்" என்று கண்ணகியிடம் வினாவிய அரசனிற்கு "என் காற்சிலம்பு பகர்தல் வேண்டி உன்னால் கொலை செய்யப்பட்ட கோவலன் மனைவி கண்ணகி என்பது என் பெயரே" எனப் பதில் கூறினாள்.

பாண்டியன் சிந்தித்தான். சிலம்பினை உடைத்தான். உண்மை தெரிந்தது. "ஐயகோ! உன் கணவன் கள்வன் அல்லன். பொன் செய் கொல்லன் பொய்யுரை கேட்டு பிழையான தீர்ப்பு வழங்கிய நானே கள்வன்" என வருந்தினான்.

இதற்குப் பின்னும் செங்கோலா? என முழங்கினாள் கண்ணகி. செங்கோல் நிலம் வீழ்ந்தது. இதற்குப் பிறகும் உனக்கு ஒரு சிம்மாசனமா? எனக் குமுறினாள் அவள். சிம்மாசனம் முன் புறமாய் கவிழ்ந்தது.

அடியற்ற மரமான பாண்டியன் அக்கணமே நிலம் வீழ்ந்து உயிர் துறந்தான். அவனுடன் பாண்டியன் தேவியும் உயிர் பிரிந்தாள். சீற்றம் கொண்டிருந்த கண்ணகிக்கு துணையாக அக்கினி எழுந்தது. அது மதுரை மாநகரம் முழுவதையும் எரிக்கத் துடித்தது. தடுத்தாள் கண்ணகி. மறுத்தது அக்கினி. கண்ணகியின் கட்டளைப்படி "பார்ப்பனர் அறவோர் பசு பத்தினிப் பெண்டிர் மூத்தோர் குழவி எனும் இவரைக் கைவிட்டு தீ திறந்தார் பக்கமே சேர்!!" என்ற கட்டளைப்படி அடுத்த கணமே மாநகரம் எரியத் தொடங்கியது.

**"அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்"**
**"உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏற்றுவர்"**
**"ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்"**

எனும் கோட்பாடுகளை சிலப்பதிகாரத்தின் பாத்திரவார்ப்புகள் மூலம் உலகிற்கு எடுத்துரைத்த இளங்கோவடிகளின் திருநாமம் என்றும் வாழ்க வாழ்க எனக் கூறி எனது பேச்சினை நிறைவு செய்யும் முகமாக ஈழத் திருநாட்டின் வைகாசித் திங்கள் அவளிற்குரிய நாள் ஆகும்.

இத்திருநாட்டில் இச் சேவையைப் பரப்பும் நோக்குடன் முன்னேடுக்கப்பட்டிருக்கும் இச்சேவைக்கு என் சிரம் தாழ்த்தி நன்றி.

சிறியோனாகிய என் பேச்சில் சொற்பிழை பொருட்பிழை இருப்பின் அதை மன்னிக்குமாறு கூறி விடை பெறுகின்றேன்.

*****


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நூல் : 'சுடச்சுடரும் பொன்' –
திருமதி.பாக்கியரெத்தினம் ஆறுமுகம்

# நூலாசிரியர் அறிமுகம்




**வல்லிபுரம் சிவசுந்தரம்**
(ஓய்வுநிலை ஆசிரியர்)


அறம் கூறும் அவையின் மாண்புமிகு தலைவர், பேராளர்கள், அனைவருக்கும் அன்பும் பணிவும். கிழக்கிலங்கையில் தமிழும், சைவப் பண்பாட்டினதும் உறைவிடம். பாலுக்கும், தயிருக்கும் பேர் போனது. பரந்தாமன் அருளையும், பாரதப் போர் நிகழ்வையும் நினைவுறுத்தும் திருப்பதி திருப்பழுகாமம். இங்கு வாழ்ந்த புகழ் பூத்த குமாரசுவாமி தோம்புதோரின் மூத்த புத்திரியே திருமதி பாக்கியரெத்தினம் ஆசிரியை ஆவார். இன்று அவுஸ்ரேலியாவை வதிவிடமாகக் கொண்டவர். இவரது சகோதரர்கள் அரசாங்க கணக்காளர், நிருவாக உத்தியோகத்தர், பட்டயக் கணக்காளர், விஞ்ஞான பட்டதாரிகள், இந்த அம்மணி களுவாஞ்சிகுடியைச் சேர்ந்த திரு ஆறுமுகம் ஆசிரியரை மணந்து மூன்று புதல்வர்களையும், இரண்டு புதல்விகளையும் பெற்று பெருமை சேர்த்துக் கொண்டிருக்கிறார். இவரது கணவனார் தமிழ் இலக்கண, இலக்கிய நாடகத்துறையில் புகழ் பெற்றவர். அதிபராக ஓய்வு பெறும் வரைக்கும் ஆற்றுக்கு அக்கரையில் நாடகங்களைப் படைத்து நாடக இலக்கியங்களை வளர்த்தவர். இவர் வாசிக்காத பிரபல்யமான நாவல்கள் இல்லை என்றே சொல்லலாம். வாசிப்பு ஒரு மனிதனைப் பூரணமாக்குவது மாதிரி மாணவர் சமூதாயத்தைப் பூரண அறிவில் ஆழ்த்தியவர். அம்மணி அவர்களோ அக்கரையில் பரதக் கலைக்கு அத்திவாரம் இட்டவர். இன்று இவரால் எம்முன் படைத்து அளிக்கப்பட்ட "சுடச்சுடரும் பொன்" என்ற படைப்பின் மூல நாயகி கண்ணகி முப்பெரும் நாட்டிற்குச் சொந்தமானவர். அதே போல் இவரின் புத்திரர்களான வேல்மாறன், திருமாவளன், இளந்திரயன், புதல்விகளான சுதமதி, பூங்கோதை, ஆகிய ஐவருமே சேர, சோழ பாண்டிய பேரரசின் பெயர்களைத் தாங்கி நிற்பது கூட இந்நூலுக்கு மேலும் ஒரு சிறப்பம்சமாகும்.



முதல் மகன் வேல்மாறன் அவுஸ்ரேலியாவில் முகாமைத்துவ பொறியியலாளராவார். இரண்டாவது மகன் திருமாவளன் சிங்கப்பூர் பல்கலைக்கழகத்திலே வைத்திய விஞ்ஞானியும் பேராசிரியருமாவார். மூன்றாவது மகன் இளந்திரையன் அவுஸ்ரேலியாவில் திரைப்பட இயக்குனர், மூத்தமகள் சுதமதி ஆங்கில பட்டதாரி, இவரது கணவனான திரு தமிழரசன் அவுஸ்ரேலிய சிட்னி நீதிமன்றத்தில் புகழ் பூத்த பரிஸ்டர் ஆவார். இரண்டாவது மகள் பூங்கோதை பட்டயக் கணக்காளர், இவரது கணவர் இலண்டன் மாநகரில் தகவல் தொழிநுட்ப பணிப்பாளர், பேரப்பிப்பிள்ளைகள் அனைவருமே அவுஸ்ரேலிய பல்கலைக்கழகத்தில் வைத்திய, பொறியியல் மாணவர்கள்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நமது கதாநாயகி முப்பத்துமூன்று வயதில் இருந்தே அறநெறிப் பாடசாலையில் பகவான் சத்திய சாயி பாவா சங்கங்களில் இராமகிஷ்ண மிஷன்களில் தனது சேவையினைச் செய்துள்ளார். தற்போது பகவான் சத்தியசாயி பாவா கல்விக் கொள்கையை கிராம மக்களிடையே வளர்ச்சியடையச் செய்யும் நோக்கிலே களிமடு என்னும் இடத்தில் தன் சொந்த செலவிலே ஒரு பாலர் பாடசாலையை அமைத்து அறிவுக் கண்ணைத் திறந்துள்ளார். இலங்கை இந்திய தத்துவஞானிகள் மத்தியிலே இந்துமத உள்ளார்ந்த தத்துவங்களை அழகு தமிழில் ஆற்றொழுக்காய் சொற்சுவையோடு பொருட்சுவை கலந்து பிரசங்கம் செய்துகொண்டிருப்பவர் இவர். ஆழமான ஆன்மீக தத்துவங்களை வெளிக்கொண்டுவரும் முகமாக இவரால் படைக்கப்பட்ட நூல்களில் ஒரு சிலவற்றையாவது இவ்விடத்தில் வெளிக்கொணர்வது காலத்தின் கட்டாயம்.

**01. ஆன்மீக வாழ்வு**

**02. முருகப் பெருமானின் சிறப்பும் ஆன்மீக சிந்தனையும்**

**03. அன்பு மனங்கள் என்றுமே பிரிவதில்லை**

**04. சிங்காரக் கண்டியில் திருப்பழுகாமம்**

**05. முருகன் மீது பக்திப்பாடல்கள்**

**06. திருப்பள்ளியெழுச்சியும், திருப்பொன்னூஞ்சல் பாடல்களும்**

பல நூல்களைப் படைத்தது மாத்திரமல்லாமல் பாடலுக்கு மெட்டும் தானே அமைத்து அனைவரையும் தன்பால் ஈர்க்கும் ஒரு சிறந்த படைப்பாளி. விளம்பரத்தை விரும்பாத ஒரு படைப்பாளி, பல மேடைகளில் பட்டங்கள், பொன்முடிச்சுகள், வழங்கப்பட்டும் எதையுமே பெற்றுக் கொள்ளாது அவ்விடத்திலே விட்டு வரும் போக்கு இவரின் தன்னலமற்ற சேவைக்குக் கட்டியம் கூறி நிற்கின்றது. இவ்வளவு பல்துறை ஆற்றல் நிறைந்த திருமதி ஆறுமுகம் பாக்கியரெத்தினத்தின் இந்நூலுக்கு அறிமுக உரை வழங்க கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு சிறியேன் அகமகிழ்கிறேன். இதற்குக் களம் அமைத்து தந்த தலைவர், உட்பட அத்தனை சான்றோர்களையும் தலை வணங்கி இவ்வுரையை நிறைவு செய்கிறேன்.

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் : 'சுடச்சுடரும் பொன்'

# வெளியீட்டுரை



**சைவப்புலவர் ,சைவசித்தாந்த பண்டிதர்,**
**சைவசித்தாந்த முதுகலைமாணி.**
**திருமதி. சிவானந்தஜோதி ஞானசூரியம். எம்.ஏ**

ஒரு புலவர் அல்லது கவிஞர், நூலாசிரியர் இவ்வுலகிற்கு ஒரு ஆக்கத்தைத் தருகின்றார்கள் என்றால் அவர்கள் காலத்தைக் கழிப்பதற்காகவோ, தன் சுயநலத்திற்காகவோ எந்தப் படைப்பையும் ஆக்கவில்லை. மானிட சமுதாயத்தை ஆற்றுப்படுத்தும் நோக்கத்தோடுதான் படைப்புக்கள் ஆக்கப்பட்டுள்ளன. அவர்கள் தம்மைக் கொடுத்து உலகை வாழவைத்தவர்கள். அந்த வகையில் ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரம் தமிழ்மொழிக்கு காவல் நிற்கின்றது.

இதற்கு உதாரணமாக ஆசிரியர் திருமதி. பாக்கியரெத்தினம் அவர்கள் உடல், உள,ஆன்மார்த்தரீதியாக ஆய்வு செய்து கண்டெடுத்தது "சுடச் சுடரும் பொன்" என்னும் நூல் வடிவமாகும். இதன் கருப்பொருளாக "சாதாரண குடும்பப் பெண்ணான கண்ணகி கும்பிடும் தெய்வமாகியது எப்படி" என்று அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த இலக்கிய மன்றத்தினர் நூல் ஆசிரியரிடம் கேட்ட வினாவிற்கு விடை என்றும் கூறலாம். இதற்கு களுவாஞ்சிகுடி கிராம முகாமை ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு. அ.கந்தவேள் அவர்களின் ஆசியுரையும், டாக்டர். குணசிங்கம் சுகுணன் அவர்களின் மதிப்புரையும், அவுஸ்த்திரேலிய இந்திய திரைப்பட எழுத்தாளர் சங்க உறுப்பினர் திரு.ஈழன் இளங்கோ அவர்களின் சிறப்புரையும் மெருகூட்டுகின்றன. அதாவது புராண இதிகாசக் கருத்துக்களைக் கடந்து உண்மையான தத்துவார்த்தமான மெய்ஞ்ஞான, விஞ்ஞான அடிப்படையில் நிரூபித்துக் காட்டினால் மட்டுந்தான் மேற்கு நாட்டவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்ற அடிப்படையில் ஆய்வுசெய்து நூலுருவாக்கியுள்ளார்.

உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் இறையடி இணைதல் என்னும் இலட்சியத்தை அடையவேண்டும் என்பதற்காக எமது சமயம் சாதனா முறைகளை வகுத்துள்ளது. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நால்வகை மார்க்கங்களைக் கூறியுள்ளது. ஒழுக்க நெறிகளாக சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை என்பவையும் மனிதனை தெய்வநிலைக்கு இட்டுச்செல்லும் நோக்குடையன. எல்லாவற்றிற்கும் மேலாக இல்லறத்தில் வாழ்ந்துகொண்டே தெய்வநிலை அடையும் பயிற்சி நெறிதான் "துன்பச் சகிப்பு". இதுதான் கண்ணகியைத் தெய்வநிலைக்கு இட்டுச்சென்றது.



புலனடக்கத்தினால் ஒருவர் மொழி, விஞ்ஞானம், கணிதம், உடலியல் பாடங்களைப் புகட்ட முடியும். ஆனால் ஆத்மஞானத்தைப் புகட்ட முடியாது என்பதைச் சூக்குமமாகக் காட்டாமல் காட்டுகிறார் ஆசிரியை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி. பாக்கியரெத்தினம் அவர்கள். அடுத்ததாக இந்நூலின் சிறப்பம்சம் கடவுளை அடையும் உரிமை மானிடப் பிறவிக்கே உரியது என்கிறார். இதை "உறுவினை அறுத்து உய்ந்திடப் பிறந்த பிறவி மானிடப் பிறவி" என தொல்காப்பியரும் கூறுகின்றார்.

சிலப்பதிகாரச் செய்திகளாக,

01. அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதும்
02. உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏற்றலும்
03. ஊழ்வினை உருத்து வந்தூட்டும் என்பதுவுமாகும்.

மூன்றாவதாகிய ஊழ்வினை உருத்து வந்து ஊட்டுவது என்ற உண்மை பலம் வாய்ந்தது என்கிறார். வினையை அனுபவித்தே தீரவேண்டும் என்று கூறப்படுகிறது. கடவுள்கூட வினையை அழித்துவிடமுடியாது என்று கூறுவது வியப்பாகவுள்ளது. அதை அவர் "மனிதன் கடவுளின் இரகசியம்" என்று வேதமும் கூறுகிறது என்கிறார். ஆனால் எமது சமயத்தில் மறுபிறப்புக் கோட்பாடு உறுதிப் படுத்தப்படுகிறது. ஆன்மா பல பிறவி எடுப்பதும், முற்பிறவியின் எச்சமே இப்பிறவி என்பதும் வேதவாக்கு. இதற்கேற்பது கோவலனின் வாழ்வு எனச் சுட்டிக்காட்டுகிறார் ஆசிரியர்.

அக்காலத்தில் சமுதாயம் பெண்களை இரு பிரிவினராக்கியது. கலைகளையே வாழ்வின் ஆதாரமாகக்கொண்டு அக்கலைகளால் பொருளாதாரத்தையும் ஈட்டி, தம்மையும் இழந்து சமுதாயத்தை வாழ்விக்கும் பிரிவினர் பரத்தையர் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் கலைகளைத் தேடியவர்கள். இப்பிரிவினரிலிருந்து விலகி கற்புடைப் பெண்டிராக வாழ்ந்தவர்கள் குலமகள் என்று அழைக்கப்பட்டனர். இவ்வர்க்கத்தைச் சேர்ந்தவள் கண்ணகி. ஆத்மாவின் இராகமாக காதல் என்னும் புனித ஊற்று 12ம் வயதில் தொழிற்படுகிறது. இது ஆணிற்கு 16ம் வயதில் ஏற்படும். இதை "கடவுட் காதல்" என வர்ணிக்கின்றனர் நூலோர். இந்த உறவைத்தான் "பூருவராகம்", திருமணத்தின் முன்னர் எழும் அன்பு என கம்பர் வர்ணிக்கிறார் என ஆசிரியர் கூறுகிறார். கண்ணகியின் தெய்வாம்சம் வீணடிக்கப்படாமலும் உறக்க நிலையிலில்லாமலும் விரிவடைந்தது என்கிறார். தெய்வீகம் அவர் முகத்தில், குணநெறியில், செயற்பாட்டில் எல்லாம் பிரகாசிக்கத் தொடங்கின. கோடியில் ஒருவருக்குத்தான் இது சாத்தியமாகும். எல்லாப் புலவர்களும் தாம் படைக்கும் காவியத்திலும், இதிகாசங்களிலும் பெண்களைப் புகழ்ந்து பேரழகை வர்ணிப்பது வழக்கம். அதுபோல் இல்லாமல் கண்ணகியின் நெற்றியை இறைவன் சடைக்கும், புருவங்கள் காமன் கரும்பு வில்லுக்கும்,, சேமவில்லிற்கும், இடையை வச்சிரப் படைக்கும் கூறி கடவுளோடு சம்பந்தப்படுகிறார் எனக் கூறி ஆசிரியர் வர்ணிக்கிறார்.

தனித்திருந்து தவமும் ஜெபமும் செய்து தேடவேண்டிய ஆன்மீக சாதனைகளெல்லாம் கண்ணகிக்கு உடன் பிறந்த சொத்துக்களானாலும் திருமணத்திற்குப் பின்னர்தான் தெய்வமாகும் ஆற்றல் கைவரப்பெற்றது. மனித உடம்பினுள்ளே மனமென்னும் சூக்கும தேகமும் ஆன்மாவும் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்கிறார். விருப்பு வெறுப்பு ஆசை கோபம் துக்கம் என்பனவற்றிற்கு மனது தோற்றுவாயானாலும் அது மறையும். இவற்றைக் கடந்து ஆன்ம அறிவு கூம்பிக் கிடப்பது அன்பு என்கிறார். இதனை ஆசிரியர் மேலும் விளக்குகையில், கண்ணகியின் ஆத்மபூர்வ காதல் தடுமாறவில்லை, தளம்பவில்லை, விட்டுப் போகவுமில்லை. அவரின் வாழ்க்கை நெறிதான் தெய்வீக நெறிக்கு செலுத்துவதைப் பார்க்கலாம்.

01. துறவறத்தால் மட்டுந்தான் தெய்வசக்தி கிடைக்கப்பெறும் என்பதை மாற்றி இல்லறத்தாலும் நிரூபித்துக் காட்டியவர்.

02. வாழ்ந்தாலும் வாழாவிட்டாலும் ஒருவனுக்கு ஒருத்தி என்கின்ற ஒழுக்கச் சட்டம் வாழ்க்கைச் சட்டமாக இருந்தால் ஒரு பெண்ணிற்கு பெரிய கொடையாகும். கண்ணகிக்கு திருமண வயதோ மிக இளமையானது. உறவுகளைப் பிரிந்து சென்று தனிக் குடும்பம் நடாத்தியபோது தலைவனால் துறக்கப்பட்டு பிரிந்து தனிமையாய், பட்ட மரமாய், சார்ந்து நிற்பதற்கு யாருமற்ற பூங்கொடியாய் நிற்கிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. தனக்குரியவனை இன்னொருத்தி வசப்படுத்திவிட்டாளே என்ற ஆற்றாமையை வெளிப்படுத்திக் காட்டாமலே வாழ்கிறாள்.

04. மன உணர்வுகளோடு உடல் உணர்ச்சிகளையும் விழுங்கி வாழ்கின்ற பொறுமையின் சின்னமாய் உள்ளாள்.

05. இளமையின் துடிப்பும் பருவ உணர்ச்சிகளின் தாக்கமும் அப்பெண்ணை நிலைகுலையச் செய்ய வில்லை.

06. கணவன் தன்னை விட்டு வேறொரு மாதுடன் சென்றாலும் வேறு தெய்வந் தொழாது மன ஒருமைப் பாட்டுடன் மானசீகமாகத் தொழுதது கணவனையே.

07. மாதவிக்கு கொடுக்க பொருள் கேட்டனுப்பிய கோவலனுக்கு இல்லையென்னாது கொடுத்து தன் பொருளையெல்லாம் இழந்து நின்றது

08. தனது மனவேதனையை, தனிமையை, ஏக்கத்தை, இழப்பை எவருடனும் பகிர்ந்து கொள்ளாமல் தானே ஜீரணித்து தன்னடக்கத்தினளாய் வாழ்ந்தது.

09. மன நோய்க்கு இன்ன காரணமென்று உணர்ந்து வெளியிட்டால்தான் மனோதத்துவ நிபுணரிடம் கூறுவர். தனக்கு யாரால் அந்த வேதனை ஏற்பட்டதோ அவரிடமே அதைக் காட்டிக்கொள்ளாது தன்னை மறந்து அவரை எண்ணி வாழ்ந்தமை.

10. விலை மகள் பரம்பரையின் கலை மாதுடன் கூடி பொருள் அழிந்து மீண்டும் தன்னுடன் திரும்பி வந்த கோவலனை கண்ணகி வரவேற்ற முறை மிக அற்புதமானது.

கண்ணகி பிறக்கும்பொழுதே தெய்வாம்சத்துடன் பூமிக்குவந்த சக்திமிகுந்த பெண்குழந்தை. அவர் வாழ்ந்த வாழ்க்கை, கடைப்பிடித்த ஒழுக்கநெறி, மன ஒருமைப்பாட்டுடன் கூடிய இலட்சியம், அனுபவித்த அளவு மீறிய துன்பம், கட்டிக் காத்த பொறுமை, அவர் உள்நின்று வெளியேறிய கனல் அனைத்தும் சேர்ந்தே தெய்வ மகளாக்கியது. இதை ஆசிரியர்,

01. கடும் துன்பங்களைத் தாங்கிக் கொள்வதன் மூலம் சரீரம் யோகம் செய்கின்றது.
02. பிறர் நமக்கு இழைக்கும் துன்பங்களைத் தாங்கிக்கொள்வதன் மூலம் உள்ளம் தவம் செய்கின்றது.
03. துன்பங்களின் மூலம் உலகத்தைக் கற்றுக்கொண்டவன் ஒரு ஞானியைவிடச் சிறந்த மேதையாகின்றான்.
04. இல்லற வாழ்வும் அதில் ஏற்படும் இன்பதுன்பங்களும்தான் ஒரு மனிதனை ஞானியாக்குகின்றன என்கிறார் ஆசிரியர்.

கண்ணகியின் மனவொழுக்கமே தன்னுள் உறங்கிக் கிடந்த "மேதை" நாடியை வளர்த்தது. ஞானிகள் தேடும் ஆற்றலைவிட பொறி அடக்கி பொறுமை காத்து துன்பங்களைத் தின்ற ஆற்றல் மேலோங்கி நின்றது.

"சுடச் சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச் சுட நோக்கிற்பவர்க்கு"

மேற்கண்ட குறளுக்கு சாட்சியாக குண்டலினி என்னும் மகா வாய்வு ஏழு சக்கரங்களையும் எட்டி சிரசினை அடையும் பொழுது சீவன் சிவசக்தியின் ஆற்றலைப் பெறுகின்றது. இந்நிலையைத்தான் கண்ணகி நெருங்கிக்கொண்டிருந்தாள் என ஆசிரியர் திருமதி. ஆறுமுகம் பாக்கியரெத்தினம் அவர்கள் தனது 'சுடச் சுடரும் பொன்' நூல்மூலம் விளக்குகின்றார்.

*****


Digitized by Noolaham Foundation.

நூல் : 'சுடச்சுடரும் பொன்'

# ஏற்புரை



திருமதி. பாக்கியரெத்தினம் ஆறுமுகம்


தமிழ் வளர்க்கின்ற இப்பெருவிழாவிலே கண்ணகித்தாயின் தெய்வீகத்தைப் பற்றிய கருத்துரை வழங்குவதற்கு ஒரு சந்தர்ப்பம் அளித்து, இம் மேடையில் இடம் கொடுத்த அத்தாயாரின் பாதாரவிந்தங்களின் இன்றைய நிகழ்வையும் இந்நூலையும் சமர்ப்பணம் செய்கின்றேன்.

மகிமை மிகுதலைவர் அவர்களே! அறிவுசால் பெரியோர்களே! அன்பான சகோதர சகோதரிகளே! இனிய குழந்தைகளே!! அனைவருக்கும் என் மனம் கனிந்த வணக்கங்கள்,

மனிதனுடைய சிந்தனைக்கும் செயலுக்கும் அறிவிற்கும் ஆராய்ச்சிக்கும் அப்பாலே கடந்து நிற்கின்ற கடவுட்சக்தியை பற்றிப் பேசுவதற்கோ விமர்சனம் செய்வதற்கோ என்னிடம் ஆற்றலுமில்லை, வார்த்தைகளுமில்லை, ஏனெனில் தெய்வீகமென்பது அனுபவத்தால்மட்டுமே உணரக்கூடியது. இத்தகைய தெய்வீகத்தைக் கண்ணகித்தாயினுள் தேடித் தேடிக் கண்டெடுத்த அரிய கருத்துக்கள்தான் இந்நூலின் கருப்பொருளாகும்.

அவுஸ்ரேலியா கண்டத்தின் சிட்னி மாநகரத்திலே இனத்தால், மொழியால், மதத்தால் வேறுபட்ட மக்களின் ஒன்றிணைந்த சங்கத்திடமிருந்து எழுப்பப்பட்ட வினாக்களுக்குரிய விடைகள்தான் இந்நூலினுள் அடங்கிக் கிடக்கின்றன.

அதாவது இளங்கோவடிகளின் நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தை பலமொழிகளில் குறுந்திரைப்படமாக்க எண்ணிய அச்சங்கத்தினருக்குக் கண்ணகித்தாயின் வரலாறு அவர்களது சிந்தனையிலே பல குழப்பங்களை ஏற்படுத்தி விட்டது. அக் குழப்பங்களுக்கு விடை தருமாறு என்னிடம் சில வினாக்களை விடுத்தனர். அவ்வினாக்களை உங்கள் முன் வைக்கின்றேன்.



வினா ஒன்று :- சாதாரண குடும்பப் பெண்ணான கண்ணகி மக்கள் வழிபடும் தெய்வமானது எப்படி?

வினா இரண்டு :- நெருப்பின் துணையின்றி மதுரை மாநகரை எரித்தது எப்படி?

வினா மூன்று :- இறந்து போன கணவனை எழுப்பிக்கதை பேசிய மர்மம் என்ன?

வினா நான்கு :- வானிலே ஒளிமயமாகக் காட்சியளித்த அற்புதம் என்ன?

இந்த நான்கு கேள்விகளுக்குமுரிய விடைகள் மட்டும்தான் இந்நூலை நிரப்பி உள்ளன. எனவே சிலப்பதிகாரத்தின் புறம் சார்ந்த ஆய்வுகளை விடுத்து அகம்சார்ந்த ஆய்வுகளுக்குள் நுழைந்தேன். அங்கு கண்டெடுத்த சில நுண்ணிய கருத்துக்களை இன்றைய ஆய்வாளர்களின் கருத்துக்களோடும் இணைத்துப் பார்த்தேன்.

Digitized by Noolaham Foundation

01. விஞ்ஞான மேதைகளின் ஆய்வுகள்

02. வைத்திய நிபுணர்களின் ஆய்வுகள்

03. உடலியல் தத்துவ ஞானிகளின் ஆய்வுகள்

04. உளவியல் தத்துவ ஞானிகளின் ஆய்வுகள்

இவைகளோடு இந்து மதத்தின் உள்ளார்ந்த தத்துவங்களை எல்லாம் மேற்கு நாடுகளுக்குக் கொண்டு சென்று விதைத்த அறிவுக்கனல் சுவாமி விவேகானந்தரின் ஆழமிக்க தத்துவக் கருத்துக்களையும் இவற்றோடு என்னுடைய வாழ்வில் எனக்கு கிடைத்த வாழ்க்கை அனுபவங்களையும் ஒன்று திரட்டிப் பார்த்த பொழுது, சாதாரண குடும்பப் பெண்ணோ அல்லது ஆணோ மக்கள் வணங்கும் தெய்வமாகின்ற விந்தை தெரிந்தது.

எனவே இவற்றையெல்லாம் ஒன்று சேர்த்து எனக்குத் தெரிந்த மொழி ஆட்சியைப் பயன்படுத்தி இச்சிறுநூலை ஆக்கம் செய்தேன். இது ஒரு முழுமையான ஆய்வு நூல் என்று சொல்வதற்கில்லை. இந்நூலை ஏற்றுக்கொள்வதும் வாழ்வின் செயற்பாடாக்குவதும் உலகின் கைகளில் என்று கூறிக்கொண்டு இவ்விழாவில் எனது நூலை வெளியிடுவதற்கு அனுமதி கொடுத்த கண்ணகி கலை இலக்கியக் கூடலுக்கும் விசேடமாக அதன் தலைவருக்கும் விழாவிற்கு அனுசரணை புரிந்த இக்கிராம மக்களுக்கும் என் சிற்றுரையைச் செவிமடுத்த அறிஞர் பெருமக்களுக்கும் சபையோருக்கும் நன்றி கூறிக்கொண்டு இவ் விழாக்களும் நூல் வெளியீடுகளும் புராண இதிகாச ஆய்வுகளும் ஆலயங்களும் வழிபாடுகளும் வெறும் எழுத்திலும் பேச்சிலும் மட்டும் நில்லாது ஒவ்வொரு மனிதனுடைய நாளாந்த நடைமுறைச் சம்பவங்களாக வேண்டும் எனக் கேட்டு விடைபெறுகின்றேன்.

*****


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**ஓவியக்கண்காட்சி அறிமுகவுரை**

'உலகெலாம்' ராகுல் நாயுடு




**சிறப்பு அதிதி உரை**

எழுத்தாளர் உடப்பூர் வீரசொக்கன்



**நன்றியுரை**

கலாபூஷணம் திரு.க. நடேசன்

(விழாக்குழு உறுப்பினர்)



**அறிமுகவுரை**

திரு.மா. சசிகுமார்

(விழாக்குழுப் பொருளாளர், கண்ணகி கலை இலக்கிய விழா 2016, கன்னன்குடா)



**ஓவியக்கண்காட்சி திறந்து வைப்பு**

மா. சதாசிவம் (துணைத் தலைவர், கண்ணகி கலை இலக்கியக் கூடல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஓவியக்கண்காட்சி



நூலங்காடி திறந்து வைப்பு

திரு. ப. குணசேகரன் (செயற்குழு உறுப்பினர், கண்ணகி கலை இலக்கியக் கூடல்)



நூலங்காடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**விபரண ஒளிப் படக்காட்சி – கண்ணகி கலை இலக்கிய விழா – 2016, கன்னன்குடா** (ஆறாவது கண்ணகி கலை இலக்கியவிழா)

**இணைப்பாளர் : திரு.ச. மதன்**

(ஆவணவாக்கப் பொறுப்பாளர், கண்ணகி கலை இலக்கியக் கூடல்)

**அறிமுகம் : மா. சசிகுமார்**



**ஆரம்பித்து வைப்பவர்**


**அதிபர்.தி. புலேந்திரகுமார்**

(விழாக்குழு உறுப்பினர், கண்ணகி கலை இலக்கிய விழா 2016, கன்னன்குடா)

**நிகழ்ச்சித் தொகுப்பு**

**திரு.க. ஜெகதீஸ்வரன்**

(விழாக்குழுத் துணைச் செயலாளர், கிரான்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## 03 செப்டம்பர் 2017, ஞாயிற்றுக்கிழமை - முதலாம் நாள் மாலை

### இயல் அரங்கு (பி.ப 3.00 - மாலை 7.30)


### மாலை அமர்வு - 1 (பி.ப 3.00 - பி.ப 4.15)

### "பண்டிதர் வி.சீ. கந்தையா அரங்கு"

மங்கல விளக்கேற்றல்




**கலாபூஷணம் த.சிவசுப்பிரமணியம்**
தலைவர், கொழும்புத் தமிழ்ச்சங்கம்



**திரு. வ. வாசுதேவன்**
பிரதேச செயலாளர், கோறளைப்பற்று, வாழைச்சேனை



பிரபல நாவலாசிரியர்
**நீ.பி.அருளானந்தம்**



**மா. சதாசிவம்**
துணைத் தலைவர், கண்ணகி கலை இலக்கியக் கூடல்



**வரவேற்பு நடனம் – முறக்கொட்டான்சேனை இராமகிருஸ்ண மிசன் வித்தியாலய மாணவி**
நெறியாள்கை : திருமதி. கஜேந்தினி ஜெகதீஸ்வரன் (நடன ஆசிரியை)



**அரங்க அறிமுகம்**
**திரு.க. ருத்திரன்**
விழாக்குழு உறுப்பினர்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




தலைமையுரை
கலாபூஷணம்
**க. கிருஸ்ணபிள்ளை**
(கவிஞர் சந்தியூரான்)



நூல் வெளியீடு : 'கண்ணகி வழக்குரை' (மீள்பதிப்பு)
**வெளியீடு : திரு.வெ. ஜெயநாதன் ஜே.பி**
(செயற்குழு உறுப்பினர், கண்ணகி கலை இலக்கியக் கூடல்)



வெளியீட்டுரை
**திரு.மா. சதாசிவம்**
(துணைத்தலைவர், கண்ணகி கலை இலக்கியக் கூடல்)



முதற்பிரதி பெறுநர்
**பொன்னையா சின்னத்தம்பி JP**
(புதுக்குடியிருப்பு)

**கும்மி, குளிர்த்திப்பாடல், உடுக்கு இசை மற்றும் விவாதப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்கள் வழங்கல்.**










Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மாலை அமர்வு - II (பி.ப 4.30 - பி.ப 7.30)

# "சேரன் செங்குட்டுவன் அரங்கு"



அரங்க அறிமுகம்

**திரு.எ. ஜெயரஞ்சித்**


(விழாக்குழு உறுப்பினர்)




தலைமையுரை

**எஸ்.பி. நாதன்**

(செயற்குழு உறுப்பினர், கண்ணகி கலை இலக்கியக் கூடல்)




பட்டி மண்டபம்

**'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்' என்பதற்குப் பெரிதும் காரணமாயமைந்தவை ஆண் பாத்திரங்களா? பெண் பாத்திரங்களா?**

**நடுவர் – தமிழருவி த. சிவகுமாரன்** B.A(Hons)

(அமைப்பாளர், வவுனியா மாவட்டத் தமிழ்ச்சங்கம்)

### வாதிட்டோர்

**ஆண் பாத்திரங்களே!**


- கவிஞர். ஜீ.எழிவண்ணன்
- செல்வி. நடராசா தர்சினி
- மட்டுநகர். சிவ. வரதகரன்

**பெண் பாத்திரங்களே!**

- கதிரவன் த.இன்பராசா
- செல்வி. சதாசிவம் நிலோஜினி
- பாலமீன்மடு. இரா. கலைவேந்தன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாதிட்டோர்



கவிஞர். ஜீ. எழில்வண்ணன்



கதிரவன் த. இன்பராசா



செல்வி.நடராசா தர்சினி



செல்வி. சதாசிவம் நிலோஜினி



மட்டுநகர். சிவ. வரதகரன்



பாலமீன்மடு இரா. கலைவேந்தன்

அதிதிகள் உரை



திரு.வ. வாசுதேவன்
(பிரதேச செயலாளர்,
கோறளைப்பற்று, வாழைச்சேனை)



சட்டத்தரணி ம. தயாபரன்



பிரபல நாவலாசிரியர்
நீ.பி. அருளானந்தம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ரெஜி கலாசார மண்டபம் - கிரான்

**04 செப்டம்பர் 2017 திங்கட்கிழமை - இரண்டாம் நாள் காலை**
**ஆய்வரங்கு (மு.ப. 9.30 - பி.ப 1.00)**

# "இளங்கோவடிகள் அரங்கு"

**பொருள்** : "கண்ணகி வழக்குரையில் கவனிப்புக்குரிய பகுதிகள்"

**தலைமை** : **திருமதி. ரூபி வலன்ரீனா பிரான்சிஸ்**
(சிரேஸ்ட விரிவுரையாளர், மொழித்துறை, கிழக்குப்பல்லைக்கழகம்


**ஆய்வு மதிப்பீட்டாளர்கள்**

- **பேராசிரியர் செ.யோகராசா** (ஓய்வுநிலைப் பேராசிரியர்)
- **திருமதி. ரூபி வலன்ரீனா பிரான்சிஸ்**
  (சிரேஸ்ட விரிவுரையாளர், மொழித்துறை, கிழக்குப்பல்கலைக்கழகம்)
- **கலாநிதி வ.இன்பமோகன்**
  (தலைவர், நுண்கலைத்துறை, கிழக்குப் பல்லைக்கழகம்)
- **கலாநிதி சி.சந்திரசேகரம்**
  (சிரேஸ்ட விரிவுரையாளர், மொழித்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்)

**ஆய்வாளர்கள்** :

- **திருமதி. சாந்தி கேசவன்**
  (தலைவர், இந்து நாகரிகத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்)
- **கலாநிதி திருமதி. ஷர்மிளா ரஞ்சித்குமார்**
  (தலைவி, நடனநாடகத்துறை, சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம், கிழக்குப்பல்கலைக்கழகம்)
- **திரு. பாஸ்கரன் சுமன்**
- **திரு.சு. சிவரெத்தினம்**
  (விரிவுரையாளர், சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம்)

**ஆய்வரங்க இணைப்பாளர்** : **திருமதி. யோகேஸ்வரி குணரட்ணம்**
(உதவிக்கல்விப் பணிப்பாளர் / விழாக்குழு உறுப்பினர்)



ஆய்வரங்க மேடை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மங்கலவிளக்கேற்றல்




**செல்வி.அனுசூயா சேனாதிராஜா**
முதுநிலை விரிவுரையாளர்,
மொழித்துறை, தென்கிழக்கு பல்கலைக்கழகம்



**கலாநிதி க.இராஜேந்திரம்**
சிரேஸ்ட விரிவரையாளர், நுண்கலைத்துறை
கிழக்குப்பல்கலைக்கழகம்



**திரு பொன் செல்வநாயகம்**
தவிசாளர், கிழக்கு மாகாண பாலர் பாடசாலைக் கல்விப்பணியகம்



**கலாநிதி ம.வர்ணகுலசிங்கம்**
விரிவுரையாளர் / தலைவர் புவியியல்துறை,
கிழக்குப்பல்கலைக்கழகம்



**திரு. தி.ரவி**
வலயக்கல்விப் பணிப்பாளர், கல்குடா கல்விவலயம்



**திரு.த. மலர்ச்செல்வன்**
மாவட்ட கலாசார இணைப்பாளர்,
மட்டக்களப்பு மாவட்டம்



வரவேற்பு நடனம் – வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலய மாணவிகள்

நெறியாள்கை : செல்வி. கிருபாகரன் டயனரூபி (நடன ஆசிரியை)



வரவேற்புரை

திரு.ச. ஜெயராசா

பொருளாளர்,
(கண்ணகி கலை இலக்கியக்கூடல்)



அரங்க அறிமுகம்

திருமதி. யோகேஸ்வரி குணரட்ணம்

(விழாக்குழு உறுப்பினர்)



தலைமையுரை

திருமதி. ரூபி வலன்ரீனா பிரான்சிஸ்

(சிரேஸ்ட விரிவுரையாளர்,
மொழித்துறை,
கிழக்குப்பல்கலைக்கழகம்)



ஆய்வரங்கில் அவையோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஆய்வுரைகள்



ஆய்வாளர்

திருமதி. சாந்திகேசவன்

"கண்ணகி வழக்குரையில் அம்மன் பிறந்த கதை"



மதிப்பீட்டாளர்

பேராசிரியர். செ. யோகராசா



ஆய்வாளர்

கலாநிதி திருமதி. ஷர்மிளா ரஞ்சித்குமார்

"கண்ணகி வழக்குரையில் மாதவி அரங்கேற்றுக் காதை"



மதிப்பீட்டாளர்

திருமதி. ரூபி வலன்ரீனா பிரான்சிஸ்



ஆய்வாளர்

திரு. பாஸ்கரன் சுமன்

"கண்ணகி வழக்குரையில் கொலைக்களக் காதை"



மதிப்பீட்டாளர்


கலாநிதி. வ. இன்பமோகன்



ஆய்வாளர்

திரு.சு. சிவரெத்தினம்


"கண்ணகி வழக்குரையில் வெடியரசனும் விளங்கு தேவனும்"



மதிப்பீட்டாளர்

கலாநிதி. சி. சந்திரசேகரம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கண்ணகி கலை இலக்கிய விழா - 2017

## ஜனரஞ்சகமாகவும் காத்திரமாகவும் வடிவமைக்கப்பட்ட ஓர் விழா

– பேராசிரியர் சி.மௌனகுரு
காப்பாளர், கண்ணகி கலை இலக்கியக் கூடல்

கண்ணகை அம்மன் மட்டக்களப்பு இந்து மக்கள் மத்தியில் பெரும் தெய்வமாக மதிக்கப்படுகிறாள். செட்டிச்சிக்கு ஏன் கோவில்? என்று கூறும் தெய்வவழிபாட்டுப் பிதாமகர்கள் அந்நாளில் குரல் எழுப்பினும் மட்டக்களப்பு இந்து மக்கள் அக்கூற்றுக்களைக் கணக்கிலெடுத்தாரில்லை. கண்ணகி அம்மாள் என்று அம்மாவாக அத்தெய்வத்தை அவர்கள் அருகில் வைத்துக்கொண்டார்கள். வைகாசி மாதம் மட்டக்களப்பில் கண்ணகையம்மன் மாதமாகும்.

வைகாசிப்பூரணையில் மட்டக்களப்பின் பல கிராமங்கள் கண்ணகையம்மனை நினைத்து விழாக்கோலம் பூணும் கிராம விழாவாக அது அமையும்.

இப்பின்னணியில்தான் கண்ணகி இலக்கிய விழா 2011 இல் மட்டக்களப்பில் கால்கோள் கொண்டது. இதற்கான ஆலோசனை நடத்திய 2008, 2009, 2010 ஆம் ஆண்டுப்பகுதிகள் ஞாபகத்திற்கு வருகின்றன. செங்கதிரோன் த. கோபாலக்கிருஸ்ணனும், நானும் இதன் ஆரம்ப கர்த்தாக்கள். காலம் சென்ற கன்னன்குடா ஆறுமுகமும், அன்பழகன் குருஸும், புதுக்குடியிருப்பு ம.சதாசிவமும் எங்களுடன் பின்னர் இணைந்து கொண்டனர். பல கூட்டக்கலந்துரையாடல்களின் பின் செங்கதிரோன் இதன் தலைமைப்பொறுப்பை ஏற்றார். அன்பழகன் குரூஸ் செயலாளர் பொறுப்பை ஏற்றார். செங்கதிரோன் என இலக்கிய உலகில் அழைக்கப்படும் த. கோபாலகிருஸ்ணன் இதன் அச்சாணியானார்.

சமூக நாட்டமும் ஆர்வமும் அர்ப்பணிப்பும், அயரா உழைப்பு வல்லபமும் கொண்ட செங்கதிரோனுக்கு நண்பர்கள் உதவினர். இன்று இது பலருக்கு பங்கு கொள்ளும் பெருவிழாவாக வளர்ந்து வருகிறது. கூடியவரை நாம் இதனை ஓர் கலை இலக்கிய விழாவாக நடத்தவே எண்ணிணோம். அது சற்றுச் சிரமம் போலவே தெரிகிறது. மெல்ல மெல்ல இது ஊர் மக்கள் பங்கு கொள்ளும் விழாவாக உருவெடுத்து இன்றைவரை ஒவ்வொரு ஊர் தோறும் மிகச் சிறப்பாக நிகழ்ந்து வருகிறது.

செங்கதிரோன் என்னைக் கண்ணகி கலை இலக்கிய விழாக் கூடலுக்கு காப்பாளராக இருக்கும்படி கேட்டுக்கொண்டார். ஒப்புக்கொண்டேன். ஆலோசனைகளையும் பெற்றுக் கொண்டார். வருடா வருடம் திட்டமிடும் போது காப்பாளர் என்ற வகையில் என்னையும் கலந்து ஆலோசனைகள் பெறுவார். கண்ணகிவிழாவை மக்கள் பங்கு கொள்ளும் கொண்டாட்ட விழாவாகவும், கண்ணகியம்மன் சம்பந்தமான நூல்களையும் ஆய்வுகளையும் சிந்தனைகளையும் மக்களுக்குப் பரப்பும் அறிவு விழாவாகவும் நடத்த நாம் முடிவு செய்தோம்.

அவ்வாலோசனைகளுள் ஒன்றுதான் வருடம் தோறும் நடைபெறும் கண்ணகி விழாவில் கண்ணகி வழக்குரையை மையமாகக் கொண்டு ஆய்வுக் கருத்தரங்கு நடத்தப்பட வேண்டும் என்பது. அதன்படி 2013 இலிருந்து ஆய்வுக் கருத்தரங்கின் குவி மையம் கண்ணகி வழக்குரையாயிற்று. கண்ணகி வழக்குரையைப் பலரும் படிக்க வைத்தலும் அந்நூல் பற்றிய அறிவு பூர்வமான செய்திகளைப் பொதுமக்களுக்குத் தருதலுமே இவ் ஆய்வு அரங்குகளின் நோக்கமாகும்.

இவ்வகையில் கண்ணகி வழக்குரையின் பல பகுதிகள் ஆய்வாளர்களால் ஆய்வுக்குட்படுத்தப்பட்டன.. இதனால் கோவிற்சடங்குகளின் போது மாத்திரம் சடங்கு நோக்கில் படிக்கப்பட்ட கண்ணகி வழக்குரை ஆய்வில் பங்கு கொண்டோரால் நுணுக்க வாசிப்பிற்குட்படுத்தப்பட்டது.. இதன் விளைவால் அவ்விலக்கியம்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பரவலாக மக்களிடம் செல்ல ஆரம்பித்தது.

சடங்கு நோக்கினின்றும் மாறி இலக்கிய நோக்கிலும், ஒப்பீட்டு நோக்கிலும் சமூக, வரலாற்று நோக்கிலும் கண்ணகி வழக்குரை ஆய்வாளர்களால் நோக்கப்படலாயிற்று. பல காத்திரமான கருத்துக்களும் மேற்கிளம்பலாயின. காத்திரமான கட்டுரைகளும் வடிக்கப்படலாயின.

கண்ணகி வழக்குரையைப் பரவலாகவும் அறிவியல் நோக்கிலும் மட்டக்களப்பு மக்களிடம் கொண்டு சென்றதில் கண்ணகி கலை இலக்கியக் கூடலுக்குப் பெரும் பங்குண்டு. இம்முறை நடைபெறவுள்ள கண்ணகி கலை இலக்கிய விழாவில் பண்டிதர் வீ.சீ.கந்தையா 1968இல் பதிப்பித்த கண்ணகி வழக்குரை மீள்பதிப்புச் செய்யப்பட்டுள்ளது.

இதனால் கண்ணகி வழக்குரையை ஆர்வமுடையோர் படிக்கும் வாய்ப்பும் ஏற்படுகிறது. கண்ணகி விழாவில் நற்பயன்களும் இதுவும் ஒன்றாகும். ஆய்வரங்குக்கு மிகச்சிலரே வருகை தருவது வழமை. ஆனால் ஆய்வரங்கு கனதியாக புது விடயங்களைக் கூறுவதாக அமையும். இவ்வாய்வரங்கிற்குத் தலைமை தாங்கும் பொறுப்பை செங்கதிரோன் இதன் காப்பாளர் என்ற வகையில் என்னிடமே 2011 லிருந்து வருடம் தோறும் ஒப்படைத்து வருகிறார். இம்முறையும் ஒப்படைத்தார். அதற்கு அவருக்கு எனது மனம் நிறை நன்றிகள். இவ்வாய்வரங்கில் கண்ணகி வழக்குரையில் அம்மன் பிறந்த கதை, கண்ணகி வழங்குரையில் அரங்கேற்றுக்காதை, கண்ணகி வழக்குரையில் கொலைக்களக்காதை, கண்ணகி வழக்குரையில் வெடியரசனும் விளங்குதேவனும் எனும் தலைப்பில் கட்டுரைகள் வாசிக்கப் படவுள்ளன. இதில் உரையாற்ற நான்கு ஆய்வாளர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். கிழக்குப்பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறைத் தலைவியான கலாநிதி திருமதி சாந்தி கேசவன், சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவக நடன நாடகத் துறையின் தலைவியான ஷர்மிளா ரஞ்சித்குமார், சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகக் கட்புலக்கலைத் துறையின் முன்னாள் இணைப்பாளரான கலாநிதி சு.சிவரெத்தினம், சப்பிரகமுவ பல்கலைக்கழகத் தமிழ்த்துறை முன்னாள் விரிவுரையாளரான பாஸ்கரன் சுமன் ஆகியோரே அவர்கள்.

வருடாவருடம் கண்ணகி கலை இலக்கியக்கூடல் புதிய புதிய ஆய்வாளர்களை அரங்குக்கு இழுக்கிறது. அவர்களிடம் நிறைய எதிர்பார்க்கிறது. இம்முறையும் நாம் இவர்களிடமிருந்து நிறைய எதிர்பார்க்கிறோம். இவ்வாய்வுகளுக்கு மதிப்பீட்டுரை நிகழ்த்தத் தகைசார்ந்தவர்களை அழைத்திருக்கிறோம். பேராசிரியர் செ.யோகராசா, ரூபி வலன்ரீனா பிரான்சிஸ், கலாநிதிகளான சந்திரசேகரன் மற்றும் இன்பமோகன் ஆகியோரே இவர்கள். எமது மண்ணின் இளம் கலாநிதிகள் இங்கு பங்குகொள்வது எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சிதருகிறது. ஆய்வை அடுத்த தலைமுறை தம் தோள்களில் தாங்கும் அழகிய நிகழ்வு இங்கு அரங்கேறுகிறது. இம்முறை மிகமுக்கிய அலுவலாக நான் கொழும்பில் நிற்பதால் ரூபி வலன்டீனா பிரான்சிஸ் அவர்களை இதற்குத் தலைமை தாங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளேன்.

எனது நேரக் கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் நன்கு புரிந்தவர் அவர். சிறப்பாகவும், கச்சிதமாகவும், கவர்ச்சியாகவும் இவ்வாய்வரங்கை நடத்தும் திறன் அவரிடம் உண்டு என நான் எதிர்பார்த்தமையினாலேயே அவரிடம் இப்பாரிய பொறுப்பை ஒப்படைத்தேன்.

அவருக்கும் இவ்வாய்வரங்கில் உரை நிகழ்த்தவுள்ள ஆய்வாளர்களுக்கும், மதிப்பீட்டாளர்களுக்கும் எனது வாழ்த்துக்களும் வணக்கங்களும்.

*****


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தலைமையுரை

**திருமதி. ரூபி வலன்ரீனா பிரான்சிஸ்**

**(சிரேஸ்ட விரிவுரையாளர், மொழித்துறை, கிழக்குப்பல்கலைக்கழகம்)**

கண்ணகி கலை இலக்கிய விழாவின் இரண்டாம் நாளின் முதலாம் அமர்வாக ஆய்வரங்கு இடம்பெறுகின்றது. 'இளங்கோவடிகள் அரங்கில்' இடம்பெறும் இந்நிகழ்வில் முதன்மை அதிதிகளாகவும், சிறப்பு அதிதிகளாகவும் கலந்து கொள்ளும் கௌரவத்திற்குரியவர்களுக்கும் இந்த ஆய்வரங்கினை காத்திரமானதாகவும் பெறுமதி மிக்கதாகவும் ஆக்குவதற்காக ஆய்வளர்களாகவும், ஆய்வு மதிப்பீட்டாளர்களாகவும் கலந்து கொள்கின்ற கல்விமான்களுக்கும், கண்ணகி கலை இலக்கிய விழாக் குழுவினருக்கும் மற்றும் அவையோருக்கும் அன்புசால் வணக்கம்.

இந்த ஆய்வரங்கு பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களின் தலைமையில் நடைபெறுவதாக இருந்தது. ஆயினும் தவிர்க்கமுடியாத காரணத்தால் இன்றைய தினம் அவரால் கலந்துகொள்ள முடியவில்லை. இதனை ஏற்பாட்டுக் குழுவினருக்கு அவர் தெரிவித்ததுடன் அப்பொறுப்பினை என்னை ஏற்றுக் கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார். அத்துடன் தனது உரையினை வாசிக்குமாறும் அனுப்பியிருந்தார்.

அண்மைக்காலமாக 'கண்ணகி வழக்குரை' நூலின் விடயங்கள் ஆய்வுக்கருத்தரங்கின் கருப்பொருள்களாக எடுத்தாளப்பட்டு வருகின்றன. கிழக்கிலங்கையில் கண்ணகி வழிபாட்டின் முக்கியத்துவத்தினைப் பரவலாக்குவதிலும் 'கண்ணகி வழக்குரையினூடாக' கண்ணகி குறித்த மரபினை ஆய்வு செய்ய வழி வகுப்பதிலும் கண்ணகி கலை இலக்கியக் கூடல் என்னும் அமைப்பிற்குப் பெரும் பங்கு உண்டு.

இவ்வருடம் 'கண்ணகி வழக்குரையில் கவனிப்புக்குரிய பகுதிகள்' என்னும் மையப்பொருள் வழங்கப்பட்டது. அதன்படி 'கண்ணகி வழக்குரையில் அம்மன் பிறந்த கதை' என்னும் தலைப்பில் கலாநிதி சாந்தி கேசவன் (தலைவர், இந்து நாகரிகத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்) அவர்களும், 'கண்ணகி வழக்குரையில் அரங்கேற்று காதை' என்னும் தலைப்பில் கலாநிதி ஷர்மிளா ரஞ்சித் குமார் (தலைவர், நடன நாடகத்துறை, சுவாமி விபுலாநந்த அழகியல் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம்) அவர்களும், 'கண்ணகி வழக்குரையில் கொலைக்களக் காதை' என்னும் தலைப்பில் பாஸ்கரன் சுமன் அவர்களும், 'கண்ணகி வழக்குரையில் வெடியரசனும் விளங்கு தேவனும்' என்னும் தலைப்பில் திரு.சு.சிவரெத்தினம் (விரிவுரையாளர், சுவாமி விபுலாநந்த அழகியல் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம்) அவர்களும் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிக்கவுள்ளார்கள்.

இந்த ஆய்வுகளுக்கான மதிப்பீட்டுரைகள் இவ்வருடம் வழமையைவிட மாறுபட்டதாக அமைந்துள்ளது. வழக்கமாக ஒருவர் அல்லது இருவர் மதிப்பீட்டினை வழங்குவர். ஆனால் இவ்வருடம் ஆய்வு ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு மதிப்பீட்டாளர் நியமிக்கப்பட்டுள்ளார். குறித்த ஆய்வில் முழுமையாகக் கவனம் செலுத்தி கருத்துரைப்பதற்கு இது வாய்ப்பளிக்குமெனக் கருதலாம். மதிப்பீட்டாளர்களாக முறையே பேராசிரியர். செ. யோகராசா (ஓய்வுநிலைப் பேராசிரியர் மொழித்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்), திருமதி றூபி வலன்ரீனா பிரான்சிஸ், சிரேஸ்ட விரிவுரையாளர், மொழித்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்), கலாநிதி வ.இன்பமோகன், தலைவர், நுண்கலைத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்), கலாநிதி சி.சந்திரசேகரம், சிரேஸ்ட விரிவுரையாளர், மொழித்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்) ஆகியோர் இங்கு சமுகமளித்துள்ளனர்.

இந்த ஆய்வரங்கம் அறிவுக்கு விருந்தாக அமைந்து சிந்திக்கத் தூண்டுவதாக அமையுமென எதிர்பார்க்கலாம்.

*****



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ஆய்வுரை |


# கண்ணகி வழக்குரையில் அம்மன் பிறந்த கதை

**கலாநிதி திருமதி. சாந்தி கேசவன்**
தலைவர்,சிரேஷ்டவிரிவுரையாளர், இந்துநாகரிகத் துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

## அறிமுகம்

கண்ணகி தொடர்பான இலக்கியங்களில் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியன முதன்மையானவை. இவை தமிழ் நாட்டறிஞர்களால் அறநெறிக்காலத்தில் எழுதப்பட்டவை. இலங்கையிலும் கண்ணகி தொடர்பான இலக்கியங்கள் பல தோற்றம் பெற்றுள்ளன. சிங்கள மக்களிடையே வழங்கி வரும் நாட்டார் இலக்கியங்களில் கண்ணகி தொடர்பான செய்திகள் இடம் பெற்றுள்ளன. இதுபோல் கண்ணகி தொடர்பான தமிழிலக்கியங்களும் தமிழர் மத்தியில் தோற்றம் பெற்றன. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் கோவலனார் கதை, முல்லைத்தீவில் சிலம்பு கூறல், மட்டக்களப்பில் கண்ணகி வழக்குரை முக்கியமானவை.

## கண்ணகி கதை பல்வேறு மொழிகளில்




## சிலப்பதிகாரம் கூறும் கண்ணகி கதை

சிலப்பதிகாரத்திற்கு முன் கண்ணகி கதை தொன்மமாக இருப்பினும் உரைசால் பத்தினிக்குயர்ந்தோர் ஏத்தலைச் சித்திரிப்பதை உயர் நோக்காகக்கொண்டு இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரமே முதன் முதலாக கண்ணகியின் மாண்பை எடுத்துக்காட்டியது.

புகார் நகரில் மாநாய்கான் புலக்கொடியாய் ஈராறு ஆண்டு அகவைகளாய் வாழ்ந்த குலமாய் கண்ணகி பிற்காலத்தில் கொள்கைச் செல்வியாய் குடமலையாட்டியாய் தென்தமிழ்பாவை செய்த தவக் கொழுந்தாய் ஒரு மாமணியாய் உலகுக்கு ஓங்கிய திருமாமணியாய் விளங்கப்போகும் பெரு நிலையை காப்பியக் கதையின் ஊடாக உணர்த்தும் முகமாகவும் இக்கதையை வகுத்துள்ளனர். "இவளோ, கொங்கச் செல்வி குடமலை யாட்டி

சென்றமிழ்ப் பாவை செய்தவக் கொழுந்து
ஒருவாமணியா யுலகிற் கோங்கிய திருமாமணி " 27

சாலினி கண்ணகியை பற்றி கூறும் எனும் இக்கூற்று பத்தினியை பெண்களில் உயர்ந்தோர் ஏத்தும் பாண்மைத்துவம். கண்ணகியை தெய்வ நிலைக்கு ஏற்றிக் கூறும் முதல் கட்டம் இதுவேயாகும். தமிழ்நாட்டுப் பாரம்பரியத்தில் சாதாரண பெண்ணாகப் பிறந்து தெய்வமானாள் என்று கூறுகின்றது,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோவிலன் சரித்திரம்

பழங்குடிகளிடையே வழங்கப்படும் இக்கதை 'கோவிலன் சரித்திரம்' என்றும் 'கோவிலன் கூத்து' என்றும் பெயர் பெற்றுள்ளது. தமிழில் ச.சு.சங்கரலிங்கக் கவிராயர் கிராமிய நாடகமாக 'கோவிலன் சரித்திரம்' எனும் நூலை 1923 இல் வெளியிட்டுள்ளார். இந்நூல் 16 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவரெனக் கருதப்படும் புகழேந்தியாரின் 'கோவிலன் கதை' எனும் நூலின் நாடக வடிவமாகும். கவிராயரின் கோவிலன் சரித்திரமும் பழங்குடிகளின் கதைப்பாடலும் பாடல் அமைப்புக்களால் முற்றிலும் மாறுபட்டவையாகும். கோவிலன் கர்ணகை கதை எனும் நாட்டுப்புறக்கதைப் பாடல் போலவே இப்பழங்குடிகளின் கதைப் பாடலும் முன்பு வில்லுப்பாட்டாகவே வழங்கியிருக்கலாம். பிற கதைப் பாடல்களைப் போலவே பழங்குடிகளின் கதைப் பாடல்களிலும் கர்ணகை பாண்டியனைப் பழிவாங்கப் பிறப்பெடுத்த காளியின் வடிவாகக் கூறப்படுகின்றாள்.

பிற கதைகள் வட்டாரச் தெய்வ வணக்கத்தோடு (deity worship) கண்ணகியை இணைக்கின்றன. இவ்வமைப்பு கோவிலன் சரித்திரத்தில், காளி கர்ணகையாகப் பிறப்பெடுக்கும் போது மட்டும்,

"பொன்னு வருவாச்சியம்மா இவ்வுலகத்தில் வந்தா
பொன்னு சாஞ்சாட்டம்மா இவ்வுலகத்தில் வந்தா" (பாட்டு :36)

என்று தங்களது வணக்கத் தெய்வத்தோடு காளியை இணைத்துப் பாடுகின்றனர். இவ்வாறாக கண்ணகி பற்றி பல்வேறு கதைகள் வழக்கிலுள்ள நிலையில், மட்டக்களப்பு கண்ணகையம்மன் பற்றிய ஆய்வுகளின் தேவை அவசியமாகிறது. மட்டக்களப்பில் சிறப்புப் பெற்று விளங்கும் கண்ணகி வழிபாட்டில் செல்வாக்குப் பெற்ற ஒரு இலக்கியமாகக் கண்ணகி வழக்குரை காணப்படுகின்றது. கண்ணகிக்கு வழிபாடாற்றப்படும் வேளையில் இந்நூல் படிக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில் கண்ணகி பிறந்த கதைகள்

## கோவலனார் கதை

கோவலனார் கதையில் கண்ணகியின் பிறப்பு தெய்வாம்சத் தொடர்புடையதாகக் கூறப்படுகின்றது.

## சிலம்பு கூறல்

உலக மாதாவாகிய உமையம்மையாரே குடத்தில் உள்ள மாங்கனியிலிருந்து கண்ணகியாக பிறந்ததை,

"......அடுத்ததொரு சூரியன்- அக்குடத்தின் மீதொளியே
கொடுத்தனளோ தொண்டர் செய்யும் - குறை தவிர்க்கு மிறையவளே" என்ற பாடல் புலப்படுத்தும்.

## பௌத்த இலக்கியங்கள்

பத்தினியை காளி,துர்கையின் அவதாரம் என்றும் மாங்கனியில் பிறந்தவள் என்றும் கருதுகின்றனர். புத்தர் நட்ட மாம்வித்தலிருந்து தோன்றியவள் என்றும் சிங்கள நூல்கள் குறிப்பிடுகின்றன.

## மட்டக்களப்பில் கண்ணகி வழக்குரை

கண்ணகி வழக்குரை 15 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதப்படுகின்றது. (கந்தையா,வீ. சி, (பதி), கண்ணகி வழக்குரையும், பதிப்புரையும், 1968) ஆரம்பத்தில் வாய்மொழியாகவிருந்து பின் ஏட்டுவடிவில் இருந்து பின்னர் எழுத்துருப் பெற்றிருப்பதை அறிய முடிகின்றது. கண்ணகி வழக்குரை மட்டக்களப்பில் 14 ஆம் நூற்றண்டளவில் பாடப்பட்டது. மட்டக்களப்பு மாநிலத்தில் வழங்கி வரும் "கண்ணகி வழக்குரை' என்ற நாட்டார் காவியத்தில் காணப்படும் பல செய்திகள் ஆய்வுக்குரியவை. (சிவசுப்பிரமணியம்,வ., மட்டக்களப்பு நாட்டாரியல், வக்மி பதிப்பகம், 2004, ப.76)

கண்ணகி வழக்குரை நூலாசிரியர் பற்றிய உறுதியான தகவல்களை பெறமுடியாதுள்ள போதிலும் இந்நூலாசிரியர் காங்கேயன், அதியரசன், தேவையர்கோன் போன்ற பெயர்கள் நூலில் இடையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெற்றுள்ளன. (கந்தையா,வீ.சி, மே.கூ.நூ, (மதிப்புரை), பக்-xxix, குணசேகரன்.து., சிலப்பதிகாரம் ஆய்வுக்கோவை, 2004, ப.229) சுவாமி விபுலானந்தர் கண்ணகியார் வழக்குரை என்னும் கட்டுரையை எழுதியுள்ளார். தேவையர் கோனாகிய காங்கேயன் என்னும் சிற்றரசன் இயற்றிய கண்ணகியார் வழக்குரை என்றே அக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். (விபுலானந்தர் ஆக்கங்கள், 1941) இந்நூலினை இயற்றியவர் சகவீரர். (யோகராசா, செ. சிலப்பதிகாரத்தில் பண்பாட்டுக் கோலங்கள்) இவர் தமிழ் நாட்டிலிருந்து வந்து மட்டக்களப்பில் வாழ்ந்தவராக கூறப்படுகின்றது. இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்தை தழுவி பொதுமக்களுக்கேற்ற மாற்றங்களுடன் கண்ணகி வழக்குரை என்ற பெயரில் இந்நூல் அமைந்துள்ளது.

கண்ணகி வழக்குரை கண்ணகியின் வரலாற்றை விரிவுபட எடுத்துரைக்கும் இது ஒரு பெருநூலாகக் காணப்படுகிறது. இந்நூலில் கண்ணகியின் வரலாற்றுடன் தொடர்புபட்ட பல்வேறு விடயங்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் அம்மன் பிறந்த கதை பற்றிய செய்திகள் முக்கியமானவையாகும்.

## கண்ணகி வழக்குரையில் கண்ணகையம்மன்

தமிழ்நாட்டுப் பாரம்பரியம் கண்ணகி சாதாரண பெண்ணாகப் பிறந்து தெய்வமானாள் என்று கூற, கிழக்கிழங்கையில் கண்ணகையம்மன் பிறந்த கதை சற்று வித்தியாசமாகவுள்ளதை அவதானிக்கலாம். மட்டக்களப்புப் பாரம்பரியம் தெய்வந்தான் கண்ணகை எனும் பெயரில் சாதாரண பெண்ணாகப் பிறந்தாள் எனக் கொள்கின்றது. இதுவே சிலப்பதிகாரத்திலிருந்து வழக்குரை வேறுபடும் இடமாகும். (கணபதிப்பிள்ளை,சி., மகாமாரித்திவ்யகரணி, பக்.95)

கண்ணகி வழக்குரையை பொறுத்தவரை, கண்ணகியின் பிறப்பைக் கூறுமிடத்து பராசர முனிவரின் மகளது அருங்குணத்தையும், பேரழகினையும் கண்டு மகிழ்ந்த சிவபிரான் அவளை நோக்கி நீயும் பூலோகத்தாரால் தெய்வமாக போற்றப்படும் தகைமை உடையவளாதலால் கற்புக்கரசியாக விளங்கவும், மானிடர் உன்னைப் பத்தினித் தெய்வமாக வணங்கவும் ஒரு வரம் தந்தோம் என்றனர். அவ்வேளை, தன் தவப் பேற்றினால் சிவனைப் போல் நெற்றியிலும் கண் கொண்டிருந்ததால் கர்வம் கொண்ட பாண்டிய மன்னனிடமிருந்து அக்கண் நீங்கிவிடல் வேண்டும் என்று தனக்கிருந்த நீண்ட நாள் ஆசையை பார்வதி தேவியும் இறைவனிடம் கூறினாள்.

அவ்விருப்பினை நிறைவேற்றுதல் வேண்டும் என்று தேவி வேண்டிக் கொண்டதற்கிணங்க பராசரர் மகளுக்கு பாண்டிய நாடு பூலோகப் பிறப்பிடமாகியது. ஒருபோது அந்நாட்டிலே புதுமை வாய்ந்த மாங்கனி ஒன்று காணப்பட்டது. அதனைப் பறிக்க மரத்தில் ஏறினோர் கண்களுக்கு மறைந்த அந்த புதுமைக்கனியை அறிந்த அரசன் முனிவர் சிலரின் யோசனைப்படி அம்பினால் அதனை அறுத்து வீழ்த்தினான். நிலத்தில் வீழாது அந்தரத்தில் தொங்கிய அம்மாங்கனியைப் பிடிக்க அரசன் நீட்டிய கைகளில் அக்கினிப் பிழம்பாக அம்மாங்கனி கையில் வீழ்ந்தது. உடனே அரசன் பதைபதைத்து நிலத்தினிடை கீழே போட்டுத் தன் கையால் நெற்றியின் வியர்வையைத் துடைத்தான். மாங்கனியைத் தொட்ட கை பட்டதும் அரசனது நெற்றிக்கண் மறைந்து போயிற்று. நிலத்தில் விழுந்த கனியினை அரசன் தன் மனைவியிடம் கொடுத்து நடந்ததைச் சொல்லி வருந்தினான். அவளும் தெய்வத்தன்மையான அக்கனியைப் பொற்குடத்திலிட்டு வைத்தாள்.

மூன்றாம் நாள் அக்குடத்தைத் திறந்து பார்த்த போது அதனுள் மாங்கனிக்குப் பதிலாக அழகிய பெண் இருப்பதைக் கண்டு அனைவரும் வியந்தனர். இந்நிகழ்ச்சி "பீடுறும் மதுரை அரசொடியக் கருமையாகும்" என்று கணிதர் சொன்னபடி அறிந்த மன்னன் அழகிய பேழையொன்றில் குழந்தையையிட்டு கடலில் விட்டெறிந்தான்.

இவ்வேளை காவிரிப் பூம்பட்டினத்தில் மாசாத்துவன், மாநாய்கன் ஆகிய வணிகப் பெருமக்கள் வசித்தனர். மாசாத்துவனுக்கு கோவலன் பிறந்திருந்தான். மாநாய்கன் பிள்ளைப் பேறின்மையால் வருந்திக் கொண்டிருந்த வேளை கடற்கரையில் பேழையில் கிடைத்த குழந்தையை தன் குழந்தையாக்கிக் கொண்டான். பிள்ளையில்லாமல் ஒளியிழந்து இருந்த கண்களுக்கு ஒளி கொடுத்து துன்பம் போக்கியமையினால் கண்ணகி எனும் பெயர் சூட்டி வளர்த்தான்.

"ஆறாறுசமயங்களாயுதித்தாயே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரனாரிடபாகம்அமர்ந்திருந்தாயே
வீறானமாங்கனியதாய்உதித்தாயே
வெற்றிபுரிமீனவன்விழிமறைத்தாயே
கூறானகோவலன்தனையுகந்தாயே
கூடல்மதுராபுரியைநீயெரித்தாயே''

(கல்யாணக்கால் சுற்றுக்காவியம், பா.3)

''பொன்னுலவு மேனியழ குங்களப மூலையும்
புண்டரிக மொத்தமுக மும்புருவ அழகும்
மின்னுலவு சிற்றிடையி னிற்துகி லுடுத்த
மென்மையழ யெங்கருணை வெண்ணகையி னழகும்
மன்னிய மணிக்கனக பூணார வழகும்
மைக்குழல் முடித்தவழ கும்வடிவு முடைய
கன்னியென வந்தெனது கண்ணைத் துடைத்த''

(ஊர்சுற்று காவியம், பா.67)

''திங்கள்போ லுந்திரு நுதலையுடை யாளைச்
செந்தா மரைமுகத் தாளைஒப் பாளைப்
பொங்குபுக ழாலுயர்ந் தபொற்றி ருவைப்
பொய்யென்ன மெய்யாக வந்துதித் தவளைத்''
(ஊர்சுற்று காவியம், பா.21)

''..................................................
பார்வளரும் பைந்தமிழ்சேர் பைங்கிளியே பார்பதியே
தத்துபரி மீனவனை வெல்லவென்று மேதினியில்
மாதுமையாள் தானே வரவிடுத்த தையலே
தேன்பொதிந்த மாவின் கனியாகி மாறன் விழிமறைத்து
மேவுங்குழவியதாய் மெய்ப்பேழைக் குள்ளிருந்து''

இப்பாடல்கள் மூலம் சிவனின் சக்தியாக கண்ணகியுள்ளாள் எனக் கூறப்படுவதுடன், கண்ணகி உமையாகவும் கூறப்படுவதோடு மாங்கனியாக பிறப்பெடுத்து வந்ததாகவும் கூறப்படுகிறது.

## நிறைவுரை

மட்டக்களப்புத் தேசத்தில் கண்ணகியம்மன் தொடர்பான பலவகையான இலக்கியங்கள் தோன்றி யுள்ளன. அவற்றுள் பெரும்பாலானவை மட்டக்களப்பு கண்ணகியம்மன் கோயில்களை மையப்படுத்தி யெழுந்தவை. இவ்விலக்கியங்களில் கண்ணகி சக்தியின் அம்சமாகவும் பேராற்றல் மிக்கவளாகவும் வெளிப்படுத்தப்படுகின்றாள். அவ்வாறு கண்ணகியைச் சக்தியின் அம்சமாகப் போற்றும் இலக்கியங்களுள் கண்ணகி வழக்குரை தனித்துவமானது. கண்ணகியிடம் சாதாரண பெண்ணிடம் காணப்படாத தெய்வீக சக்தியைக் கண்ணகி வழக்குரை குறிக்கின்றது. கண்ணகி வழக்குரையில் கூறப்படும் கண்ணகியின் அவதாரம் பற்றிய செய்திகள் இதனை உறுதி செய்கின்றன. இந்நூலில் உயர் சக்தியின் பண்புகள் அனைத்தும் கண்ணகையம்மனுக்கு ஏற்றி போற்றப்பட்டுள்ளது. மட்டக்களப்புத் தேசத்தில் கண்ணகி சக்தியின் ஓர் அம்சமாகவே கருதப்படுகின்றாள். அவளின் ஆற்றல் எல்லை கடந்தது என மக்கள் நம்புகின்றனர்.

*****


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'கண்ணகி வழக்குரையில் அம்மன் பிறந்த கதை'

# ஆய்வு மதிப்பீட்டுரை

**பேராசிரியர் திரு. செ.யோகராசா**

- இவ்வருட ஆய்வரங்கு 'கண்ணகி வழக்குரை'யிலே கவனிப்பிற்குரிய முக்கியமான நான்கு விடயங்கள் பற்றியமைந்திருப்பது பாராட்டிற்குரியது. இவ்வடிப்படையில் திருமதி சாந்திகேசவனது ஆய்வுரை "கண்ணகி வழக்குரையில்" அம்மன் பிறந்த கதை பற்றியதாகின்றது.

- சிலம்பதிகாரக் கண்ணகிக்கும் கண்ணகி வழக்குரைக் கண்ணகிக்கும் இடையிலான அடிப்படை வேறுபாட்டை முதலில் எடுத்துக்காட்டிய ஆய்வாளர் தொடர்ந்து இரத்தினச் சுருக்கமாக பௌத்த இலக்கியங்கள் கூறுவனவற்றைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். அதற்கு முன்னர் தமது உரையில் பழங்குடிகளிடையே வழங்கிவரும் கோவலன் சரித்திரம் (கோவலன் கூத்து) கூறும் கண்ணகி பற்றியும் எடுத்துக் காட்டியிருந்தார். ஈழத்தின் பிற தேசங்களில் வழங்கும் கோவலனார் கதை, சிலம்பு கூறல் என்பனவற்றில் வரும் கண்ணகி பிறப்பு பற்றியும் குறிப்பிடுகின்றார்.

- மேற்கூறியவை அனைத்தும் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போன்று மிகச் சுருக்கமான குறிப்புகளே.

- இறுதியாக கண்ணகி வழக்குரையில் அம்மன் பிறந்த கதை பற்றி மிக விரிவாக விளக்குகின்றார்.

- இச் சபையினுள்ள பொது மக்களை மனங்கொண்டு விரிவான உரையாற்றியமையால் போலும் தமது ஆய்வுரையில் புலமையாளரை மனங்கொண்டு எதுவும் குறிப்பிடவில்லை!

- அவ்வாறு நோக்கும் போது அம்மன் பிறப்புப் பற்றி நுண்ணாய்வு செய்திருக்கின்ற வாய்ப்பும் கோட்பாட்டு நோக்குகளிலே,
(உ+ம்:- மானிடவியல் நோக்கு, நாட்டார் வழக்காற்றியல் நோக்கு, தொல் படிமவியல்நோக்கு)
அணுகும் வாய்ப்பும் தவறவிடப்பட்டுள்ளமை தெரியவருகின்றது!

- அதே வேளையில் மட்டக்களப்பு பிரதேசம் சார்ந்து களஆய்வுகள் செய்ய வேண்டிய அத்தியாவசியமும் உள்ளது. அவ்வேளையில், செட்டிபாளையத்தில் "மாம்பழம் குதிச்ச பள்ளம்" என்றொரு வாய்மொழிக் கதை நிலவிவருவது போன்று வேறுகதைகளும் அகப்படக் கூடும்! அத்ததைய ஆய்வுத் தருணங்கள் "கண்ணகி அம்மன்" பற்றிய ஆய்வுகளில் புதிய பரிமாணமும் ஏற்பட வழிகோலுமென்று கருதுகின்றேன்!

- ஆய்வு மதிப்பீடுகளில் கூறப்படும் குறிப்புகள் ஆய்வாளர்களால் உள்வாங்கப்பட்டு செம்மையான கட்டுரை வடிவத்திலே நூலுருப் பெறுவது அவசியமானது! அன்றேல் இத்தகைய ஆய்வு மதிப்பீடுகள் விழலுக்கிறைத்த நீரன்றோ!

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆய்வுரை II

# சிலப்பதிகாரம் - கண்ணகி வழக்குரை : கொலைக்களக் காதை குறித்த ஓர் ஒப்பியல் நோக்கு

திரு. பாஸ்கரன் சுமன்

## அறிமுகம்

சிலப்பதிகாரம் 'கொண்டதும் கொடுத்ததுமான காப்பியம். நாட்டார் மரபிலிருந்து எடுக்கப்பட்ட கதைமரபு சிலப்பதிகாரக் காப்பியமாக வடிவம் கொண்டது. கோவலன் தன் மனைவியான கண்ணகியைத் துறந்து கணிகையர் குலத்தவள் ஒருத்தியுடன் கூடி வாழ்ந்தான், அக்கண்ணகி தன் கணவன் கொலையுண்டு இறந்தபோது பிரிவைத் தாங்காது முலையொன்றைத் திருகி எறிந்தாள் (புறம் : 144, நற்றிணை : 216) ஆகிய கதை மரபுகள் நாட்டார் மரபில் பயிலப்பட்டு வந்தவை என்பது அறிஞர் துணிபு. இளங்கோவின் கவிப் புலமையால் காதைகளாகவும் காண்டங்களாகவும் மேற்படி கதைமரபு விரிவுபெற்றது.

பிற்பட்ட காலத்தில் இளங்கோவின் படைப்பினை அடிப்படையாகக் கொண்டு பல படைப்புகள் தமிழ் மரபில் எழலாயிற்று. அவை செவ்வியல் ஆக்கங்களாகவும் தமிழ் நாட்டார் மரபிற்கான இலக்கியநிலைப்பட்ட படைப்புகளாகவும் ஈழத்திலும் தமிழ்நாட்டிலுமாக எழுந்துள்ளன. அப்படைப்புகள் சிலப்பதிகாரத்தை அடிப்படையாகக் கொண்ட புத்தாக்கங்களாக விளங்குகின்றன. தமிழ்நாட்டில் வெளிவந்த படைப்புகளில் கீழ்வருவன சுட்டிக்காட்டத்தக்கன :

01. புகழேந்திப் புலவரின் பெயரால் வழங்கிவரும் கோவலன் கதை
02. சங்கரதாஸ் சுவாமிகள் - கோவலன் சரித்திரம் (இசை நாடகம்)
03. பாரதிதாசன் - கண்ணகி புரட்சிக் காப்பியம்
04. கரந்தை சிவசுந்தரம் - மாடலன் (நாடகம்)
05. சாளை இளந்திரையன் - சிலம்பின் சிறுகதை (கவிதைக் கதை)

இதுபோன்று ஈழத்திலும் சிலப்பதிகாரக் கதையை அடிப்படையாகக் கொண்டு பல படைப்புக்கள் எழுந்துள்ளன.

01. கண்ணகி வெண்பா - கு.முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை
02. கண்ணகி கதை - சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவர்
03. சி.கணபதிப்பிள்ளை - கண்ணகி தோத்திரம்
04. இளங்கோ மறந்தது (ஓரங்க நாடகம்) - இலங்கையர்கோன்

கண்ணகையம்மன் சடங்கோடு இணைவுபெற்ற வகையில் புராணபடனமாக நிகழ்த்தப்பட்டு வரும் இலக்கியப் பிரதிகளான கண்ணகி வழக்குரை, கோவலனார் கதை, சிலம்பு கூறல் என்பனவும் கிழக்கிலங்கை, முல்லைத்தீவுப் பிரதேசங்களில் கண்ணகையம்மன் குறித்து எழுந்த காவியம், அகவல், குளுத்திப் பாடல் முதலிய பெயர்களில் வழங்கிவரும் நாட்டார் நிலைப்பட்ட படைப்புகளும் இவ்வகையில் சுட்டத்தக்கன.

மேற்படி படைப்புக்கள் யாவும் சிலப்பதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பினும் பெரும்பாலானவை புத்தாக்கங்களாக அமைந்துள்ளன. அதாவது, சிலப்பதிகாரக் கதையிலிருந்து படைப்பாளிகள் தமது நோக்குநிலைக்கேற்ப புதுமைகளை நிகழ்த்தியுள்ளனர். நாட்டார் நிலைப்பட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்த படைப்புகளுக்கும் இக்கொள்கை பொருந்தும். இப்பின்னணியில் 'கண்ணகி வழக்குரை' சிலப்பதிகாரக் கதைமரபிலிருந்து வேறுபடும் - புத்தாக்கமாக வெளிப்படும் தன்மை இங்கு ஆய்வுக்குட் படுத்தப்படுகிறது. அத்தகைய ஆய்வுக்கான முன்வரைவு கொலைக்களக் காதையை மையப்படுத்தி மேற்கொள்ளப்படுகிறது.

## கொலைக்களக் காதை

ஈழத்தில் கண்ணகி இலக்கிய மரபுகள் குறித்துப் பேசும்போது கண்ணகி வழக்குரை, கோவலனார் கதை, சிலம்பு கூறல் ஆகிய மூன்று படைப்புகளும் சகலரதும் கவனத்தைப் பெற்றுவிடுகின்றன. மேற்குறித்த படைப்புகளில் ஏதாவதொன்றின் உள்ளடக்கம் குறித்த பார்வையாயினும் சரி, அதனை மையப்படுத்திய சமூக - சமயநிலைப்பட்ட ஆய்வுகளாயினும் சரி ஏனைய இரு படைப்புகளையும் ஊடறுத்தே செல்லும். இதற்கு மேற்குறித்த மூன்று படைப்புகளுக்கும் இடையே காணப்படும் உள்ளடக்க, சமூக இயங்கியல் நெருக்கப்பாடே காரணம். இந்த நெருக்கப்பாட்டைப் புரிந்துகொள்ளும் போதே சிலப்பதிகாரத்தில் இருந்து வேறுபட்ட கதை மரபுகள் இம்மூன்று பிரதிகளிலும் இடம்பெறுமாற்றையும் இம்மூன்று பிரதிகளுக்கிடையே காணப்படும் தனித்துவத்தினையும் வேறுபிரித்து அறிய முடியும். இந்தப் பொதுமரபிலிருந்து விலகி நிற்கும் ஆய்வுகள் குறை மதிப்பீட்டையே உண்டுபண்ணும்.
கண்ணகி வழக்குரையானது வரம்பெறு காதை முதல் குளிர்ச்சிக் காதை வரையான பதினொரு காதைகளைக் கொண்டுள்ளது (சில காதைகளுக்குள் உப பிரிவுகளும் உள்ளன). கொலைக்களக் காதையானது ஒன்பதாவது காதையாக அமைந்துள்ளது. அக்காதையினுள்,

அ) சிலம்பு கூறல்
ஆ) கொலைக்களக் கதை
இ) அம்மன் கனாக் கண்ட கதை
ஈ) உயிர் மீட்புக் கதை

ஆகிய நான்கு உட்பிரிவுகள் காணப்படுகின்றன. இவ்விடத்தில் கோவலனின் கொலை குறித்துச் சிலப்பதிகாரம், கோவலனார் கதை, சிலம்பு கூறல், கண்ணகி வழக்குரை என்பன பதிவுசெய்யும் செய்திகள் பற்றிய புரிந்துணர்வு அவசியம் வேண்டப்படுகிறது. மேற்படி ஆய்வுத் தேவையை கருத்திற்கொண்டு அவை தொடர்பான சுருக்கச் செய்திகள் முன்வைக்கப்படுகின்றன.

**சிலப்பதிகாரம் (கொலைக்களக் காதை) :** மாதரி என்பவள் கண்ணகியையும் கோவலனையும் தனது மனைக்கு அழைத்துச் சென்றாள். அவள் தன் மகளாகிய ஐயை என்பவளைக் கண்ணகிக்கு உதவியாக இருக்குமாறு பணித்தாள். கண்ணகி நன்கு சமைத்து கோவலனுக்கு உரிய பூசைகளை நிகழ்த்திப் பரிமாறினாள். இனிது உணவருந்திய கோவலன், கண்ணகியைப் பெரிதும் பாராட்டி மகிழ்ந்தான். பின்னர் கண்ணகியின் காற்சிலம்பு ஒன்றைக் கையில் கொண்டு சென்று விற்றுவருவதாகக் கூறிப் புறப்பட்டான். தெருவில் பொற்கொல்லன் ஒருவனிடம் தன்கையிலிருந்த சிலம்பினைக் கோவலன் காட்டினான். கோப்பெருந்தேவியினது சிலம்பினைக் கவர்ந்திருந்த அப்பொற்கொல்லன், பழியைக் கோவலன் மீது சுமத்த எண்ணினான். அவன் கோவலனை ஒரு புறத்தே நிற்கச் செய்து, மன்னனிடம் சென்று தேவியின் சிலம்பைக் கவர்ந்த கள்வன் பிடிபட்டுள்ளனன் என்றான். உடனே அரசன் "கள்வனைக் கொன்று சிலம்பினைக் கொணர்க" என்று ஆணையிட்டான். பொற்கொல்லனோடு சென்ற காவலர்களில் ஒருவன் கோவலனை வெட்டி வீழ்த்தினான்.

**கோவலனார் கதை, சிலம்பு கூறல் :** இவ்விரு படைப்புகளும் கோவலன் கொலை செய்யப்பட்ட நிகழ்வை ஒரே விதமாகவே சுட்டுகின்றன. இப்படைப்புகளில் கொலைக்களக் காதை என்ற பகுதி அமைப்பியல் ரீதியில் வழங்கப்படவில்லை. சிலம்பு கூறல், உயிர் மீட்சிக் கதை என்ற இரு தலைப்புகளின் கீழ் (இரு படைப்புகளிலும்) மேற்படி செய்திகள் கூறப்பட்டுள்ளன. ஆயினும், இவை கூறும் ஒரு சில


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்சங்கள் கண்ணகி வழக்குரையிலிருந்து மாறுபட்டு நிற்கின்றன. கோவலனார் கதை, சிலம்பு கூறல் ஆகியன விபரிக்கும் கதையம்சம் வருமாறு :

கண்ணகியிடம் சென்ற கோவலன் கண்ணகியை அழைத்துக்கொண்டு மதுரைக்குப் புறப்படுகிறான். காட்டு வழிகள் பலவற்றையும் கடந்து மதுரைக்கு அண்மையில் உள்ள இடையர் சேரிக்குச் சென்றபோது இவர்களைக் கண்டு அனுதாபங் கொண்ட இடைச்சியொருத்தி ஆதரவளிக்கிறாள். இடைச்சியின் இல்லத்திலே கண்ணகி சமையல் செய்து கோவலனுக்குக் கொடுக்கிறாள். இடைச்சியின் வீட்டில் நீண்ட நாட்கள் தங்குவதை விரும்பாத கோவலன், மதுரைக்குச் சென்று சிலம்பை விற்றுவர எண்ணுகிறான். செம்மார் வாழுகின்ற தெருவில் சென்று சகுனம் கேட்டு வருமாறு கண்ணகி கூறுகிறாள். செம்மார் வாழும் தெருவுக்குச் சென்று செம்மான் ஒருவனின் வீட்டின் முன் சகுனத்தை அறிவதற்கு நிற்கிறான். அப்போது செம்மானிடம் அடிவாங்கிய செம்மாத்தி "அங்கமிரண்டாய் கிடப்பாய், அரசனுன்னை முனிந்திடுவான், உன்கையிற் பொருளாலே உனக்குப் பழிவரும், மழுவுக்கிரையாவாய்" என்று செம்மானை ஏசுகிறாள். இதனைப் பொருட்படுத்தாது கண்ணகியை இடைச்சியிடம் அடைக்கலமாகக் கொடுத்து விட்டு மதுரைக்குப் புறப்படுகிறான். செல்லும் வழியில் குறத்தி ஒருத்தியும் கோவலனுக்கு நடந்த விடயங்களையும் நடக்கவிருக்கும் துன்பங்களையும் குறியாகக் கூறுகிறாள். அதனையும் பொருட்படுத்தாது மதுரை சென்று சிலம்பை விலை கூறுகிறான். பலரும் அந்தச் சிலம்பை வாங்கும் தகுதி நம்மிடம் இல்லை என்கின்றனர். கணிகையர் தெருவுக்குச் சென்றபோது அவர்கள் சிலம்பை அபகரிக்கத் திட்டமிடுகின்றனர். அவர்களிடமிருந்து விலகி பயணத்தைத் தொடர்கிறான்.

மதுரைக்குச் செல்லும் வழியில் மாணவர்களுக்குப் பாடம் கற்பித்துக் கொண்டிருந்த ஆசிரியர் ஒருவரிடம் பலன்களை விசாரிக்கின்றான். நற்பலன்கள் இல்லையென்றும் மதுரைக்குச் செல்வதால் கேடு விளையும் என்றும் கூறுகிறார். மனக்கலக்கமுற்ற கோவலன் வேறு வழியின்றி பயணத்தைத் தொடர்கிறான்.

மதுரையில் பாண்டிய மன்னனின் மனைவியின் காற்சிலம்பு பழுதடைந்துவிடுகிறது. அதனைச் செப்பனிட்டுத் தருமாறு பொற்கொல்லனிடம் கொடுக்கிறான். அவன் அதனைச் செப்பனிட்டு வீட்டுச் சுவரில் உலரவிட்டுத் தனது பிள்ளைகளைக் காவலுக்கு இருத்திவிட்டுச் செல்கிறான். காவலுக்கு இருந்த பிள்ளைகள் அயல் வீட்டுச் சிறார்களுடன் விளையாடச் சென்றனர். விளையாட்டின்போது பொற்கொல்லனின் மகன் ஆலமரத்தில் இருந்த கருடனின் குஞ்சொன்றைப் பிடிக்கிறான். அது தவறிக் கீழே விழுந்து இறந்து விடுகிறது. துன்பமடைந்த தாய்க் கருடன் சிலம்பைத் கவர்ந்து செல்கிறது. இந்நிலையில் செட்டியார் ஒருவன் ஒற்றைச் சிலம்புடன் வந்து நிற்கும் செய்தியை மகன் அறிவிக்கிறான். பொற்கொல்லன் இதனைச் சாதகமாகப் பயன்படுத்திக் கோவலனைக் கொலைக் குற்றம் சாட்டுகிறான். மன்னன் தன் மனைவியிடம் 'இது அவளுடைய சிலம்பு தானா' என்று அறிந்து வரும்படி பொற்கொல்லனை அனுப்புகிறான். அவள் தன்னுடையதல்ல என்று கூறியனுப்புகிறாள். ஆயின், பொற்கொல்லன் பாண்டிமாதேவி தன்னுடையதே என்று கூறியதாக மன்னனிடம் பொய்யுரைக்கிறான். மன்னன் யானையை ஏவிக் கொலை செய்யத் தூண்டுகிறான். யானை கொல்ல மறுக்கிறது. பின் மழுவர்களை ஏவிக் கொலை செய்கிறான்.

மேற்குறிப்பிட்ட கதையம்சம் இங்கு விரிவாக இடம்பெற்றிருப்பினும் ஆய்வுத் தேவைக்கு தவிர்க்கமுடியாததாகிறது. மேற்படி புரிதலோடு கண்ணகி வழக்குரையின் பகுதிகளை சிலப்பதிகாரத்தோடும் ஏனைய இரு பிரதிகளோடும் ஒப்பு நோக்குவதே பயனுடையது.

## அமைப்பு சார் வேறுபாடு :

கோவலனார் கதை, சிலம்பு கூறல் ஆகிய இரு பிரதிகளும் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்து காட்டு வழியாக நடந்து வந்தமையையும், இடைச்சியின் வீட்டில் கண்ணகியை அடைக்கலமாகக் கொடுத்துச் சென்ற செய்தியையும் சிலம்பு கூறல் எனும் பகுதியிலேயே கூறுகின்றன. ஆனால், கண்ணகி


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வழக்குரை முதற்செய்தியை 'வழிநடை' என்ற பகுதியிலும் பின்னைய செய்தியை 'அடைக்கலக்காதை' என்ற பகுதியிலும் விளக்குகிறது.

இம்மூன்று பிரதிகளிலும் சிலப்பதிகார மதுரைக்காண்டத்தின் அடைக்கலக்காதை வரையான செய்திகள் சுருக்கமான முறையில் முதலில் விபரிக்கப்பட்டுள்ளமையும் அதன் பின் மாதரி அடைக்கலம் கொடுத்த செய்தி கூறப்படுகின்றமையும் பிறிதொரு உண்மையைப் புலப்படுத்தும். கோவலனார் கதை, சிலம்பு கூறல், கண்ணகி வழக்குரை ஆகிய பிரதிகள் மாதவியுடன் கோவலன் கொண்ட உறவு, அதிலிருந்து விடுபட்டு மதுரை வந்தமை, கொலை செய்யப்பட்டமை, உயிர் மீண்டமை, கண்ணகி வழக்குரைத்தல், குளிர்ச்சியடைதல் ஆகிய விடயங்களுக்கே அழுத்தம் கொடுத்துள்ளன. சிலப்பதிகார துணைக்கதைகளையோ விபரிப்புக்களையோ அவை கருத்திற்கொள்ளவில்லை என்பதே அவ்வுண்மையாகும். சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் காடுகாண் காதை, வேட்டுவவரி, புறஞ்சேரியிறுத்த காதை, ஊர்காண்காதை ஆகியவற்றின் செய்திகள் விபரிக்கப்படவில்லை. மாதவியிடம் இருந்து பிரிந்து வந்த கோவலன் சிலம்பை விற்க முயற்சிப்பதும் கொலை செய்யப்படுவதுமே முக்கியம் பெற்றுள்ளன.

ஏனைய இரு பிரதிகளும் சிலம்புகூறல் என்ற பகுதிக்குள் மேற்படி கதைமரபை உள்ளடக்க, கண்ணகி வழக்குரை வழிநடை, அடைக்கலக்காதை என்ற பகுதிகளில் உள்ளடக்கியுள்ளமை ஓரளவிற்கு அமைப்பு ரீதியில் சிலப்பதிகாரத்தைத் தழுவ முயற்சித்தமையைப் புலப்படுத்துகிறது. இது போன்ற பல சான்றுகள் கண்ணகி வழக்குரையில் உள்ளன.

இதுபோலவே மற்றுமொரு விடயமும் குறிப்பிடத்தக்கது. மதுரைக்குச் சென்று சிலம்பை விற்றுவர எண்ணியபோது செம்மார் வாழுகின்ற தெருவில் சென்று சகுனம் கேட்டு வருமாறு கண்ணகி கூறுவதும் கோவலன் துர்ச்சகுனத்தை அறிந்து வருவதும் குறத்தி குறி கூறுவதும் ஆகிய அம்சங்கள் மூன்று பிரதிகளிலும் கூறப்பட்டுள்ளன (கண்ணகி வழக்குரை 'வழிநடை' என்னும் பகுதியில் கூறுகிறது). அத்துர்ச்சகுனங்கள் சிலப்பதிகாரத்தில் நின்றும் வேறுபட்ட வகையில் புத்தாக்கமாகக் கூறப்பட்டுள்ளன. சிலப்பதிகார கொலைக்களக்காதை சிலம்பு விற்கச் செல்லும்போது எருது ஒன்று எதிரே பாய்ந்து சென்றதாகவே ('இமில் ஏறு எதிர்ந்தது இழுக்குஎன அறியான்') துர்ச்சகுனத்தைப் பதிவுசெய்துள்ளது.

## கண்ணகி வழக்குரை (சிலம்பு கூறல்)

கண்ணகி வழக்குரை கொலைக்களக் காதையில் இடம்பெறும் சிலம்பு கூறல் எனும் பகுதியில் விபரிக்கப்படும் செய்திகள் இங்கு ஒப்பியல்நோக்கில் ஆராயப்படவுள்ளன. கண்ணகி வழக்குரையில் கோவலன் சிலம்பை விலை கூறியவாறு பல தெருக்களுக்கும் செல்லுதல், சிலம்பைப் பார்த்தவர்கள் அச்சிலம்பு விலை மதிக்க முடியாதது என்று கூறி அகன்று போதல், பின் கணிகையர் தெருவை அடைதல், கணிகையர் அதனை அபகரிக்க முயலுதல் ஆகிய செய்திகள் பேசப்படுகின்றன. சிலம்புகூறல் பகுதியில் 40 மேற்பட்ட செய்யுட்களில் கணிகையர் கோவலனை அழைப்பதும் அதற்கு அவன் பதிலுரைப்பதும் கடிந்து பேசுவதும், கணிகையர் ஒழுக்கத்தைக் கோவலன் வெறுப்பதுமான விடயங்கள் சற்று விரிவாகப் பேசப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிலப்பதிகாரத்தில் கோவலன் சிலம்புகூறி விற்ற நிகழ்வு பதிவாகவில்லை. மதுரை நோக்கிச் சென்ற கோவலன் உயர்ந்த ஆடை அணிந்தும் கையில் பிரம்பு ஏந்தியும் வருகின்ற பொற்கொல்லனைக் கண்டு அவன் பாண்டிய மன்னனிடம் செல்வாக்குடையவனாக இருத்தல் வேண்டும் எனக் கருதி சிலம்பை விற்றுத் தருமாறு அவனிடம் வேண்டி நின்ற செய்தியே பதிவாகியுள்ளது. ஆயின், ஈழத்தில் தோன்றிய சிலப்பதிகாரப் படைப்புகள் (கண்ணகி வழக்குரை, கோவலனார் கதை, சிலம்பு கூறல்) கோவலன் சிலம்பு கூறி விற்றதாகப் பதிவுசெய்கின்றன.

வழியில் கண்ட பலரும் சிலம்பை வாங்கும் தகுதி தமக்கில்லை என்று கூறுதலும் கணிகையர் அதனை அபரிக்க முயலுதலுமே சிலம்பு கூறி விற்கும் கதைப்பகுதியில் விரிவாகப் பேசப்படுகின்றன. ஓரிடத்தில் மாத்திரம் கண்ணகி வழக்குரை ஏனைய இரு பிரதிகளில் இருந்து வேறுபடுகிறது. இரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிகளும் கண்ணகியின் அருளால் சிலம்பைத் தொட முடியாத நிலை கணிகையருக்கு ஏற்படுகிறது எனக் குறிப்பிட, கண்ணகி வழக்குரை கோவலன் அவர்களைக் கடிந்து பேசுவதாகக் கூறுகிறது; அச்செய்தி சற்று விரிவாகவும் எடுத்துரைக்கப்படுகிறது. இந்நிலையில் கீழ்வரும் மூன்று விடயங்கள் கவனிப்புக்குரியதாகின்றன :

01. இப்படைப்புக்களில் கோவலன் மதுரையில் சிலம்பை விற்பதற்கு முயற்சித்தமை விரிவாகப் பேசப்படுதல்.
02. கணிகையர் அதனை அபகரிக்க முயலுதலும் கோவலன் அவர்களை விலக்கி நடத்தலும்.
03. கண்ணகி வழக்குரை கோவலனைத் தூயவனாகக் கட்டமைக்க முயலுதல்.

இத்தகைய கட்டமைப்புக்குத் துணையாக நின்ற சிந்தனையோட்டங்களை ஓரளவு ஊகித்துக் கொள்ள முடியும்.

01. கோவலன் சிலம்பு விற்கச் சென்றே கொற்கொல்லனிடம் அகப்பட்டுக் கொண்டான். அவனது இறப்பிற்குச் சிலம்பே கருவியாகியது. இந்த நிகழ்வு ஏற்படுத்திய தாக்கம் மேற்படி கதைமரபு (சிலம்பு கூறல்) படைப்பில் இடம்பெறவும் அது விரிவாகப் பேசப்படவும் காரணயாயிற்று.

02. பரத்தையரோடு கோவலன் கொண்டிருந்த உறவால் சீரிழந்து போன கண்ணகியின் கதையைச் சிலப்பதிகாரம் எடுத்துரைக்கிறது. இந்த அம்சம் ஏற்படுத்திய தாக்கம் - பரத்தையர் உறவு துன்பத்தை உண்டுபண்ணும் என்ற உணர்வு மேற்படி படைப்புகளில் கணிகையரின் செயற்பாட்டையும் நடத்தையையும் விரிவாக சித்திரித்து, அவர்களை இழிவானவர்களாகக் காண்டத் தூண்டியுள்ளது.

    மூன்று படைப்புகளிலும் இடம்பெறும் 'கோவலரைப் பொன்னுக்கு மறித்த கதை' இதற்கு இன்னுமோர் சான்றாகும். கோவலன் மாதவியோடு வாழ்ந்து அனைத்துச் சொத்துக்களையும் இழந்து வறியவனாகிறான். மாதவிக்குக் கொடுக்க வேண்டிய பொன்னைக் கொடுக்க முடியாதவனாகின்றான். கோவலன் பொன் தராததால் கோபம் கொண்டு மாதவியின் தாய் பொன்னை வாங்கி வருமாறு தூண்டுதலும் அவ்வாறு இயலாதவிடத்து அவனைத் துரத்திவிடுமாறு மாதவியை வற்புறுத்துவதுமாக அக்கதை அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சிலப்பதிகாரத்தில் மாதவி, கோவலன் மீது கொண்ட காதலும் அவனைப் பிரிந்ததும் அவள் அடைந்த துயரும் பதிவாக, இப்பிரதிகள் மாதவியை எதிர்நிலையிலேயே படைத்துக் காட்டுகின்றன.

03. சிலப்பதிகார கொலைக்களக் கதை, மாதவியிடமிருந்து மீண்டு வந்த கோவலன் மதுரைக்குப் பயணமாகியபோது மாதரியின் வீட்டில் தங்கினான் எனச் சித்திரிக்கின்றது. அதனைச் சித்திரித்துக்காட்டும் பகுதியில் கோவலன் கண்ணகியிடம் தனது செயல் குறித்து வருந்தி உரைக்கும் பகுதி இடம்பெறுகின்றது. அப்பகுதி கோவலனைத் தூயவனாகக் கட்டமைக்க முயல்கிறது. இத்தகைய கட்டமைப்பின் மாற்று வடிவமொன்றை கண்ணகி வழக்குரையில் அவதானிக்கலாம். சிலம்பினை அபகரிக்க முயலும் பரத்தையிடம் கோவலன் கூறும் பதில்களாக வரும் பகுதிகள் அவற்றை எடுத்து விளக்கும்.

கல்லைக் கடிந்தற வேமெல்ல லாமோ
காஞ்சுரங் காய்தனைப் பரிசிக்க லாமோ
மல்லைப் பொருந்துமை வேல்விழி யாரே
மனதாக வேண்டாமோ மங்கைநல் லீரே
குழிகண்டு பகலே விழுவார்க ளுண்டோ
குடிகேடு காணஉம் பக்கலே வாரோம்
பழிகேடு நம்முடன் பேசவும் வேண்டாம்
பண்டு திரிந்தவன் தன்னோடே சாரீர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கண்ணகி வழக்குரை : கொலைக்களக் காதை : 63)

புள்ளிமா னோடே புலியுற வுண்டோ
பூனைக ளோடே எலியுற வுண்டோ
கொள்ளிக ளோடே உடலுற வுண்டோ
கோமாளி யோடே நல்லுற வுண்டோ
முள்ளினத் தோடே பாதமுற வுண்டோ
மோகமுஞ் செய்து பகையை விளைக்கும்
கள்ளிக ளோடே நமக்குற வுண்டோ
கண்டுநீர் பிச்சிப் பசப்பாதே போகீர்

(கண்ணகி வழக்குரை : கொலைக்களக் காதை : 65)

## கண்ணகி வழக்குரை (கொலைக்களக் காதை)

கண்ணகி வழக்குரை கொலைக்களக் காதையில் இடம்பெறும் 'கொலைக்களக் கதை' எனும் பகுதியில் விபரிக்கப்படும் செய்திகள் இங்கு ஒப்பியல் நோக்கில் ஆராயப்படவுள்ளன. மதுரைக்குச் செல்லும் வழியில் மாணவர்களுக்குப் பாடம் கற்பித்துக் கொண்டிருந்த ஆசிரியர் ஒருவரிடம் கோவலன் பலன்களை விசாரிக்கிறான். நற்பலன்கள் இல்லையென்றும் மதுரைக்குச் செல்வதால் கேடு விளையும் என்றும் ஆசிரியர் கூறுகிறார். மனக்கலக்கமுற்ற கோவலன் வேறு வழியின்றி வீடு திரும்ப எண்ணுகிறான். அவ்வேளை பொற்கொல்லன் ஒருவன் எதிர்ப்படுகிறான். சிலம்பைப் பார்த்த பொற்கொல்லன் அதனைப் பாண்டிய மன்னன் தவிர எவராலும் வாங்க முடியாது, அதனைத் தான் மன்னனிடம் விற்றுத் தருவதாகக் கூறுகிறான். மன்னனிடம் சென்று கோவலனைக் கள்வன் எனக் குற்றம் சாட்டுகிறான். மன்னன் தன் மனைவியிடம் 'இது அவளுடைய சிலம்பு தானா' என்று அறிந்து வரும்படி பொற்கொல்லனை அனுப்புகிறான். அவள் தன்னுடையதல்ல என்று கூறியனுப்புகிறாள். ஆயின், பொற்கொல்லன் மன்னனிடம் பொய்யுரைக்கிறான். பாண்டிமாதேவி தன்னுடையதே என்று கூறியதாக அறிவிக்கின்றான். மன்னன் யானையை ஏவிக் கொலை செய்யத் தூண்டுகிறான். யானை கொல்ல மறுக்கிறது. மாலவன் என்னும் பெயருடைய மழுவீரனைக் கொண்டு கொலை செய்விக்கின்றான்.

கண்ணகி வழக்குரை கூறும் கொலைக்களக் கதை சிலப்பதிகாரத்தில் நின்றும் பல இடங்களில் வேறுபடுகின்றது. அவ்விடங்கள் வருமாறு :

01. மதுரைக்குச் செல்லும் வழியில் மாணவர்களுக்குப் பாடம் கற்பித்துக் கொண்டிருந்த ஆசிரியர் ஒருவரிடம் பலன்களை விசாரித்தல்.
02. மனக்கலக்கமுற்ற கோவலன் வீடு திரும்ப எண்ணிய வேளை பொற்கொல்லன் எதிர்ப்படுதலும் பாண்டிய மன்னன் தவிர எவராலும் வாங்க முடியாது, தான் மன்னனிடம் விற்றுத் தருவதாகக் கூறுதலும்
03. கோவலனைக் கள்வன் எனக் குற்றம் சாட்டியபோது மன்னன் தன் மனைவியிடம் 'இது அவளுடைய சிலம்பு தானா' என்று அறிந்து வரும்படி பொற்கொல்லனை அனுப்புதல்.
04. அவள் தன்னுடையதல்ல என்று கூறியனுப்பியதை மறுத்துப் பொற்கொல்லன் மன்னனிடம் பொய்யுரைத்தல்.
05. மன்னன் யானையை ஏவிக் கொலை செய்யத் தூண்டுதலும் யானை கொல்ல மறுத்தலும்.

மேற்படி வேறுபாட்டை நோக்குகையில் பொற்கொல்லனின் கொடிய இயல்பை மிகைப்படுத்துவதற்கான முயற்சிகள் இடம்பெற்றுள்ளமையும் எதிர்நிலையில் கோவலனின் குற்றமற்ற தன்மையை அஃறிணை ஜீவன் வாயிலாக வலியுறுத்த முனைந்துள்ளமையும் புலனாகும். இத்தகைய கதைத்திரிபுகளுக்கு நாட்டார் மனங்களே காரணமாகும் என்பது தெளிவு. குற்றவாளியைத் தூசித்தலும் நியாயவாதியைப் போற்றிப் பரவுதலும் நாட்டார் மரபே.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இங்கு ஏனைய இரு பிரதிகளையும் (சிலம்பு கூறல், கோவலனார் கதை) ஒப்புநோக்குதல் மேலும் சில புரிதல்களுக்குத் துணைசெய்யும். அப்பிரதிகளிலும் ஆசிரியரிடம் பலன் கேட்டல், மன்னனிடம் குற்றம் சாட்டியபோது மன்னன் மனைவியிடம் கருத்தறிய அனுப்புதல், மனைவி தன்னுடையதல்ல என அறிவித்தல், பொற்கொல்லன் அக்கருத்தை மாற்றியுரைத்தல், யானையைக் கொண்டு கொல்லப் பணித்தல் ஆகியன கண்ணகி வழக்குரையை ஒத்துக் கூறப்பட்டுள்ளன. ஆனால், ஓரிடத்தில் மாத்திரம் பிறிதொரு கதையம்சம் இணைக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.

ஆசிரியரிடம் பலன்களை விசாரித்து மனக்கலக்கமுற்ற கோவலன், வேறு வழியின்றி பயணத்தைத் தொடர்வதாகக் காட்டிப் பின்னர், ஒரு புதிய கதையம்சம் இணைக்கப்படுகிறது. மதுரையில் பாண்டிய மன்னனின் மனைவியின் காற்சிலம்பு பழுதடைதல் - பொற்கொல்லன் செப்பனிட்டு வீட்டுச் சுவரில் உலரவிடுதல் - பொற்கொல்லனின் மகன் ஆலமரத்தில் இருந்த கருடனின் குஞ்சொன்றைப் பிடித்தபோது அது தவறி விழுந்து இறத்தல் - தாய்க் கருடன் பழிவாங்க சிலம்பைத் கவர்ந்து செல்லல் - செட்டியார் ஒருவன் ஒற்றைச் சிலம்புடன் வந்து நிற்கும் செய்தியை மகன் அறிவித்தல் - பொற்கொல்லன் இதனைச் சாதகமாகப் பயன்படுத்திக் கோவலனைக் கொலைக் குற்றம் சாட்டுதல் என்பதே அதுவாகும்.

இரு பிரதிகளிலும் பொற்கொல்லன், கோவலனைக் கொலைக் குற்றம் சாட்டியமை சந்தர்ப்பவசத்தால் ஏற்பட்ட நிகழ்வு என விளக்கும் வகையில் ஒரு நாட்டார்நிலைப்பட்ட கதைமரபு கூறப்பட்டுள்ளது. இப்பிரதிகளின் பயில்வு நாட்டார் வட்டத்தில் நிலவியமையே இத்தகைய சேர்க்கைகளுக்கான சாத்தியப்பாட்டை உண்டுபண்ணியுள்ளது எனலாம்.

## கண்ணகி வழக்குரை (உயிர் மீட்புக் கதை)

மழுவீரனால் கொல்லப்பட்டுக் கோவலன் இறந்த பின்பு, கண்ணகி கொலைக்களம் வந்து, அவனது உயிரை மீட்டு, உரையாடி, பின் அவனைத் தேவருலகு அனுப்பி வைத்து, அரண்மனைக்கு மீண்டாள் என்று சிலப்பதிகாரத்தில் இருந்து வேறுபட்ட கதையம்சம் இம்மூன்று பிரதிகளிலும் ஓரே விதமாகக் கூறப்பட்டுள்ளது.

மழுவீரனால் கொல்லப்பட்டுக் கோவலன் இறந்தான் என்ற விடயத்தினைக் கண்ணகி கனவில் காண்கிறாள். பின், கொலைக்களத்தைத் தேடி வருகிறாள். மதுரையில் மாணவன் ஒருவன் வழிகாட்ட கொலைக்களத்திற்குச் சென்று வெட்டப்பட்டிருந்த கோவலனின் உடலைக் காண்கிறாள். இறையருளால் ஊசியும் நூலும் பெற்று உடலைப் பொருத்தி உயிர்பெறச் செய்கிறாள்.

எண்ணரிய கோவலரை இருகையி னாலணைத்து
கண்ணீ ரதனாலே கோவலரை நீராட்டி
விண்ணதனை நோக்கியிளங் காந்தளஞ்செங் கைநீட்டப்
புண்ணியஞ்சேர் கைதன்னிலே பொன்னூசி விழுந்ததுவே
ஏந்துவட முலைமடவாள் இருங்கமலக் கையாலே
பூந்துகிலின் இழைவாங்கிப் பொன்னூசி யிற்கோத்து
மாய்ந்துபட்ட கோவலரை மருங்காகத் தான்அணைத்துச்
சேர்ந்துமிக விளைப்பாகிச் சேயிழையுங் கொண்டனளே
(கண்ணகி வழக்குரை : கொலைக்களக் காதை (உயிர் மீட்புக் கதை : 285, 286)

பின், கோவலனிடம் அவனுக்கு நிகழ்ந்த கொடுமைகளைக் கேட்டறிந்து, அவனைத் தேவருலகு அனுப்பிவைத்து, அரண்மனை நோக்கிச் செல்கிறாள். மூன்று பிரதிகளும் இக்கதையம்சத்தை ஒரே விதமாகக் பதிவுசெய்துள்ளன. ஆயின், கண்ணகி கோவலனை உயிர் மீட்ட கதையம்சம் சிலப்பதிகாரத்தில் இடம்பெறவில்லை. மதுரை நகரத்து மக்கள் கோவலன் கொலையுண்டு கிடந்த இடத்தைக் காட்டுவதும், அவள் அழுது புலம்புவதும், அவனைத் தழுவி எடுத்தபோது அவன் உயிர்பெற்று எழுவதும், பின் தேவர்கள் புடை சூழ வானுலகம் செல்வதுமே கூறப்பட்டுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்துஞ்சு மார்பம் பொருந்தத் தழீஇக் கொள்ள
நின்றாள் எழுந்து நிறைமதி வாள்முகம்
கன்றியது என்று அவள் கண்ணீர் கையால் மாற்ற
அழுது ஏங்கி நிலத்தில் வீழ்ந்து ஆயிழை யாள் தன் கணவன்
தொழுதகைய திருந்தடியைத் துணைவனைக் கையால் பற்றப்
பழுது ஒழிந்து எழுந்திருந்தான் பல் அமரர் குழாத்துளான்
'எழுதொழில் மலர் உண்கண் இருந்தைக்க' எனப் போனான்

(சிலப்பதிகாரம்: ஊர்சூழ்வரி : 61 - 67)

இவ்வாறு சிலப்பதிகாரம் கட்டமைக்க, இம்மூன்று பிரதிகளும் கண்ணகி, நூலும் ஊசியும் கொண்டு உடலைப் பொருத்தி உயிர்ப்பித்ததாகக் கட்டமைத்துள்ள கதையம்சம் முற்றிலும் நாட்டார் மரபு சார்ந்தது. தமிழர் நாட்டார் மரபில் உயிர்ப்பித்தல் தொடர்பான பல கதையம்சங்கள் நிலைகொண்டு ள்ளமையைப் புரிந்துகொள்ளும்போது இவ்விடயம் மேலும் தெளிவுபெறும். இங்கு அண்ணனமார் கதைப்பாடலில் இடம்பெறும் ஒரு நிகழ்வு எடுத்துக்காட்டாகத் தரப்படுகிறது.

தமிழ்நாட்டில் அண்ணன்மார் கதையானது வழிபாடு, கதைப்பாடல், நிகழ்த்துகலை எனப் பல வடிவங்களில் நிலைகொண்டுள்ளது. இம்மூன்று நிகழ்த்துதல்களிலும் இறுதி அம்சமாக அண்ணன்மாரை உயிர்ப்பித்தல் எனும் நிகழ்வு இடம்பெறுகின்றது. வேட்டுவருக்கும் அண்ணமாருக்கும் (பொன்னர் - சங்கர்) இடையே நிகழ்ந்த போரில் பொன்னரும் சங்கரும் இறக்கின்றனர். அண்ணன்மாரின் இறப்பைத் தீக்கனா மூலம் அறிந்த தங்காள் அண்ணமாரின் படுகளம் தேடி வருகிறாள். வீரமலையில் தவம் செய்யும் பெரியகாண்டி, தங்காளின் அழுகுரல் தவத்திற்கு ஊறு செய்வதாய் எண்ணி அவளைக் கொல்ல, மந்தி, யானை, நாகம் முதலியவற்றை அனுப்புகிறாள். ஆனால், அவைகள் அவளுக்குத் தொண்டு செய்கின்றன. பெரியகாண்டியம்மன் தங்காளிடம் வந்து, அவள் வரலாற்றைக் கேட்டு, தங்காளிடம் புனித தீர்த்தத்தைக் கொடுத்து அதனை மாண்டவர் மீது தெளித்து உயிர்பெறச் செய்யுமாறு கூறுகிறாள். அவர்கள் உயிர் பெறுகின்றனர். மேற்படி கதையை அடிப்படையாகக் கொண்டெழுந்த கதைப்பாடல்கள் சிலவற்றில் பொன்னரையும் சங்கரையும் ஊசி நூற் தங்காள் கொண்டு உயிர்ப்பித்த கதையம்சம் இடம்பெறுகின்றமையை அவதானிக்க முடிகிறது.

அக்கதைப்பாடலில் இடம்பெறும் விடயங்களும் கோவலனார் கதை, சிலம்பு கூறல், கண்ணகி வழக்குரை ஆகியவற்றில் இடம்பெறும் விடயங்களும் ஒத்திருப்பதை அவதானிக்க முடிகிறது.

- அண்ணன்மாரின் இறப்பைத் தீக்கனா மூலம் அறிந்த தங்காள் அண்ணமாரின் படுகளம் தேடி வருதல்
- அழுது புலம்பல்
- இறையருளால் ஊசி, நூற் பெறுதல்
- உயிர்ப்பித்தல்
- தேவருலகு அடைதல்

## கண்ணகி கதை : தமிழக நாட்டார் வழக்காறுகள்

கண்ணகி கதை, தமிழ்நாட்டில் செவ்வியல் இலக்கிய வடிவங்களாக சிலப்பதிகாரத் தோற்றத்தின் பின்னர் எழுந்துள்ளமை பற்றிக் கட்டுரையின் ஆரம்பத்தில் குறிக்கப்பட்டது. இப்படைப்புகளுக்கு மேலாக பல நாட்டார் இலக்கியப் படைப்புகளும் தமிழ்நாடு, கேரளம் ஆகிய பிரதேசங்களில் நிலவுகின்றன. அப்பிராந்தியப் படைப்புகளில் ஈழத்தில் பயில்நிலையில் உள்ள கண்ணகி வழக்குரை, கோவலனார் கதை, சிலம்பு கூறல் ஆகியவற்றில் இடம்பெற்றுள்ள நாட்டார்நிலைப்பட்ட கதையம்சங்கள் பல இடம்பெறுவதனை அவதானிக்க முடிகிறது. அவை குறித்த தெளிவு ஈழத்தில் பயில்நிலையிலுள்ள சிலப்பதிகாரப் படைப்புகளை அணுகுவதற்கான புதிய திசைவெளிகளை ஏற்படுத்தும். அத்தகைய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசைவெளிகளைக் கடப்பதற்காக ஓர் எடுத்துக்காட்டு (கொலைக்களக் காதையை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு) இங்கு முன்வைக்கப்படுகிறது.

இடுக்கி மாவட்ட பழங்குடி மக்களான மன்னான் இனத்தாரிடம் கண்ணகி கதையானது 'கோவிலன் சரித்திரம்' என்ற பெயரில் கதைப்பாடல் வடிவில் வழங்கி வருகிறது. அக்கதைப்பாடல் தரும் கதையம்சங்களிற் பல, ஈழத்துச் சிலப்பதிகாரப் படைப்புக்களின் கதையம்சங்களோடு ஒத்து நிற்கின்றன (சிற்சில வேறுபாடுகளுடன்). அவற்றில் சில வருமாறு :

01. கோவலன் மதுரைக்குச் சென்றபோது பல தீய நிமித்தங்கள் தோன்றுதல்.

02. தட்டான் வீட்டு முற்றத்திலிருந்த பறவைக் கூட்டை உடைத்தமையால் பறவை சிலம்பைக் கவரந்து செல்லல்.

03. கண்ணகி தீக்கனா காணுதல்.

04. கோவலனின் உடலை ஊசி, நூற் கொண்டு பொருத்துதல்.

05. அவனைப் பொருத்திய உயிர்ச் சரடை உருவிவிட்டுத் தேவருலகு அனுப்பிவைத்தல்.

மேற்குறிப்பிட்ட கதைமரபுகளில் சிலம்பை பறவை கவர்தல், கோவலனை ஊசி, நூற் கொண்டு பொருத்தி உயிர் பெறச் செய்தல் ஆகியன கவனிப்புக்குரியன. இவை ஈழத்துச் சிலப்பதிகாரக் கதைகளிலும் இடம்பெறுகின்றமை மேலே விபரிக்கப்பட்டுள்ளது. இந்நிலையிலேயே, 'ஈழத்துச் சிலப்பதிகாரப் படைப்புகளின் ஆசிரியர்', 'நாட்டார் நிலைப்பட்ட கதையம்சங்களின் இணைப்பு' ஆகியவற்றைத் தமிழ்நாட்டுச் சூழலோடு பொருத்திப் பார்க்க வேண்டிய அவசியப்பாடு மேற்கிளம்புகின்றது.

### மூல நூல்கள்


01. கந்தையா, வி.சீ. (ப.ஆ) (1968) கண்ணகி வழக்குரை, காரைதீவு இந்து விருத்திச் சங்க வெளியீடு : காரைதீவு.

02. செல்லையா, மா.சே. (ப.ஆ) (1962) கோவலனார் கதை, யாழ்ப்பாணம்.

03. சோமசுந்தரனார்,பொ.வே. (உ.ஆ), 1977, சிலப்பதிகாரம், தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் : திருநெல்வேலி.


### உசாத்துணை நூல்கள்


01. இரகுபரன், க. (க.ஆ), 2003, 'சிலப்பதிகாரம் கொண்டதும் கொடுத்ததும்', சிலப்பதிகாரத்தில் பண்பாட்டுக் கோலங்கள், (ப.ஆ : க.இரகுபரன்), கொழும்பு : இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

02. இரகுநாதன்,ம., 2014, சிலப்பதிகாரமும் ஈழத்துக் கண்ணகி காப்பியங்களும், யாழ்ப்பாணம்: எஸ்.எஸ். ஆர்.பிறிண்டடேர்ஸ்.

03. கனகராசு, க., 2004, அண்ணன்மார் சாமி கதை வடிவங்களும் வழிபாடும், தி பார்க்கர் : சென்னை.

04. கிருஷ்ணசாமி, ப., 1998, கொங்குநாட்டு வரலாறும் அண்ணன்மார் வழிபாடும், தன்னனானே பதிப்பகம் : பெங்களூர்.

05. நசீம்தீன்,பீ., 1992, கோவிலன் சரித்திரம், சிவகங்கை : அன்னம் (பி) லிமிடெட்.

06. பூலோகசிங்கம், பொ., 2002, சிலப்பதிகார யாத்திரை, சென்னை : காந்தளகம்.


*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## "சிலப்பதிகாரம் - கண்ணகி வழக்குரை : கொலைக்களக் காதை குறித்த ஓர் ஒப்பியல் நோக்கு"

# ஆய்வு மதிப்பீட்டுரை

**கலாநிதி. வடிவேல் இன்பமோகன்**
**தலைவர், நுண்கலைத்துறை, கிழக்குப்பல்கலைக்கழகம்.**

சிலப்பதிகாரம் தமிழின் முதல் காப்பியம் ஒரு முதன்மைக் காப்பியம் முத்தமிழில் அமைந்த காப்பியம் தமிழ் நாட்டை முழுமைபெறச் செய்த காப்பியம் நெஞ்சையள்ளும் காப்பியம் இலக்கிய உன்னதம் நிரம்பிய காப்பியம் கி.பி.2ஆம் நூற்றாண்டையொட்டி எழுந்த காப்பியம் என்றெல்லாம் சிறப்பினைப் பெற்றதொன்றாக விளங்குகின்றது. இத்தகைய இலக்கியமான சிலப்பதிகாரத்திற்கு சில சிறப்பியல்புகள் உள்ளது. இது தமிழர்களின் தொடக்ககாலம் இருந்து வணிகச் சமூகம் வரையிலான பன்முகப்பட்ட சமூக, பண்பாட்டுப் முறைகள் வாழ்வியல் நெறிகள், இசைக்கூத்து மரபுகள், பன்மைச் சமய மரபுகள், அவற்றின் விழாக்கள், வழிபாட்டு முறைகள், கலைகள், அரசு முறை, நீதிநிர்வாகம், பெண்களின் சமூக நிலை என்பனவற்றை காப்பியத்தின் ஊடாக வர்ணனைப் படுத்துகின்றது (பக்தவத்சல பாரதி, இலக்கிய மானிடவியல்).

சிலப்பதிகாரம் காப்பியமாக இளங்கோவடிகளால் உருவாக்கப்பட்டாலும் சிலப்பதிகாரம் கூறும் கண்ணகி தொடர்பான செய்திகள் தமிழ் தொன்மைச் சமூகத்தில் இருந்து நிலவி வந்துள்ளதற்கு இலக்கிய, வாய்மொழிச் சான்றுகள் பேசப்படுகின்றது. இந்நிலையில் செந்நெறி இலக்கியமரபில் கண்ணகி பற்றிய கருத்தக்கள் பேசப்படுவது போல் நாட்டார் மரபிலும் பயிலப்பட்டு வருகின்றது. இளங்கோ அடிகள் அவர்காலத்து சமூக தேவைகளினை அடிப்படையாகக் கொண்டு சிலப்பதிகாரக் காப்பியத்தைப் படைத்தார் என்றே குறிப்பிடவேண்டும்.

ஈழத்தில் கண்ணகி சடங்கு வழிபாட்டின் மூலம் வழிபடப்படும் பெண்தெய்வங்களில் முதன்மையான தொன்றாக விளங்குவதுடன், கண்ணகியம்மனுக்காக வைகாசிப் பூரணையில் மேற்கொள்ளப்படும் சடங்கின் பின்னரே ஏனைய தெய்வங்களுக்கான சடங்ககள் இடம்பெறுவதும் குறிப்பிடத்தக்கது. கண்ணகியம்மன் வழிபாட்டுடன் தொடர்புடையதாகவும் ஈழத்தில் பயிலப்படும் முக்கியமானதொரு இலக்கியமரபாகவும் கண்ணகி வழக்குரை விளங்குகின்றது. இதன் பயில்வு ஈழத்தின் ஏனைய பிரதேசங்களை விட மட்டக்களப்பிலேயே அதிகளவில் இடம்டபெறுகின்றது எனலாம்.

இந்நிலையில் கண்ணகி வழக்குரை கண்ணகியின் தெய்வீகச் தன்மைக்கு முதன்மையளித்து புனையப்பட்டிருக்க, இளங்கோவடிவகள் சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் கற்பினை ஊயர்வுபடுத்திப் பேச முனைகின்றார். இவ்விரு தேவையும் குறித்த இலக்கியங்கள் தோன்றிய காலத்தேவையின் பாற்பட்டதாகவே விளங்குகின்றது.

"**கண்ணகி வழக்குரை - கொலைக்களக்காதை : ஓர் ஒப்பியல் நோக்கு**" என்னும் ஆய்வை திரு.பா.சுமன் அவர்கள் மேற்குறித்த விடயப்பொருள் பற்றியதாக அமைத்துள்ளார். சிலப்பதிகாரத்தில் இருந்து மாறுபட்டு புத்தாக்கப் புனைவாக கண்ணகி வழக்குரையில் இடம்பெறும் அம்சங்களை ஆராய முயல்வதாக இவ்வாய்வு அமைந்துள்ளது. இதற்கு கொலைக்களக் காதையை ஆதாரமாகக் கொள்கின்றார். இங்கு சிலப்பதிகாரத்துடன் ஈழத்தில் தோன்றிய கண்ணகி இலக்கியங்களான கண்ணகி வழக்குரை, கோவலனார் கதை சிலம்புகூறல் என்னும் நான்கு பிரதிகளும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. ஈழத்திலே தோன்றிய இம்மூன்று பிரதிகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையன என்பதை தெளிவு படுத்துகின்றார்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிலப்பதிகாரம், கண்ணகி வழக்குரை என்னும் இரு பிரதிகளும் வேறுபட்டு இருப்பதற்கு நாட்டார் மரபே காரணம் என்பது ஆய்வில் பல இடங்களில் அழுத்தப்படுகின்றது. அன்னன்மார் கதை, காமன்கூத்தை அடிப்படையாகக் கொண்ட கதை என்பன் இதற்கு ஆதரப்படுத்தப்படும் உதாரணங்களாக காட்டப்படுகின்றன. நாட்டார் மரபுடன் தமிழ் நாட்டுத் தாக்கத்தையும் ஒரு காரணமாகக் குறிப்பிடலாம். ஏனெனில் கண்ணகி கதை தமிழ் நாட்டில் பல பகுதிகளிலும் பயிலப்பட்டு வருகின்றது. அவற்றின் பாதிப்பு ஈழத்திலும் ஏற்பட்டு இருக்கலாம்.

இங்கு ஏனைய பிரதிகளில் இருந்து கண்ணகி வழக்குரைவேறுபடும் விதம் உரைக்கப்பட்டுள்ளது. இவ்வேறுபாட்டை வெளிப்படுத்துவதில் பழுதடைந்த காற்சிலம்பை திருத்தி வெயிலில் காயவைத்தல் தொடர்பான கதை குறிப்பிடத்தக்கது.

கண்ணகியின் தெய்வீகத் தன்மையைக் காட்டுவதற்கு முற்பட்டமையினாலேயே புனைவில் புத்தாக்கத் தன்மை இடம்பெறுகின்றது என்பது சுட்டப்படுகின்றது. கோவலன் இறந்த விடயத்தை கனவின் மூலம் அறிதல், இறந்த கோவலனை உயிர்ப்பித்தல் இந்த அம்சங்கள் சிலப்பதிகாரத்தில் இடம்பெறாது கண்ணகி வழக்குரை உள்ளிட்ட ஈழத்திலே எழுந்த கண்ணகிய இலக்கியங்களில் இடம்பெறுவது சிலப்பதிகாரத்திற்கும் ஈழத்திலே தோன்றிய கண்ணகி இலக்கியங்களுக்கும் இடையே உள்ள "புனைவு நோக்கின் வேறுபாட்டைக்" காட்டுகின்றன என்று குறிப்பிடப்படுகின்றது. சிலப்பதிகாரம் கண்ணகியின் மூலமாக கற்பின் மேன்மையை சித்திரிக்க முயற்சிக்க, ஈழத்திலே தோன்றிய கண்ணகி இலக்கியங்களான இவை கண்ணகியை தெய்வீகப் பெண்ணாகச் சித்திரிக்க முயற்சித்தனவாகவே காணப்படுகின்றன. இது இவ்வாய்வின் அழுத்தப்படும் விடயமாக விளங்குகின்றது.

இதனை ஆதாரப்படுத்துவதற்காக கிழக்கிலங்கைச் சடங்கு வழிபாட்டில் பிரதானப்படுத்தப்படும் தெய்வங்களில் ஒன்றான வதனமார் பற்றிய ஐதீகமும் ஆய்வில் கையாளப்பட்டுள்ளது. சுவாதியம்மன் குழுமாடு குத்தி வதனமாரை உயிர்ப்பித்தல் தொடர்பான கதை பேசப்படுகின்றது. இக்கதை இறந்தவரை உயிர்ப்பிக்கும் ஆற்றல் தெய்வீக ஆற்றல் உள்ளவருகக்கே உண்டென்றும் விடத்தை குறிப்பிடுகின்றது. இவ்உதாரணத்தை கண்ணகி தெய்வீகப் பெண் என்பதை காட்டுவதற்கு உரிய உதாரணமாகக் காட்டப்பட்டிருந்தால் கண்ணகியின் தெய்வீகத்தைமையைக் காட்டுவதற்கான உதாரணமாகக் கொண்டிருக்கலாம்.

ஆய்வாளர் கதைப் பொருள் பற்றிய ஆய்வில் அமைப்பியல் ரீதியான நோக்கிற்கு முக்கியத்துவம் வழங்கியிருப்பது இவ்வாய்வில் அவதானிக்கத்தக்க ஒரு நல்ல அம்சமாக விளங்குகின்றது. இங்கு கண்ணகி வழக்குரை, கோவலனார் கதை சிலம்புகூறல் என்னும் மூன்று பிரதிகளும் சிலப்பதிகாரத்தில் இருந்து வேறுபடும் நிலை எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அவை இவற்றின் புத்தாக்கத் தன்மைகளாகவே அமைந்துள்ளன என்பதை எடுத்துரைக்கின்றார்.

*****


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ஆய்வுரை III

# "கண்ணகி வழக்குரையில் வெடியரசனும் விளங்கு தேவனும்"


திரு.சு. சிவரெத்தினம்

**விரிவுரையாளர், சுவாமி விபுலாநந்த அழகியல் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம்**


சிலப்பதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழகத்திலும் ஈழத்திலும் பல இலக்கியங்கள் உருவாகியிருக்கின்றன. சிலப்பதிகாரத்திலும் சிலப்பதிகாரத்தை அடியொற்றி தமிழகத்தில் உருவான எந்த ஒரு கண்ணகி இலக்கியத்திலும் வெடியரசன் பற்றிய எந்தவொரு தகவலும் இல்லாதிருக்க ஈழத்தில் உருவான 'கண்ணகி வழக்குரை' எனும் காவியத்தின் பதினொரு காதைகளில் ஒரு 'காதை கடலோட்டு காதை' யாக இடம் பெறுவதுடன் அக்காதை மீகாமனுடன் வெடியரசனும் அவனுடைய தம்பிமார்களான வீரநாரணன், விளங்குதேவன் ஆகியோருக்கிடையில் இடம் பெற்ற போர் பற்றி 377 செய்யுள்களைக் கொண்டு விபரிப்பதாக அமைகின்றது. இக் கண்ணகி வழக்குரையே சிறு சிறு வேறுபாடுகளுடன் யாழ்ப்பாணத்தில் 'கோவலனார் கதை' என்றும் வன்னிப் பிரதேசத்தில் 'சிலம்புகூறல்' என்றும் வழங்கப்படுகின்றது. இவை எல்லாவற்றிலும் வெடியரசன் மீகாமன் போர் இடம் பெறுவது கவனிக்கத்தக்க ஒரு விடயமாகும்.

கண்ணகி திருமணத்தின் முன்பு விலையுயர்ந்த அணிகலன்களை யெல்லாம் செய்து கண்ணகிக்கு அணிவித்த மாநாய்கன் காற்சிலம்பிற்கு மற்றவர்களால் பெறமுடியாத நாகமணியையே வைத்து செய்வதென்று முடிவெடுத்து அதனை பெற்று வருவதற்கு மீகாமன் என்பவன் தலைமையில் ஒரு கப்பல் படையை ஈழத்துக்கு அனுப்பிவைத்தான். மீகாமன் ஈழத்தக்கு வரும்போது அதையறிந்த ஈழத்து அரசனான வெடியரசன் மீகாமனுடன் கடும் போரில் ஈடுபட்டான். போரிலே மீகாமன் வெடியரசனைச் சிறைப்பிடித்து நாகமணி பெற்று திரும்பிவரும்போது வெடியரசன் மீகாமனால் சிறைப்பிடிக்கப் பட்டதை அறிந்த வெடியரசன் தம்பி வீரநாரணன் சிறைப்பட்ட தன் அண்ணனை மீடக மீகாமனுடன் போர் செய்தான். போரிலே வீரநாரணன் கொல்லப்பட வெடியரசனின் மற்றொரு தம்பியாகிய விளங்குதேவன் மீகாமனை எதிர்த்துப் போரிட்டான். வெற்றி தோல்வியின்றி நீண்டநேரமாக நடந்த அந்தப்போரின் இறுதியில் வெடியரசனின் வேண்டுகோட்படி இருவரும் சமாதானமாயினர். பின்னர் வெடியரசனையும் விடுதலைசெய்து நட்புக்கொண்டு மீகாமன் நாடு திரும்பினான்.

மணிப்பரல் தொடர்பாக கண்ணகி வழக்குரையில் வெடியரசனுக்கு வழங்கிய முக்கியத்துவத்தினை மதிப்பீடு செய்யும் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "வழக்குரை நூலானது குருகுலத்தார் மாண்பினையும், முக்கியர் என்ற குலத்தாரின் அரசியற் செல்வாக்கினையும் விரித்துரைத்தற்கு எழுந்த காவியமோ என்று படிப்போர் எண்ணும் வண்ணம் இவ்விரு வகுப்பினருக்கும் உயர்ந்த இடத்தினை யளித்திருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்." (கண்ணகி வழக்குரை, 1968, பக்.xxvii)

ஏன் இவ்வாறு கண்ணகி வழக்குரையில் வெடியரசனுக்கு முக்கியத்துவம் வழங்கப்படவேண்டும் என்பது எம்முன்னுள்ள முக்கியமான கேள்வியாக முன்நிற்கின்றது.

இதனை விளங்கிக் கொள்வதற்கு முக்குவர்கள் பற்றிய புரிதல் முக்கியமாகின்றது. முக்குவர்களின் தோற்றம் குறித்து இரு ஐதீகக் கதைகள் வழக்கில் உள்ளன.

01. இராமனுக்கு கங்கை நதியைக் கடக்க உதவிய குகனின் மரபுவழியில் வந்தவர்கள் என்பது.
02. திருமால் பால் கடலில் பள்ளிகொள்ளும்போது தனது கையிலிருந்த சங்கு நழுவிக் கடலில் விழவும் அதனை தேடிப் பெற்றுத்தருமாறு பிரமனைப் பணிக்க, பிரமன் தன் தொடையிலிருந்து




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் ஒருவனைப் படைத்தார். அவன் சங்கை ஆழ்கடலில் தேடிப் பெற்றுக்கொடுத்தான். இதனால் மகிழ்ந்த திருமால் அவனுக்கு முக்கியன் எனப் பெயரிட்டு சங்கு, சக்கரம், அன்னக்கொடி என்பவற்றையும் வரங்களையும் பரிசாக வழங்கினார் என்பது. இவ்வாறு திருமாலிடம் வரம்பெற்றவனே வெடியரசனாவான் இவனுடைய குலமே முக்குவகுலமாக கொள்ளப்படுகின்றது.

இந்த இரு ஐதீகக்கதைகளினூடாக முக்குவர்களினுடைய வாழ்க்கையும் தொழிலும் கடல் மற்றும் ஆறுகளுடன் தொடர்புபட்ட ஒன்றாகவே இருக்கின்றது.

இலங்கையில் தென்னிந்தியாவிலிருந்து காலத்துக்குக் காலம் இடம்பெற்ற குடியேற்றங்கள் இரு வகைகளில் இடம்பெற்றுள்ளன.

01. வியாபாரமும் அதனோடிணைந்த வாழ்வுக்குமான குடியேற்றங்கள்

02. படைநடவடிக்கையின்போது ஏற்பட்ட குடியேற்றங்கள்.

இவ்விருவகையான குடியேற்றங்களின் போதும் கடலை அண்டியும் அதனை நம்பியும் வாழ்ந்த மக்கள் இலங்கையின் பெரும்பாலான கரையோரப் பிரதேசங்களில் குடியேறினர் எனலாம். இதன் காரணமாகவே நயினாதீவு, நெடுந்தீவு, கீரிமலை, திருகோணமலை, புத்தளம், மட்டக்களப்பு போன்ற ஈழத்தின் அனைத்து கரையோரப் பிரதேசங்களிலும் முக்குவர்கள் செல்வாக்குப் பெற்றவர்களாக விளங்கியிருக்கின்றனர். இதன் காரணமாக பல்வேறுபட்ட வாய்மொழிக்கதைகளும் அரங்க ஆற்றுகைகளும் இப்பிரதேசங்களில் இருந்திருக்கின்றது / இருக்கின்றது.

வட இலங்கையிலும் கிழக்கிலங்கையிலும் கரையோரப் பகுதிகளிலே வாழ்ந்த தமிழ் மக்களிடையே வெடியரசன் கதை நெடுங்காலமாக செல்வாக்குப் பெற்றிருந்ததாகவும் அக்கதை மக்கள் நிலைப்பட்ட ஒரு கதை எனவும் பேராசிரியர் பத்மநாதன் கூறவதாக கலாநிதி சந்திரசேகரம் குறிப்பிடுகின்றார்.

அந்தவகையில் வழக்குரையில் வரும் வெடியரசன் கதையினைத் தவிர்த்து பின்வரும் கதைகள் வெடியரசன் தொடர்பாகவும் அவனுடைய முக்குவ சாதி தொடர்பாகவும் வழக்கிலுள்ள கதைகளாகும்.

01. வெடியரசன் நயினாதீவை இராசதானியாகக் கொண்டு நெடுந்தீவில் கோட்டையமைத்து அரசாண்டான் என்றும் அவன் வைத்திருந்த நாகரெத்தினத்தைக் கண்ணகியின் திருமணத்தின் பொருட்டு கவர்வதற்காக மீகாமன் என்பவன் அனுப்பப்பட்டான் என்றும் அவன் வெடியரசனின் தம்பியரை இரந்து கேட்டு நாகரெத்தினத்தை பெற்றுச்சென்றான் என்றும் குறிப்பிட்ட வாய்மொழிக் கதை கூறுகின்றது (மேற்கோள். சந்திரசேகரம்.சி, மொழிதல் - தொகுதி:3, எண்:2 2016,பக்.79)

02. கோவலனார் கதை, சிலம்புகூறல் ஆகிய இரு படைப்புகளிலும் வரும் கடலோட்டுகாதையின் இறுதியிலே வெடியரசனும் அவனது தம்பி விளங்குதேவனும் மீகாமனுடன் ஏற்பட்ட போரின் பின் தமது ஊர் வந்து தமது கப்பல்களையெல்லாம் விற்றுவிட்டு மட்டக்களப்புக்குச் சென்று காடுவெட்டி வயல்கள் உண்டாக்கி, குளங்கள் திருத்தி பயிர்கள் செய்து அரசுடிசய்து இருந்ததாகப் பாடப்படுகிறது.( சந்திரசேகரம்.சி, மொழிதல், 2016,பக்.79)

03. 'குகன் முறை அகவல்' என்பதில்
கண்ணகை அம்மன் காற்சிலம்பிற்காய்
வண்ணமாய் நாக மணிதனை எடுக்க
வந்த மீகாமன் வழிதனை மறித்து
ஆகாச் செயல்கள் அடாது புரிந்து
தொந்தோம் என்றாடி தோற்கப்பண்ணி
வந்தவழியே வகையாய் துரத்திட
கோவலன் தேவி கூறு சாபத்தால்
பூவுலகந்தன்னில் புறங்கொடுத்தேதான்
ஆப்புவியோர்கள் அனைவரும் மதிக்க
தம்பி தமயனாய் சத்தியம் செய்து
ஓடமீதேறி ஓடியே வந்து


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நீடிய இராட்சதர் நிறைந்திடும் இலங்கையில்
மட்டுமாநகரில் வந்தே இறங்கி'' (சிவசண்முகம். 2000, பக்.02

அதாவது, கண்ணகிதேவியின் காற்சிலம்பிற்கு நாகமணி எடுக்கவந்த மீகாமன் என்பவனுடன் போரிட்டு அவனைத் தோற்கடித்துத் துரத்தியதால் அத்தேவி இட்ட சாபத்தினாலே அங்கிருந்து குடிபெயர்ந்து மட்டக்களப்பில் வந்து குடியேறியதாகவும் சொல்லப்படுகிறது.

இக்கதைகளிலெல்லாம் வெடியரசன் தோற்பதாகவும் வெல்வதாகவும் வெடியரசனை இரந்து கேட்டு நாகமணி பெறுவதாகவும் இருக்கின்ற அதேவேளை இரு கதைகள் வெடியரசன் மட்டக்களப்புக்கு இடம்பெயர்ந்து சென்று வாழ்வதாகவும் குறிப்பிடுகின்றன.

இவ்வாறு பார்க்கின்றபோது இக் கதைகள் ஜதீகம், புனைவு என்பவற்றுக்கும் அப்பால் அவற்றினூடு ஒரு சமூகக் குழுவின் வரலாற்றை வெளிப்படுத்துவது போல் தெரிகின்றது. அதாவது ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் செல்வாக்குடன் வாழ்ந்த முக்குவர்கள் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட ஒரு அரசியல், சமூக முரண்காரணமாக மட்டக்களப்புக்கு இடம்பெயர்ந்திருக்கிறார்கள் போல் தெரிகிறது.

வட இலங்கையில் முக்குவர் செல்வாக்குப் பெற்றிருந்த போது கண்ணகி வழிபாடுசெய்யும் பாண்டிய கரையார் வடஇலங்கையில் குடியேறினர். இதனால் இவ்விரு இனங்களுக்கிடையே மனக்கசப்பு உருவானது. இதனைக் காட்டுவதே வழக்குரைகாவியம் கூறும் மீகாமன் வெடியரசன் போர் எனலாம் என்று பேராசிரியர் சண்முகசுந்தரம் குறிப்பிடுவது இவ்விடத்தில் சுட்டிக்காட்டத்தக்கது. (மேற்கோள். சந்திரசேகரம்.சி, மொழிதல், *2016*, பக். *81*) இருந்தபோதிலும் பேராசியரின் கருதுகோளில் பிரதானமான ஒரு முரண்பாடு வெளிப்படுகின்றது. அதாவது பாண்டியர்கள் கண்ணகியை வழிபட்டும் முக்குவர்கள் வழிபடாதும் இருந்திருக்கவேண்டும். அவ்வாறின்றி தொன்றுதொட்டு முக்குவர்கள் கண்ணகியை வழிபடுவது மரபாக இருந்துவருகின்றது.

யாழ்ப்பாணத்தில் ஆரியச்சக்கரவர்த்திகளின் செல்வாக்கு அதிகரித்து அவர்களின் சமயக் கருத்தியல்களும் அதிகரிக்க வடஇலங்கையில் முக்குவர் செல்வாக்கு இழக்கத் தொடங்கியிருக்கின்றனர். "14ஆம் நூற்றாண்டின் முடிவிலே தமிழகத்தில் விசயநகர ஆட்சி ஏற்பட்டதன் விளைவாக விசயநகரப் பேரரசின் செல்வாக்கு யாழ்ப்பாண இராச்சியத்தில் வலுப்பெற்றது. விசயநகர நாயக்கர் காலங்களில் தமிழகத்திற்கும் யாழ்ப்பாண இராச்சியம், ஈழத்துவன்னிமைகள் ஆகியவற்றுக்குமிடையில் அரசியல், சமயம், வாணிபம் போன்ற துறைகளில் நெருங்கிய தொடர்புகள் ஏற்பட்டிருந்தன.

சைவசமயம் மேன்மை பெறுவதற்கு அந்த மன்னர்கள் பல பணிகளை ஆற்றினர். அந்தணகுலத்தவரான ஆரியச்சக்கரவர்த்திகள் சைவ சமயத்தின் பேராதரவாளர்களாகவும் அபிமானிகளாகவும் பாதுகாலர்களாகவும் விளங்கினர். சிவசின்னமாகிய நந்தியின் வடிவத்தை தமது அரச சின்னமாகவும் அரச முத்திரைகளில் ஒன்றாகவும் பயன்படுத்தினர்.'' (மேற்கோள், மேலது)

இக்காலத்தில் சமகாலத் தமிழகத்திற் போல் இலங்கைச் சைவர்களின் சமுதாய வாழ்விலும் சமய வாழ்க்கையிலும் கோயில்கள் சிறப்பிடம் பெற்றன. ஆலயங்களில் ஆராதனைகளும் நித்திய கருமங்களும் விழாக்களும் பெரும்பாலும் வேதாகம முறைப்படி நடைபெற்றன. (மேற்கோள், மேலது)

கலாநிதி சந்திரசேகரம் அவர்களால் மேலே கொடுக்கப்பட்ட பேராசிரியர் பத்மநாதனுடையதும் பேராசிரியர் சிவலிங்கராசவினுடையதுமான இரு மேற்கோள்களும் எமக்கு ஒரு உண்மையை வெளிப்படுத்தவதாக அமைகின்றது. அதாவது சாதியை முன்னிலைப்படுத்தகின்ற சமஸ்கிருதமயப்பட்ட ஒரு பண்பாடு தோற்றம் பெற்றிருப்பதனை இது வெளிக்காட்டுகின்றது. இந்தப் பண்பாட்டில் பிராமணர்களும் வேளாளர்களுமே அதிகாரம் மிக்கவர்களாக உருவாவது தவிர்க்கமுடியாத ஒன்றாகும். தமிழ் நாட்டிலும் சோழர்களிலிருந்து இது மிக வன்மையாக நிலைகொள்ளத் தொடங்கியது. அதனுடைய நீட்சியை யாழ்ப்பாண இராச்சியத்தில் காண்கின்றோம்.

வெடியரசனுடைய யுத்தமும் அவனுடைய தோல்வியும் இடப்பெயர்வும் ஆரியச்சக்கரவர்த்திகளினுடைய அதிகாரத்துக்கும் வேளாள மேலாதிக்கத்துக்கும் எதிரானதேயாகும். படைபலமும் சமஸ்கிருத கருத்தியல்தளமும் கொண்ட ஆரியச்சக்கரவர்த்திடம் வெடியரசன் தோற்று யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து மட்டக்களப்பில் தனக்கான அரசினை நிறுவிக்கொள்கின்றான். இதனால் யாழ்ப்பாணத்தில் வேளாள மேலாண்மையும் மட்டக்களப்பில் முக்குவ மேலாண்மையும் சாத்தியமாயிற்று போலும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"இலங்கையின் டச்சுக்கார சரித்திரத்தை எழுதிய பிதாபிலிப்பஸ் வால்டியஸ் எனும் டச்சு சரித்திர ஆசிரியர் மட்டக்களப்பை ஆண்டவர்களை மட்டக்களப்பு மன்னர்கள் (King of Batticaloa) என்றே கூறுகிறார்.

ஓல்லாந்தர் மட்டக்களப்பைக் கைப்பற்றி தமது ஆட்சியினை நிறுவிய பின் முற்குகத்தலைவர்களின் ஆட்சி அதிகார சபையாக இருந்த முத்திரக்கூடம் எனும் அமைப்பைக் கலைத்துவிட்டு தமது முறைப்படி சிவில்கோடாக (Landrarrd) "லான்ட்றாட்" எனும் அமைப்பை ஏற்படுத்தினர். "(சிவசண்முகம்.ஞா, விபுலம், 2000, பக்.17)

அத்துடன் மட்டக்களப்பில் அதிகாரத்தில் இருந்த முக்குவ வன்னிமைகளும் போடிமார்களும் யாழ்ப்பாண இராச்சியத்துடனான தொடர்பை விட கண்டி இராச்சியத்துடனான தொடர்புகளையும் உறவை யுமே பேணிவந்துள்ளார்கள் யாழ்ப்பாண இராச்சியத்துடன் உறவைப் பேணாததற்கு வேளாள முக்குவ முரண் காரணமாக இருந்திருக்கலாமோ என்று எண்ணத்தோன்றுகின்றது. இதனுடைய நீட்சியை ஆறுமுக நாவலரிடம் காண்கின்றோம். அதாவது ஆரியச் சக்கரவர்த்திகள் முக்குவர்களையும் அவர்களுடைய சமஸ்கிருத மயப்பாடற்ற சடங்குகளையும் வெறுத்து யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றினார்கள் என்றால் ஆறுமுகநாவலர் கண்ணகை அம்மனையும் அந்த வழிபாட்டையும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றினார்.

ஆகவே முடிவாக "ஒவ்வோர் நாட்டார் வழக்கமும் நம்பிக்கையும் முறையே வரலாற்றுச் சம்பவங்களில் தனது வேரினைக் கொண்டுள்ளது." என்று லாரன்ஸ் கொம்மே ஆணித்தரமாகக் கூறினார். லார்ட் ராக்லான், நாட்டார் வீரர்களைப் பற்றிக் கூறும்போது, அவர்கள் மானுடரல்லர், கடவுளர்கள் என்றார். இக்கருத்தினை முற்றிலும் மறுக்கும் வகையில், ஹெக்டர் எம் சாட்விக், நோரா கே. சாட்விக் ஆகியோர், நாட்டார் வீரர்கள் என்போர் வரலாற்று மாந்தர்களே என்று கூறினர். (தனஞ்செயன்.ஆ,புதிய ஆராய்ச்சி, 2016,பக்.54) இந்த அடிப்படையில் கண்ணகி வழக்குரையில் வெடியரசனையும் விளங்கு தேவனையும் நோக்குகின்றபோது அவர்கள் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் வாழ்ந்த ஒரு குறிப்பிட்ட சாதியின் தலைவனாகத் தெரிவதுடன் சமஸ்கிருதமயமாக்கத்தினையும் அதனோடிணைந்த வேளாள மேலாதிக்கத்தையும் எதிர்த்து தோல்வியுற்றபோதும் மட்டக்களப்பில் தனது சாதிமேலாதிக்கத்தை நிலைநாட்டியவனாகக் கொள்ள இடமுண்டு. இந்த வரலாற்றை தங்களுடைய முக்கியமான வழிபாட்டுடனும் கண்ணகியுடனும் தொடர்புபடுத்தி இதற்கொரு தெய்வீகத்தன்மையை மக்கள் வழங்கியிருக்கிறாகள் எனலாம்.

*****

## உசாத்துணை நூல்கள்.


01. கந்தையா.வீ.சி. (பதி),1968, கண்ணகி வழக்குரை,காரைதீவு, காரைதீவு இந்துசமய விருத்திச் சங்கம்.

02. சிவசண்முகம், ஞா. 2000, மட்டக்களப்பு குகன்குல முற்குகர் வரலாறும் மரபுகளும், மட்டக்களப்பு, விபுலம் வெளியீடு.

03. சந்திரசேகரம்.சி, 2016, சிலப்பதிகார புத்தாக்க வடிவங்களும் அவற்றின் புனைவுகளும், மொழிதல் - தொகுதி:3, எண்:2 மட்டக்களப்பு, சுதந்திர ஆய்வு வட்டம்.

04. தனஞ்செயன்.ஆ, 2016, நாட்டார் வழக்காறுகளும் வரலாறும் - நான்னு வகை நிலைப்பாடுகள், புதிய ஆராய்ச்சி, இதழ்: 05 ஜனவரி – ஜுன், சென்னை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## "கண்ணகி வழக்குரையில் வெடியரசனும் விளங்கு தேவனும்"

# ஆய்வு மதிப்பீட்டுரை

**கலாநிதி சி.சந்திரசேகரம்**

**சிரேஸ்ட விரிவுரையாளர், மொழித்துறை, கிழக்குப்பல்கலைக்கழம்.**

வெடியரசன் கதை கண்ணகி வழக்குரையிலே மிகவும் முக்கியமான தொரு பகுதியாக இணைப்புச் செய்யப்பட்டுள்ளது. அதேவேளை அக்கதை வாய்மொழிக் கதைகளாகவும், கூத்துக்களாகவும் பயிலபபப்பட்டு வந்துள்ளது. இக்கதை புனைவுகளையும் உள்ளிர்த்துக்கொண்டதொரு கதையாக இருப்பினும் இலங்கையின் வரலாற்றுடன் தொடர்புடையதொரு கதையாகவும் ஆய்வாளர்களால் பேசப்பட்டு வந்துள்ளது. முக்கியமாக வெடியரசன் பற்றிய கதை யாழ்ப்பாண முக்குவ குழுமத்தவரின் வரலாற்றுடன் தொடர்புபட்டதொரு கதையாகப் பேசப்பட்டு வந்திருக்கின்றது. அந்த வகையிலேதான் திரு சிவரெத்தினம் அவர்களின் "கண்ணகி வழக்குரையில் வெடியசரனும் விளங்குதேவனும்" என்ற ஆய்வு இக்கதையினுள்ளே பொதிந்திருக்கின்ற சமூக, அரசியல் வரலாற்றைச் சற்றுப் புதியதொரு பார்வையில் எடுத்துக் காட்டுவதாக அமைந்திருக்கிறது. அந்தவகையில் வெடியரசனும் அவனது தம்பி விளங்குதேவனும் முக்குவ குழுமத்தவரின் குறியீடாக அமைவதை அவர் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

அதாவது இந்தக் கதை புனைவுகளுக்கு அப்பால் முக்குவ குழுமத்தவரின் ஆரம்பகாலக் குடியேற்றம், யாழ்ப்பாணத்தில் அவர்களது அரசியல் செல்வாக்கு, அதன் பின்னர் ஏற்பட்ட சமூக, அரசியல் முரண்பாடுகள், அந்த முரண்பாடுகளுக்கான சமூக, சமய அடிப்படைகள், அந்த முரண்பாடுகளின் விளைவாக ஏற்பட்ட குடிப்பெயர்வு என்பவை உள்ளிட்ட அச்சமூகத்தவரின் வரலாற்று ஓட்டத்தை எடுத்துக் காட்டுவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

முக்கியமாக, முன்பு யாழ்ப்பாணத்தில் செல்வாக்குற்றிருந்த முக்கவர்கள் அங்கு ஏற்பட்ட அரசியல், சமூக முரண்பாடுகளின் காரணமாக மட்டக்களப்பிற்கு இடம்பெயர்ந்திருக்க வேண்டும் என்பதை இக்கட்டுரை நிறுவ முனைகின்றது. வெடியரசன் கதை பற்றி ஏலவே மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் முக்குவர் பரதவர்களுக்கிடையிலான முரண்பாடுகளாகவே இக்கதையை நோக்கின. ஆனால் சிவரெத்தினம் வெடியசரனின் யுத்தத்தை ஆரியச் சக்கரவர்த்திகளின் அரசியல் அதிகாரம், வேளாள மேலாதிக்கம் என்பவற்றுக்கு எதிரான யுத்தமாகக் காட்டியிருப்பது ஒரு வேறுபட்டதொரு பார்வையைக் காட்டி நிற்கின்றது. இந்த யுத்தத்தை வர்க்க முரணாக மட்டுமன்றி, சமய, பண்பாட்டு முரணாகவும் அவர் பார்ப்பது குறிப்பிடத்தக்கது. இந்த முரண்பாட்டின் போது ஆரியச் சக்கரவர்த்திகளின் அரசியல் பலம், சமஸ்கிருத கருத்தியல் தளம் என்பவற்றின் முன் வெடியசரன் தோற்று மட்டக்களப்புக்கு இடம்பெயர்வதாக அவர் காட்ட முனைந்திருக்கின்றார்.

இந்த வெற்றி, தோல்வியின் விளைவாகவே யாழ்ப்பாணத்தில் வேளாள ஆதிக்கமும் மட்டக்களப்பில் முக்குவ ஆதிக்கமும் ஏற்பட்டதாக அவர் நிறுவ முனைகின்றார். இன்னொரு வகையில் யாழ்ப்பாணத்தில் சமஸ்கிருத சமய பண்பாடு வலுப் பெற்றமையின் அடையாளமாகவெ வெடியரசனின் தோல்வியை அவர் பார்க்கின்றார். மட்டக்களப்பில் முக்குவ ஆட்சி நிலவிய போது அவர்கள் கண்டி ராச்சியத்தோடு அதிக உறவும், தொடர்பும் வைத்திருந்தமைக்கு இந்த முரண்பாட்டின் தாக்கமே காரணம் என்று புதியதொரு காரணத்தை அவர் முன் வைக்கின்றார். இதற்கும் மேலாக, இந்த முரண்பாட்டின் நீட்சியாக கண்ணகிக்கும் கண்ணகி வழிபாட்டிற்கும் எதிரான சமஸ்கிருத நிலைப்பட்ட நாவலரின் போக்கை காட்டுவது குறிப்பிடத்தக்கது.

எவ்வாறாயினும் இந்த ஆய்வு யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெற்ற முக்குவ முழுமத்தவரின் தோன்றல்களாகவே மட்டக்களப்பு முக்குவரைக் கருத முனைவது விமர்சனத்திற்கு உரியதொன்றாகும். ஏனெனில் மட்டக்களப்பு முக்குவரின் மூலங்கள், சமூக, பண்பாட்டுத் தனித்துவங்கள் என்பன பற்றிய வெவ்வேறுபட்ட தனித்துவங்களும், தகவல்களும், கதைகளும் நிலவுகின்ற சூழலில் இந்த விடயம் பற்றி விரிவாகவும், நுணுக்கமாகவும் ஆய்வு செய்யப்பட வேண்டியது அவசியமாகும்.

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆய்வுரை IV

# கண்ணகி வழக்குரையில் மாதவி அரங்கேற்றுக்காதை

**கலாநிதி. ஷர்மிளா ரஞ்சித்குமார்**
**தலைவர், நடன நாடகத்துறை, சுவாமி விபுலாநந்தா அழகியல் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம்.**

## முன்னுரை

ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரத்தினைத் தழுவித் தமிழிலே எழுந்த இடைக் காலக் காப்பியம் "கண்ணகி வழக்குரை". இது கண்ணகி கோவலன் வரலாற்றுக்கு இந்துசமய நறுமணத்தை ஊட்டி வைப்பது 'கற்புடை மகளிரும் கடவுளரெனப் போற்றி வழிபடத்தக்கவர்' என்பது சிலப்பதிகாரம் காட்டி வைக்கும் மூன்று பெரிய உண்மைகளுள் ஒன்றாகும். அந்தப் பெரும் பயனை மக்கள் வாழ்விலே ஊட்டி, நடைமுறையில், அதனை நிலைநாட்டி வைக்க எழுந்த நூல் 'கண்ணகி வழக்குரை' எனக் கூறலாம்.

ஓலைச்சுவடிகளாய்க் கண்ணகி கோயில் தோறும் உள்ள பெட்டகங்களிலே பன்னெடுங்காலமாக பொதுமக்களின் கைகளை இலகுவில் அடையாதவாறு இருந்த இந்நூலை அச்சேற்றி வெளிக்கொண்டு வரவேண்டும் என்று காலத்துக்குக்காலம் முயன்றோர் பலராவர். ஆயினும் அது நிறைவேறுதற்குரிய காலம் இப்போதுதான் கூடியிருக்கிறது எனலாம்.

இக் கண்ணகி வழக்குரை நூலிலிருந்து எனது ஆய்வுக்காக அரங்கேற்றுக் காதையை தெரிவு செய்துள்ளேன். இதில் மாதவியின் முந்தையப் பிறப்பு, அவளது கலைப்பயணம், தலைக்கோல், பதினொரு வகை ஆடல், மாதவி கோவலன் சந்திப்பு, மன்னனது பெருமை, அரங்க அமைப்பு முறை மற்றும் மாதவியின் எழில்தோற்றம் போன்றவற்றை இந்த அரங்கேற்றக்காதையின் வழியாக உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்.

இக்காதையில் 330 பாடல்கள், வெண்பா, விருத்தம் போன்றவை அமைந்துள்ளன.

## மாதவியின் பிறப்பு ரகசியம்

இக்காதையில் முதல் 20 பாடல்களும் தெய்வங்களையும், தெய்வங்களின் பெருமைகளையும் எடுத்துக் கூறும் விதமாக இந்தப் பாடல்கள் அமைந்துள்ளன. அதுமட்டுமல்லாது தமிழ்க் கடவுளும், சங்கப் புலவர்களின் முதல்வருமான முருகக் கடவுளை போற்றும் விதமாக அமைந்திருக்கின்றன. 20வது பாடலில் இந்திரன், யமன், நிருதி, வருணன், குபேரன் முதலிட்ட அ்'டதிக் பாலகரும் சந்திரனும் சூரியனும் கோடிவகை ருத்திரர்களும் அவ்விடத்தில் அமர்ந்து காத்திருந்தனர். சபையின் மருங்கே அருந்தமிழ் பாட்டொலியும், யாழொலியும், உடுக்கை ஒலியும், மத்தளத்தினனுடைய பேரொலியும் கருங்கடல் எழுகின்ற ஒலிக்கு ஒப்பாக சபையின் நடுவே ஒலித்துக்கொண்ருக்கையில் மார்பினில் முத்துப் பதித்த பொன்னாலான நவரத்தின மாலைகள் அணிந்தவள் பல்வகைப் பூட்டுப் பதித்த ஆபரணங்களை கருங்கூந்தலில் முடித்து வைரத்தினால் நெற்றிமாலையிட்டு மணிமேகலையை இடையில் கட்டி மணிகள் அதிகமான சதங்கையும், தண்டையும் காலில் அணிந்து நாரதரும், தும்புருவும் இணைந்து இந்திரசபையில் பாட அவை நடுவே ஊர்வசி தன் நடனத்தை நடத்தினாள்.

20வது பாடல்

"இந்திரனு மியமனுடன் நிருதிவரு ணன்குபேரன்
சந்திரருஞ் சூரியருந் தண்டமிழ்சேர் மாதவரும்
உந்திரரும் பதினோரு கோடியு ருத்திரரும்
அந்தரனார் தம்முடனே அமர்ந்தோலக் காத்திருந்தான்"[1]


Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

23வது பாடல்

"மணிசெறிந்த பரிபுரமும் வரிச்சதங்கை தண்டையுடன்
அணிதிகழும் பாதமதில் அணிந்துநல்ல ஊர்வசியும்
பணிதிகழும் நாரதரும் தும்புருவும் பண்பாட
தணிதிகழும் இந்திரன்முன் சாரிபல ஆடினளே"[2]

இவ்வாறு அகம்மகிழ்ந்து ஆடுகின்ற வேளையில் அரங்கைச் சுற்றி அமர்ந்திருந்த அவையோரையும் பின்னால் அமர்ந்த சயந்தனும் ஊர்வசியின் நடனத்தைக்கண்டு எட்டிப்பார்த்தான். கூடியிருந்த அனைவரும் சமுத்திரம்போல் இருக்கையில் சந்திரன்போல் நிறமுடைய தாமரை போன்றவள் கைகளை விரித்தவாறு கண்களால் சயந்தனை தேடலானாள். இவ்வாறு தேடுகின்ற வேளையில் ஊர்வசியின் தாளம் தவறுகிறது. அவளின் நடனத்தில் தவறினை அறிந்த குருமுனி சயந்தனையும் ஊர்வசியையும் சபிக்கிறார். சயந்தன் தலைக்கோலாகவும் ஊர்வசி சித்திராபதியின் வயிற்றில் மாதவியாகவும் பிறக்கின்றனர். சிலப்பதிகாரத்திலுள்ள அரங்கேற்றுக்காதையில் மாதவியின் பிறப்பு பற்றிய வரலாறு இவ்வாறாகவே கூறப்படுகிறது.

28வது பாடல்

"தான்முனிவன் இடுஞ்சாபந் தப்பாமல் உறுவசியும்
மான்விழியாள் சித்திராபதி வயிற்றில்வந்தங் கவதரிக்க
தேனவிழ்தார் செயந்திரனம் திகிரியென முழைத்தெழுந்தான்
மீனவன்முன் குடைக்காம்பாய் வெட்டிவந்தங் கிட்டனரே"[3]

சிலப்பதிகாரம் அரங்கேற்றுக்காதையில் 1வது பாடல்

"தெய்வ மால்வரைத் திருமுனி அருள
எய்திய சாபத்து இந்திர சிறுவனொடு
தலைக்கோல் தாணத்துச் சாபம் நீங்கிய
மலைப்பு அருஞ்சிறப்பின் வானவர் மகளிர்
சிறப்பிற் குன்றாச் செய்கையொடு பொருந்திய"[4]

29 தொடக்கம் 32 வரையுள்ள பாடல்களில் சிறுவயதில் மாதவியின் அழகினையும் அவளது வதனம் மற்றும் உடல் அமைப்பினையும் பற்றி இயற்கையோடு சம்மந்தப்படுத்திக் கூறியுள்ளனர். இதேபோல் 33 தொடக்கம் 39 வரையுள்ள பாடல்களில் மாதவியின் பருவத்தில் ஏற்படும் மாற்றங்களை இயற்கை சம்மந்தமான பறவை, விலங்குகளோடு ஒப்பிட்டுக் குறிப்பிட்டுள்ளார். 40 தொடக்கம் 48 வரையுள்ள பாடல்களில் மாதவி பூத்தொடுத்தல் மணிப்பந்து கட்டுதல் பெருநூற்கள் கற்றறிதல் நன்னூல் கற்றிதல் இவ்வாறு நற்றமிழ் 64 கலைகளையும் கற்றிந்தாள்.

## மாதவியின் கலைப் பயணம்

### இசை கற்றல்

50வது பாடலிலிருந்து சில இராகங்களின் பெயர்கள் சம்மந்தமான குறிப்புகளை காணக்கூடியதாக உள்ளது. வசந்தா, காம்போதி, நாட்டை, கொல்லி, கரிகாம்போஜி, நாதநாமக்கிரியா, சாரங்கா, சுத்தகாம்போதி, கெந்திரிபோதி, ஸ்ரீராகம் முதலிய இராகங்களோடு 54வது பாடல் வெண்பாவால் உருவாக்கப்பட்டுள்ளது. அப்பாடலில் வெண்சங்கின் மூவோசைகளும் ஒருங்கே தவளும் வகையில் மாதவிக்குப் பாடுவித்தார். 56வது பாடலில் நடை அழகில் மாடகையாழ் (மகரயாழ்), பலவீணை (பலாமரத்தால் செய்யப்பட்ட வீணை) போன்ற குறிப்புக்களும் கூறப்பட்டுள்ளது. ஆனால் சிலப்பதிகாரத்தில் வீணை, வெண்சங்கு, பற்றிய குறிப்புகள் கூறப்படவில்லை. தண்ணுமை, குழல், யாழ் இந்த மூன்று இசைக்கருவிகள் பற்றியும், அவ்வாத்தியங்களை இசைப்போரின் இலட்சணங்கள் பற்றியும் தெளிவுபடக் கூறப்பட்டுள்ளது. இசைக்குரிய இராகங்களின் பெயர்கள் சிலப்பதிகாரத்தில் கூறப்படவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

50வது பாடல்

'பாட நல்லபுற நீர்மயந் தாளம்
பஞ்ச வர்ணம் வளந்தக்க ராகம்
நீடுநடு ராகம் நட்ட பாடை
நீதி யானநல்ல பண்பழஞ் சுரங்கொல்லி
சாட நல்ல கெவுரிசந் தக்கேசரி
தக்க ராகமுடன் மிக்ககந் தாரம்
தேட நல்ல வியாளக் குறிஞ்சி
சீரான மேக ராக குறிஞ்சி'[5]

## நடனப் பயில்வு

57வது பாடலில் மாதவியின் நடனப்பிரவேசம் பற்றியும் நட்டுவனார் பற்றிய குறிப்புக்களும் மாதவி சிறந்த ஒரு வி'ேட நாளில் தனது நாட்டியப் பயணத்தை தொடர்வது பற்றி இப்பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. சண்டிகாதேவியை வணங்கி நட்டுவனார் மாதவியின் கைகளைப் பிடித்து நடனத்தைக் கற்றுக்கொடுக்க ஆரம்பிக்கிறார். பாதநிலைகள், கைமுத்திரைகள் மற்றும் அசைவுகள் அத்தோடு முகம் மற்றும் உடல் அபிநயங்கள் போன்றவற்றை கற்றுக்கொடுக்கின்றார். அதன் பின்னர் நாட்டிய நுணுக்கங்களையும் மாதவிக்குக் கற்றுக் கொடுக்கின்றார். சிலப்பதிகாரத்தில் நட்டுவனார் எனும் சொற் பிரயோகம் இடம்பெறவில்லை. மாறாக ஆடல் ஆசான் என்று நட்டுவனார் அழைக்கப்பட்டார். மேலும் சிலப்பதிகாரத்தில் ஆடல் ஆசானுக்குரிய தகுதிகள் விரிவுபடக் கூறப்பட்டுள்ளது. அவை கண்ணகி வழக்குரையில் கூறப்படவில்லை. பிண்டி பிணையல் என்ற சிலப்பதிகாரம் கூறும் எழிற்கை தொழிற்கை என்ற பதம் கண்ணகி வழக்குரையில் கூறப்படவில்லை.

59வது பாடல்

"மாதவியைத் துவக்குமென்ன மனமகிழ்ந்து நட்டுவனும்
ஓதரிய நால்வேத மோதியுணர்ந் தேதெளிந்து
ஆதிமுத லந்தமென்று அலகெடுத்து நாலளறுக்கும்
வேதியர்தன் சிகாமணியை யழைத்தொருநாள் விதியுமென்றார்"[6]

சிலப்பதிகாரம் அரங்கேற்றுக்காதையில் 2வது பாடல்

"இருவகை கூத்தின் இலக்கணம் அறிந்து
பலவகைக் கூத்தும் விலக்கினிற் புணர்த்துப்
பதினோர் ஆடலும், பாட்டும், கொட்டும்,
அவிதிமாண் கொள்கையின் விளங்க அறிந்து ஆங்கு..."[7]

70வது பாடல்வரை மாதவியின் உடலில் ஏற்படுகின்ற (உடலியல் சார்ந்த) மாற்றங்களை குறிப்பிடுகின்றனர். 75 தொடக்கம் 86 வரையான பாடல்களில் மாதவியின் உடலில் ஏற்பட்ட மாற்றத்துடன் அவளால் செய்யப்படுகின்ற நாட்டிய அசைவுகள் பற்றி கூறப்படுகிறது. இவற்றில் மாதவி செய்கின்ற அடவுகளில் அவள் உடல் அழகு எவ்வாறு அசைவுகளுக்கு அழகு சேர்க்கின்றது என்பதைக் குறிப்பிட்டுள்ளார். 87வது பாடலில் எண்ணும், எழுத்தும், பண்ணும் (இசை) அத்தோடு பதினெண் கலைகள் போன்றவையும் கற்றுத்தேர்ந்ததாக சொல்லப்படுகிறது.

87வது பாடல்

"எண்ணு மெழுத்தும் இசைமூன்றும் பண்ணேழும்
பண்ணமைந்த கூத்து பதினென்றும் நன்னியசீர்
உற்றபதி னெண்கலையு முவமை பெறவேதான்
கற்றனளே மாதவியார் காண்"[8]

88வது பாடலிலிருந்து 97வது பாடல்வரை மாதவியின் வனப்புமிக்க உடல் அழகினைப்பற்றியும், கற்பனைக்கு எட்டாத அழகினைப்பற்றியும் வர்ணித்துக் கூறியுள்ளார். 99வது பாடலிலிருந்து 109வது


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாடல்வரை சோழப்பெருமன்னன் கரிகாலசோழனின் தோற்றத்தையும், அவனது நாட்டின் வழங்கள் பற்றியும், ஆட்சி பற்றியும், மன்னனது சிம்மாசனம் பற்றியும் குறிப்புகள் காணப்படுகின்றது.

111வது பாடலிலிருந்து மாதவியினது அரங்கேற்றத்தினைக்காண வருமாறு நட்டுவனார் மன்னரை பரிவுடன் அழைப்பதுபோலவும், மன்னனுக்கு மாதவியினது அழகினையும், திறமையினையும் மன்னன் வியக்கும்படி கூறி நிற்கின்றார். மாதவியினது ஆடல் வல்லமையை புகழ்ந்தவாறு ஒவ்வொரு விடயமாக மன்னனிடம் எடுத்தியம்புகிறார். மன்னனும் அரண்மனையின் ஆஸ்த்தான ஆச்சாரியாகிய விக்கிரமசோழநாச்சாரியை அழைத்து மாதவியின் அரங்கேற்றத்திற்கு தேவையான அரங்கினையும், கள ஏற்பாடுகளையும் செய்துகொடுக்கும்படி பணிக்கிறான்.

## மாதவியின் அரங்கேற்றத்திற்கான அரங்க அமைப்பு

118 தொடக்கம் 129 வரையான பாடல்களில் அரங்கம் அமைப்பதற்குத் தேவையான மரங்கள் வெட்டி எடுத்தலும் நிலத்தை சரி செய்தலும் பூமி பூஜை போன்றவற்றை நிகழ்த்துதல் பற்றியும் அரங்கத்தினை அமைத்தல் பற்றியும் அரங்கத்தினை அலங்கரித்து தொங்கு விளக்குகள் மற்றும் வர்ணபூதங்கள் வரைதல் போன்றவையும் மேடை அலங்காரம், நிலம் அலங்கரித்தல் போன்றவையும் குறிப்பிடப்பட்டுள்ளது.

130வது பாடலிலிருந்து 137 பாடல் வரை மேடையினை அமைப்பதற்கு மேடையின் அளவு தனித்துவம் நீளம், அகலம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாது மேடையை பூக்கள் மற்றும் விளக்குகளால் அலங்கரித்தல் நிறைகுடம், தாமரை மலர்கள் பொதித்த அலங்காரத்தினையும் மேலே தொங்கவிடப்பட்டிருந்தது. இறுதியாக 146வது பாடலில்
மேடையினை ஒளி சிறந்த மண்டபத்தைப்போல் மாற்றி கண்ணுக்கு அழகு சேர்க்கும் வண்ணமாக மாற்றியமைக்கப்பட்டிருந்தது.

138 வது பாடல்

**"நாட்டிய பின்னத்தி பார மிருத்தி**
**நன்றான பாரத் திசைநாலு திக்கும்**
**போட்டிட் டெழுதி வழித்தூண தெல்லாம்**
**பொருந்தும் இலக்கணத் தின்படி நிறுத்தி**
**கோட்டு மதயானை யும்அத்தி யாளியும்**
**குற்ற மறவே சமைத்துச் சிறந்த**
**பூட்டு மணியோட்டுக் கால்கள்அழ காகப்**
**பொருந்தவே வைத்துவைத் தாணிகொண் டாரே"**[9]

ஆடலரங்கில் பல்வேறுவகையான விலங்குகள், பறவைகளின் ஓவியங்களைச் சுற்றிவர வரைந்திருந்தனர். அதேபோல் மகர தோரணங்கள், புலி பொறித்த செப்பினாலான அடையாளங்கள், நீடுபொற்கண்ணாடி வகைகள், எலுமிச்சம் பழங்கள், பழத்தால் அரிசி, இலை, பாளை, இழநீர் என்று பற்பல திக்கிலும் அலங்கித்திருந்தனர். பன்னீர் குங்குமம் கலந்து சாணத்துடன் அரங்க நிலமெங்கும் மெழுகி மணி வாசலில் பொன்நிறை குடத்துடன் மணிப்பாளை உள்வைத்து அலங்கரித்திருந்தனர். இவ்வாறு மாதவியின் அரங்கேற்றம் நிகழவிருந்த மேடையும் சுற்றிவரயிருந்த அரங்கமும் அலங்கரிக்கப் பட்டிருந்தது. ஆனால் சிலப்பதிகாரத்தில் அரங்க அமைப்பானது மிகத் தெளிவான முறையில் விளக்கப் படடிருந்தது. சிற்பநூல்கள் வகுத்து உரைத்துள்ள முறைமைக்கு ஏற்றதாக உத்தமன் கைப்பெருவிரல் அளவிலே 24 விரலளவுகொண்டதாக நறுக்குவார் இதுவே பொதுவான அளவுகோலாகும். இந்த அளவுகோலின்படி ஏழு கோல் அகலமும், எட்டுக்கோல் நீளமும், ஒருகோல் உயரமுமாக நடன அரங்கம் அமைக்கப்பட்டது. நாற்புறமும் தூண்களை நிறுத்தி அவற்றின்மேல் உத்தரப் பலகைகளைப் பொருத்தினர். இவ் அரங்கத்திற்கு ஏற்றதாக போவதற்கும் வருவதற்கும் இரண்டு வாயில்கள் அமைக்கப்படடன. இவ்வகையாக நடன அரங்கின் அளவுமுறையானது கண்ணகி வழக்குரையில் கூறப்படவில்லை.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தலைக்கோல்

170வது பாடலில் இருந்து தலைக்கோல் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. மாதவியினது முற்பிறப்பு மற்றும் சயந்தன் தலைக்கோலாக மாறிய விடயங்களும் இதிலே காணப்படுகின்றன. 174வது பாடல்வரை இதுபற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. 178வது பாடலிலிருந்து தலைக்கோல் எவ்வாறு அலங்கரிக்கப்பட்டிருந்தது என்பது பற்றியும் தலைக்கோலினை எவ்வாறு மேடைக்குக்கொண்டு வந்தனர் என்பது பற்றியுமான விடயங்களை குறிப்பிட்டுள்ளனர். சிலப்பதிகாரத்திலும் தலைக்கோல் பற்றி இவ்வாறான விடயங்களே குறிப்பிடப்பட்டுள்ளது. 184வது பாடலில் மாதவி அரங்கேற்றத்திற்காக அவளது தோழியான வசந்தமாலையும் உபதோழிகளும் மாதவியுடன் நீராடுவதற்காக செல்கின்றனர். மாதவி அழகிற்குப் பயன்படுத்திய பொருட்கள் பற்றியும் அவளது தேக அழகு, முக அழகு பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவள் பயன்படுத்திய பொருட்கள் வாசனைத் திரவியங்கள் ஆடை ஆபரணங்கள் அதாவது அரங்கப் பிரவேசத்திற்குப் பயன்படுத்திய பொருட்கள் அனைத்தும் இங்கு குறிப்புப் பாடல்களாக குறிப்பிடப்பட்டுள்ளது. இவை 203வது பாடல்வரை தொடர்கிறது. இவ்வகையான குறிப்புகள் சிலப்பதிகாரத்தில் காணப்படவில்லை.

176 வது பாடல்

"விஞ்சைமிகு சினேந்திரனும் வேயாக முளைத்ததனை
கஞ்சமலர்த் தொடைவழுதி குடைதனக்குக் காம்பாக
இன்சொல்மிகுத் தவர்கள்வெட்டி ஏறிட்டான் நின்குடைக்கு
பஞ்சவன்தோற் றோடுகைக்குப் போட்டதுண்டோ பார்த்திபனே"[10]

## மாதவியின் அரங்கேற்றம்

204வது பாடலிலிருந்து மாதவி அவைக்கு வருவது பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அவள் எவ்வாறு மேடைக்கு வருகின்றாள் என்பதையும், அவள் மேடைக்கு வருகின்ற போது மற்றவர் மனதில் எழுகின்ற உணர்வு பற்றியும் குறிப்புகள் காணப்படுகின்றன. 208வது பாடலில் கண்ணகி கோவலன் வருகை பற்றியும், இந்திரவிழாவின் நான்காம் நாள் சடங்கில் மாதவி அரங்கேறும் அரங்கிற்கருகில் ஏற்படுகின்ற ஒலியினால் அங்கு நிகழ்கின்ற சம்பவத்தினைக்காண ஆவலுற்று கோவலன் அங்கே செல்கின்றான்.

214வது பாடலில் இருந்து 219வது பாடல் வரை மாதவியும் கோவலனும் கண்களால் சந்தித்து கோவலனின் அழகினையும், ஆண்மையையும் கண்டு மாதவியின் மனதில் எழுகின்ற எண்ணங்களும், மாதவியின் எழிலையும் உடல் அழகினையும் கண்டு கோவலன் மயங்கி காதல் வயப்பட்டு நிற்றலும் மனங்களுக்கிடையேயான பரிமாற்றங்கள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவை சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படவில்லை, மாறாக மாதவியின் அரங்கேற்றத்தில் அவளின் ஆடல் அழகைக்கண்டு கோவலன் காதல் வயப்பட்டதாக கூறப்பட்டுள்ளது.

219 வது பாடல்

"வணிகேசன் பார்ப்பளவில் வாணுதலாள் மாதவியார்
தணியாத புகழ்வணிகன் தனைக்கண்ணாள் ஏவுதலும்
துணிவான கள்ளர்வந்து சூழ்ந்தெடுத்துக் கொடுபோக
அணியாமற் புறங்காட்டும் அளவில்விட்ட வேல்போல"[11]

222வது பாடலில் இருந்து 227வது பாடல் வரை மன்னனையும், அவனது பெருமைகளையும், அவனது சிறப்பான ஆட்சியையும் பற்றி மாதவி போற்றிப் பாடுவதுபோல் அமைந்திருந்தது. 228 தொடக்கம் 231வது பாடல் வரை மாதவி கூறிய புகழான கருத்துக்களைக்கேட்டு மன்னரும் அவையோர்களும் மனமுருகி நிற்கின்றனர். இதில் முதன்முதலாக பாடுவது போலவே அமைந்திருந்தது. 232வது பாடலில் நட்டுவனார் 'திக்தாலேக, திகிதாலேக' என்று பாடலை ஆரம்பிக்க மாதவி முதன்முதலில் பூமி நமஸ்காரம் செய்து தட்டி ஆட ஆரம்பிக்கின்றாள். 236வது பாடலில் மலர்களைக்கொண்டு பூக்களைத்தூவி ப்ப்பாஞ்சலி மூலம் ஆடுககையில் அரசனை வணங்குகின்றாள். இதில் புஷ்பாஞ்சலி என்று கொடுக்கப்பட்டிருக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல் சிலப்பதிகாரத்தில் ஆடப்பட்டதாகவோ, கொடுக்கப்பட்டதாகவோ காணப்படவில்லை. மாறாக 'மேளப்பிராத்தி' என்ற சொற்பதமே பிரயோகிக்கப்பட்டுள்ளது.

237 வது பாடல்

"அரசனைற் சென்றுபுட் பாஞ்சலி செய்யவே
அவனிமுழு தும்பரந் தரசனும் மகிழ்ந்து
சரசம் வல்லபா வாணர் படைவீரர்
சமுத்திரம் போலவே கோவெண் றெழுந்து
கருதரிய கவி பாடவல்ல முட்டுக்
காரணவ னும்களரி தன்னை யமர்த்தி
அரிவையர் தம்பெரு மாள்கையும் மெய்யு
மசைத்துடன் வாங்கிபின் னாடத் துணிந்தாலே"[12]

241வது பாடலிலிருந்து பல்வேறுவகையான நிலைகள், கையசைவுகள், உடல் அசைவுகள் மூலமாக ஆட மன்னனும் சிரித்தவாறே ரசித்திருந்தான். 250வது பாடலில் கால்களினால் நிற தூ சிகளைக்கொண்டு சித்திரம் வரைந்து நின்றாள் என கூறப்படுகின்றது. இவை 259வது பாடல்வரை தொடர்கிறது. கால்களால் ஓவியம் வரைதல் தொடர்பாக சிலப்பதிகாரத்தில் எவ்விடத்திலும் கூறப்படவில்லை.

260வது பாடலில் இருந்து மன்னன் கண்டுரசித்த ஆடல்கள் பற்றிய விளக்கத்தை நட்டுவனார் மன்னருக்கு கூறி மேலதிகமாக மாதவி இன்னும் சில ஆடல்களை புரிவார் என மன்னருக்கு பரிந்துரைத்து அவளை மேலதிகமாக மற்றைய ஆடல்களையும் ஆடுமாறு கூறி அமர்கின்றார். 261வது பாடலில் 11 வகையான ஆடல்களையும் (கூத்து) இதனை முதலில் மன்னன்முன் நிகழ்த்திக் காண்பிக்கின்றாள். அவை முறையே பின்வருமாறு அமைந்திருந்தன கொடுகொட்டி, பாண்டரங்கம், அல்லியம், மற்கூத்து, துடிக்கூத்து, குடைக்கூத்து, குடக்கூத்து, பேடிக்கூத்து, மரக்கால்கூத்து, பாவைக்கூத்து, கடையக்கூத்து போன்றவையாகும். 268 தொடக்கம் 271வரையான பாடல்களில் இவை பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன்.

263 வது பாடல்

"கோடுகொட்டி யாடியபின் கொற்றமணி முடித்தாமன்
ஓடிஒக்க விழிபுரள ஓவியம்போற் பார்பதியாள்
ஆடிவைத்த பாண்டரங்கம் அன்னநடை மாதவியார்
பாடஒக்கத் தானாடி பைங்கொடிபோல் நின்றனளே"[13]

278வது பாடலில் தாண்டவங்களும் பின்னர் 108 தாளங்களுக்கு ஆடியமையும் சக்கரங்களும் மண்டலங்களும் 400 பேதங்களையும் செய்து காண்பிக்கின்றாள். 108 தாளத்திற்கும் சுத்தநிருத்தத்தில் நாட்டியத்தை நிகழ்த்திக் காண்பிக்கின்றாள். 286வது பாடலில் முளவு, இடக்கை போன்ற தோற்கருவிகள் முளங்க நிருத்த வகையான நடனத்தை நிகழ்த்திக் காண்பிக்கின்றாள். கவுத்துவம் நாராயணன் மேல் இயற்றப்பட்ட பாடலாக அமைந்துள்ளது. 287வது பாடலில் மாதவி ஆடும் போடு அவள் அணிந்திருந்த சிலம்பு உடைந்து உள்ளிருந்த மணிகள் சிதறுகின்றன. 289வது பாடலில் மாதவியின் குழலினை அலங்கரித்த மாலை வடிவிலான அணிகலன்கள் அறுந்து விழுகின்றது. இவ்வாறு சுத்தநிருத்த உருப்படிகளைச் செய்யும்போது மாதவி ஆடிய நடனம் மிகவும் வேகமாக இருந்திருக்க வேண்டும், எனவேதான் ஆபரணங்கள் இவ்வாறு உடைந்து சிதறியிருக்கும் என அறியக்கூடியதாக உள்ளது. கவுத்துவம் என்ற நடன உருப்படி பற்றிய செய்திகள் சிலப்பதிகாரத்தில் கூறப்படவில்லை. மாதவி ஆடிய பதினொருவகை ஆடல் பற்றிய விளக்கம் கடல் ஆடு காதையிலேயே விளக்கப்பட்டுள்ளது. அரங்கேற்றுக்காதையில் மாதவி 11வகை ஆடலை கற்றாள் என்பது பற்றியே விளக்கப்பட்டுள்ளது.

280 வது பாடல்

"பகருமுப் பத்துப் பரததே எண்ணிய
நுகரவொண் ணாத நூற்றெட்டுத் தாளம்
காணு மென்னுங் கட்டளைப் படியே

ஆட வல்லேன் அடியேன் நல்லேன்
பீடுடை கூத்தினப் பெருமைகள் தானே"[14]

287 வது பாடல்

"நயத்தொடு வைத்து நடித்தனள் ஏற்றி
நயத்துடன் சுற்றி மடித்துடனே
புயத்தள விற்கவித் தோடு கண்கள்
புரண்டது கண்டு மருண்டு மிகுங்
குயத்தனில் முத்து வடத்திர ளற்றது
கொண்டனள் பவுரிகள் திகுதி கெனச்
செகத்தினில் மாதவி யிட்ட சிலம்பு
முறிந்தது பன்மணி சிந்திதே"[15]

292 தொடக்கம் 293 வரையான பாடல்களில் மாதவியின் நாட்டியச்சிறப்பினைக் கண்டு மகிழ்ந்து மன்னன் மணிமாலை ஒன்றையும் ஆயிரம் களஞ்சுப் பொன்னையும் தலைக்கோலையும் மாதவிக்கு கொடுத்துக் கௌரவிக்கின்றான். 294 தொடக்கம் 330 வரையான பாடல்கள் மாதவியின் அரங்கேற்றம் பற்றி அவையோர் கூறுகின்ற விமர்சனங்கள், கருத்துகள் போன்றவையும் மாதவியின் எழிலையும் அவளது நடனத் திறமை யையும் கண்டு அவையோர் சொல்வதறியாது மயங்கி நிற்றல் போலவும் இப்பாடல்கள் அமைந்துள்ளன.

## முடிவுரை

இவ்வாறு கண்ணகி வழக்குரை நூலிலிருந்து மாதவியின் அரங்கேற்றுக்காதை பகுதியானது சிலப்பதிகாரத்திலிருக்கும் அரங்கேற்றுக்காதையை ஒத்ததாக இருப்பினும் சில இடங்களில் சிறு சிறு வித்தியாசங்களைக் காணக்கூடியதாக உள்ளது. உதாரணமாக மாதவியின் அரங்கேற்றம் முடிந்த பின்னரே மாதவியும் கோவலனும் சந்தித்ததாக சிலப்பதிகாரம் கூறுகிறது. ஆனால் கண்ணகி வழக்குரையில் மாதவி அரங்கப்பிரவேசம் செய்யும்போது எழுப்பப்பட்ட ஒலியைக் கேட்டு கோவலன் ஆர்வமிகுதியால் அவ்விடம் சென்று மாதவியை கண்டு ரசித்து நிற்பதபோல் கூறப்பட்டுள்ளது. இதேபோல் சில இடங்களில் சிறு சிறு வித்தியாசங்களுடன் இந்த கண்ணகி வழக்குரை காணப்பட்டாலும் இதை பார்ப்பவர்க்கும் கேட்பவர்க்கும் ரசிக்கத்தக்க விதத்தில் அமைந்துள்ளது. சிலப்பதிகாரத்தைத் தழுவி எழுந்த இந்த நூலை நாம் முழுமையாகக் கற்று பயன்பெறவேண்டும் என்தே எனது அவாவாக உள்ளது.

### அடிக்குறிப்பு

1 கண்ணகி வழக்குரை – வி. சீ. கந்தையா - இந்துசமய விருத்திச் சங்கம் - காரைதீவு – 1968 – பக்.146
2 மேலது – பக் - 147
3 மேலது – பக் - 147
4 சிப்பதிகாரம் - புலியூர் கேசிகன் - பாரி நிலையம் - சென்னை, இந்தியா – பக் - 37
5 கண்ணகி வழக்குரை – வி. சீ. கந்தையா - இந்துசமய விருத்திச் சங்கம் - காரைதீவு – 1968 – பக் - 153
6 மேலது – பக் - 155
7 சிப்பதிகாரம் - புலியூர் கேசிகன் - பாரி நிலையம் - சென்னை, இந்தியா – பக் - 38
8 மேலது – பக் - 161
9 மேலது – பக் - 169
10 மேலது – பக் - 176
11 மேலது – பக் - 181
12 மேலது – பக் - 185
13 மேலது – பக் - 193
14 மேலது – பக் - 195
15 மேலது – பக் - 197


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொகுப்புரை



**திருமதி. ரூபி வலன்ரீனா பிரான்சிஸ்**
(சிரேஸ்ட விரிவுரையாளர், மொழித்துறை, கிழக்குப்பல்கலைக்கழகம்)


'கண்ணகி வழக்குரையில் அம்மன் பிறந்த கதை' என்னும் தலைப்பில் கலாநிதி சாந்தி கேசவன் சமர்ப்பித்த ஆய்வுக் கட்டுரை, கண்ணகியின் வரலாறு குறித்து பல்வேறு விதமான கருத்தாக்கங்கள் இருப்பதனை வெளிப்படுத்தியுள்ளது. கண்ணகி வழக்குரை சிலப்பதிகாரத்தை அடிப்படை யாகக் கொண்டெழுந்த இலக்கியம் எனினும் சங்க இலக்கியத்திலும் இது போன்ற கதை வழங்கி வந்தமைக்கான ஆதாரம் உள்ளது. கண்ணகியின் கதை காவியமாகப் படைக்கப்படுவதற்கு முன்னரே வாய்வழி மரபில் அது வழங்கி வந்தது.

கண்ணகியின் பிறப்பு குறித்த விடயம் சிலப்பதிகாரம், கோவலனார் கதை, சிலம்பு கூறல் மற்றும் புகழேந்திப் புலவரின் 'பெரிய எழுத்து கோவலன் கதை' ஆகியவற்றில் வெவ்வேறு விதமாகச் சித்திரிக்கப் பட்டிருப்பதனை ஆய்வாளர் எடுத்துக் காட்டியுள்ளார். இவற்றில் இருந்து இரண்டு விதமாக கண்ணகியின் பிறப்பு கூறப்படுவதை அவதானிக்கலாம். ஒன்று மானிடப் பெண்ணாகப் பிறந்த கண்ணகி தெய்வநிலைக்கு உயர்த்தப்படுதல்.

மற்றையது தெய்வ அவதாரமாகவே கண்ணகி பிறத்தல்.

சிலப்பதிகாரம் முன்னையதிற்கு உதாரணமாக அமைகின்றது. அதேபோல வாய்வழி மரபிலான கண்ணகி கதைகள் இரண்டாவதற்கு உதாரணங்களாக அமைகின்றன. கண்ணகி வழக்குரையும் கண்ணகியின் பிறப்பை தெய்வநிலைக்கு உட்பட்டதாகவே விபரிக்கின்றது. 'அம்மன் பிறந்த காதை' என்னும் பகுதி மிக விரிவாக இதனை எடுத்துரைப்பதைக் காணலாம்.

கலாநிதி சாந்தி கேசவனின் கட்டுரை தொடர்பான மதிப்பீட்டினை பேராசிரியர் செ.யோகராசா வழங்கினார். கட்டுரையில் கூறப்பட்ட சில விடயங்களின் முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டுக்கூறிய அவர், தனது மதிப்பீட்டில் கவனம் செலுத்தியிருக்க வேண்டிய மேலும் இரு விடயங்களையும் குறிப்பிட்டார். ஒன்று தரப்பட்ட தலைப்பினை அறிமுகம் செய்வதில் அதிக நேரம் செலவிடப்பட்டமையால் குறிப்பாக பொருத்தமான விடயங்களை வலியுறுத்த முடியாமற் போனமை. மற்றையது ஒப்பீட்டு அடிப்படையில் இலக்கியங்களை நோக்கி கண்ணகி வழக்குரையில் குறித்த பகுதியின் (அம்மன் பிறந்த காதை) முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டியிருக்கலாம் என்பது.



இரண்டாவதாக ஆய்வுக்கட்டுரையினைச் சமர்ப்பித்து உரையாற்றியவர் கலாநிதி ஷர்மிளா ரஞ்சித்குமார். அவர் 'கண்ணகி வழக்குரையில் மாதவி அரங்கேற்று காதை' என்னும் தலைப்பில் உரையாற்றினார். இக்கட்டுரை



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிலப்பதிகாரம் பற்றிய அறிமுகம், சிலப்பதிகாரம் கூறும் நாட்டிய அரங்கேற்றம், நடன ஆசிரியர்களின் தன்மை, இவற்றை விளங்கிக் கொள்வதற்கு சிலப்பதிகார உரைகளுள் சிறப்பிடம்பெறும் அடியார்க்கு நல்லார் உரை உதவுதல் முதலான விடயங்கள் அறிமுகத்தில் குறிப்பிடுகின்றன.

சிலப்பதிகாரம், கண்ணகி வழக்குரை ஆகியன தோன்றிய காலம் பற்றிய செய்திகளைக் குறிப்பிட்டு இவ்விரு நூல்களிலும் மாதவியின் அரங்கேற்றம் குறித்த விபரங்கள் விளக்கப்பட்டிருக்கும் முறைமையினை ஒப்பீட்டு நோக்கில் ஆராய்வதாக இக்கட்டுரை ஒழுங்கமைப்பட்டிருந்தது. பொதுவாக சிலப்பதிகாரத்தை அடியொற்றி கண்ணகி வழக்குரையில் மாதவி அரங்கேற்று காதை அமைக்கப்பட்டிருப்பதனை மாதவியின் பிறப்பு குறித்த விபரம், முற்பிறப்பு விபரங்கள் மற்றும் அரங்க அமைப்பு ஆகியனவற்றை அடிப்படையாகக் கொண்டு கட்டுரையாசிரியர் நிறுவியுள்ளார். அதேவேளை இரண்டிற்கும் இடையிலான வேறுபாடுகளும் ஆங்காங்கே சுட்டிக் காட்டப்பட்டுள்ளமை சிறப்பானது. உதாரணமாக பயன்படுத்தப்பட்ட கருவிகளைக் கூறும்போது கண்ணகி வழக்குரையில் வெண்சங்கு, மகர யாழ், வீணை ஆகியன கூறப்பட்டிருப்பதையும் சிலப்பதிகாரத்தில் மத்தளம், குழல், யாழ் ஆகியன கூறப்பட்டிருப்பதையும் குறிப்பிடலாம். அதேபோல மாதவிக்கு நடனத்தைப் பயிற்றுவித்தவரை சிலப்பதிகாரம் 'ஆடலாசான்' எனக் குறிப்பிட, கண்ணகி வழக்குரை 'நட்டுவனார்' எனக் குறிப்பிட்டுள்ளதையும் கூறலாம்.

கண்ணகி வழக்குரையில் நடன அரங்கேற்றத்திற்கு முன்பே கோவலனும் மாதவியும் சந்தித்தாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. சிலப்பதிகாரம் இவ்வாறு கூறவில்லை. நடனத்தில் கால்களைால் உருவத்தை வரைந்து காட்டும் திறன் குறித்தும் கண்ணகிவழக்குரை குறிப்பிட்டுள்ளது.

எனவே இக்கட்டுரை பல்வேறு நுணுக்கங்களை ஒப்பீட்டு அடிப்படையில் முன்வைத்துள்ளமை சிறப்பாக நோக்கத்தக்கது. ஆய்வாளர், நடன ஆசிரியையாகவும் இருப்பதால் இக்கட்டுரையில் அத்தகைய பண்புகளைத் துல்லியமாகக் காணமுடிகின்றது.

மூன்றாவது கட்டுரை, 'கண்ணகி வழக்குரையில் கொலைக்களக் காதை : ஓர் ஒப்பியல் நோக்கு' என்பதாகும். திரு சுமன் இக்கட்டுரையை சமர்ப்பித்தார். நாட்டார் மரபிலிருந்து தோற்றம் பெற்ற சிலப்பதிகாரம், தனக்குப் பின் தோன்றிய இலக்கியங்களில் கண்ணகி கதை நிலைபெறுவதற்குக் காரணமாக இருந்தமை, தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் இக்கதை பல்வேறு வடிவ வேறுபாட்டுடனும் தன்மை மாறுபாட்டுடனும் வழங்கிவருகின்றமை போன்ற விடயங்கள் இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் புகழேந்திப் புலவரின் 'பெரிய எழுத்து கோவலன் கதை', சங்கரதாஸ் சுவாமிகளின் 'கோவலன் சரித்திரம்', ஈழத்தில் கு.முத்துக்குமாரசுவாமிப்பிள்ளையின் 'கண்ணகி வெண்பா', இலங்கையர்கோனின் 'இளங்கோ மறந்தது' முதலானவை உதாரணங்களாகக் கூறப்பட்டன.

கண்ணகியம்மன் சடங்கோடு இணைந்த வகையில் புராணபடனமாக நிகழ்த்தப்படும் இலக்கியப் பிரதிகளாக கண்ணகி வழக்குரை, கோவலனார் கதை, சிலம்பு கூறல் மற்றும் கண்ணகி குளிர்த்திப் பாடல்கள் அமைந்துள்ளமையை கட்டுரையாளர் குறிப்பிட்டு சிலப்பதிகாரக் கதை மரபிலிருந்து கண்ணகி வழக்குரை வேறுபடுமிடங்களை கொலைக்களக் காதையினை அடிப்படையாகக் கொண்டு விபரித்துள்ளார். ஒப்பீட்டு அடிப்படையிலான இக்கட்டுரை, கொலைக்களக் காதைப் பகுதியின் விபரங்கள் வெவ்வேறாக அமைவதனை வெளிப்படுத்தும் வகையில் சிறப்பானதாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக்கட்டுரைக்கான மதிப்பீட்டாளர் கலாநிதி வ.இன்பமோகன், கட்டுரையின் சிறப்புகளைக் குறிப்பிட்டு மேலும் ஒரு விடயத்தினையும் வலரியுறுத்தினார்.தமிழ்நாட்டில் அண்ணன்மார் வழிபாடு, இடுக்கி மாவட்ட பழங்குடி மக்களான மன்னான் இனத்தாரின் வழக்காறுகளின் ஒரு பகுதியாக கண்ணகி கதை வழங்கப்படுதல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது ஈழத்து சிலப்பதிகாரப் படைப்புக்கள் மற்றும் நாட்டார்நிலைப்பட்ட கதைகள் என்பன தமிழ்நாட்டுச் சூழலோடு பொருத்திப் பார்க்கப்பட வேண்டிய தேவை உள்ளமையை இக்கட்டுரை ஏற்படுத்தியிருப்பதாக அவர் குறிப்பிட்டார். நான்காவது கட்டுரை 'கண்ணகி வழக்குரையில் வெடியரசனும் விளங்கு தேவனும்' என்பதாகும். திரு சு.சிவரெத்தினம் இதனைச் சமர்ப்பித்தார். கடந்த ஆண்டு (2016) கண்ணகி கலை இலக்கிய விழா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வரங்கில் 'வெடியரசன்' குறித்து திரு மேகராசாவும், 'விளங்குதேவன்' குறித்து செல்வி.க.தங்கேஸ்வரியும் மிக விரிவானதும் ஆழமானதுமான ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பித்திருந்தார்கள். இங்கு வாசிக்கப்பட்ட கட்டுரை கண்ணகி வழக்குரையில், குறிப்பிடப்பட்டுள்ள இவ்விருவரது ஆளுமைகளையும் பற்றிக் கூறுகின்றது.

வெடியரசன், விளங்குதேவன், மீகாமன், மீகாமன் - வெடியரசன் போர் முதலான விடயங்கள் சிலப்பதிகாரத்தில் கூறப்படாமையை எடுத்துக் காட்டும் ஆய்வாளர், மக்களிடையே வழங்கும் நாட்டார் வழக்கில் இவை முக்கியத்துவம் பெற்றிருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றார். குறிப்பாக வேளாளர் - முக்குவர் ஆகியோருக்கு இடையிலான முரண்பாடுகளும் எழுச்சியும் இவர்களுக்கிடையிலான நிகழ்வுகளினூடாக முன்வைக்கப்படுவதாகவும் வடக்கிலிருந்து முக்குகர் கிழக்கிற்கு இடம்பெயர்ந்ததாகவும் அவர் சில கருத்துக்களை முன்வைத்துள்ளார்.


இக்கட்டுரை தொடர்பான தனது மதிப்பீட்டுரையில், சமூகவியல் - வரலாற்று நோக்கில் இவ்விடயங்கள் ஆராயப்பட வேண்டும் எனவும், யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்பிற்கு முக்குகரின் இடப்பெயர்வு நிகழ்ந்தமைக்கு வரலாற்று அடிப்படையிலான சான்றுகள் ஆதாரங்களாகக் காட்டப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார். மேலும் நெடுந்தீவுப் பகுதியில் 'வெடியரசன் வீதி' உள்ளமை மற்றும் சில விடயங்களின் அடிப்படையில் கண்ணகி வழக்குரையில் குறிப்பிடப்படும் வெடியரசனின் ஆளுகைப் பிரதேசம் மற்றும் வெடியரசன் பற்றிய ஐதீகம் முதலானவை மேலதிக ஆய்வுகளால் வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

தொகுத்து நோக்குமிடத்து இங்கு சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து ஆய்வுகளும் மேலதிக ஆய்வுப் புலங்களுக்கான வழியைத் திறந்து விட்டிருக்கின்றன எனக் கூறலாம். தொடர்ந்த தேடலும் ஒப்பீடும் ஆய்வுகளுக்கு அதிகமாகத் தேவைப்படுகின்றன. குறிப்பாக கண்ணகி தொடர்பான எழுத்து மற்றும் வாய்மொழி இலக்கியங்கள், ஈழத்திலும் தமிழகத்திலும் வழங்கப்படும் முறைமை பற்றிய ஆய்வுகள் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியமாகும். சமூக மானிடவியல் மற்றும் தொல்லியல் அணுகுமுறையில் இத்தகைய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.


எதிர்வரும் காலங்களில் 'கண்ணகி வழக்குரை'யில் இடம்பெறும் பெண் பாத்திரங்களின் சித்திரிப்பு குறித்த ஆய்வுகள் ஆய்வரங்கில் இடம்பெறவேண்டும் என்பதையும் எனது வேண்டுகோளாக முன்வைக்க விரும்புகின்றேன். கண்ணகி, மாதவி ஆகியோர் குறித்த ஆய்வுகளைப் போலவே சித்திராபதி, வயந்தமாலை, நீலகேசி முதலான துணைப் பாத்திரங்கள் பற்றியும் ஆராயப்படவேண்டியது அவசியமாகும். இறுதியாக, 'கண்ணகி வழக்குரை' தொடர்பான பல்வேறு சிறப்புக்களை வெளிப்படுத்தும் வகையில் அமைந்து பல்வேறு சிந்தனைப் போக்குகளுக்கு வழி திறந்து விட்டுள்ள இந்த ஆய்வரங்கிற்குத் தலைமை தாங்குவதற்கு எனக்கு வாய்ப்பளித்த பேராசிரியர் சி. மௌனகுரு அவர்களுக்கும் மற்றும் கண்ணகி கலை இலக்கியக் கூடல் நிர்வாகத்திற்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*****


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



கலாநிதி ம.வர்ணகுலசிங்கம்
விரிவுரையாளர்,
தலைவர், புவியியல் துறை கிழக்குப் பல்கலைக்கழகம்



திரு.தி. ரவி
வலயக்கல்விப் பணிப்பாளர், கல்குடா கல்விவலயம்.



திரு.த. மலர்ச் செல்வன்
மாவட்ட கலாசார இணைப்பாளர்
மட்டக்களப்பு மாவட்டம்



திரு. செல்லத்தம்பி ஜெகன்
சட்டத்தரணி

## சிறப்பு அதிதிகள் உரை


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஆய்வாளர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கல்




















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செல்வி. அனுசூயா சேனாதிராசா



கலாநிதி க. இராஜேந்திரம்




பொன். செல்வநாயகம்

▲


## முதன்மை அதிதிகள் உரை





▲

## ஆய்வரங்கில் அவையோர்



◀ நன்றியுரை

**கலாநிதி அரிமா அ. செல்வேந்திரன்**

(செயற்குழு உறுப்பினர்,
கண்ணகி கலை இலக்கியக் கூடல்)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


## 04 செப்டம்பர் 2017 திங்கட்கிழமை - இரண்டாம் நாள்
## விசேட அமர்வு (பி.ப. 2.30 - பி.ப 3.30)

# கவியரங்கு

**தலைப்பு** : "பெண்ணிற் பெருந்தக்க யாவுள"

**கவியரங்கத் தலைமை** : சட்டத்தரணி பாடும்மீன் சு.ஸ்ரீகந்தராசா (அவுஸ்திரேலியா)

**கவிஞர்கள்** :
- அ. அன்பழகன் குரூஸ்
- தாழையூர் கிருஷாந்தி
- கவிஞர். மேரா
- கவிஞர். சந்தியூர் கி.சேயோன்
- கவிஞர். சோலையூரான் ஆ.தனுஸ்கரன்
- கவிஞர். சௌந் லெனாட் லொரன்ஸோ



கவியரங்கம்



கவிஞர். சோலையூரான் ஆ.தனுஸ்கரன்



கவிஞர். சௌந் லெனாட் லொரன்ஸோ



கவிஞர் சத்தியூர் கி.சேயோன்



கவிஞர். அ.அன்பழகன் குரூஸ்



தாழையூர் கிருஷாந்தி



கவிஞர். மேரா


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





## கவியரங்க நினைவுச் சின்னம் வழங்கல்
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04 செப்டம்பர் 17, திங்கட்கிழமை - இரண்டாம் நாள் மாலை

# கலை அரங்கும் நிறைவு விழாவும் (பி.ப 3.30 - மாலை 8.30)


# "மாதவி அரங்கு"



தலைமையுரை

திரு.செ. எதிர்மன்னசிங்கம்

(துணைக்காப்பாளர், கண்ணகி கலை இலக்கியக் கூடல்)



உடுக்கு இசைப் போட்டியில்

1ம் பரிசு பெற்றவரின் ஆற்றுகை



குளிர்த்திப்பாடல் போட்டியில் 1ம் பரிசு பெற்றவரின் ஆற்றுகை




நடனம் – 'சோடய மங்களம்' – சந்திவெளி சித்தி விநாயகர் வித்தியாலய மாணவிகள்

நெறியாள்கை : திருமதி. சுகந்தி நிரஞ்சன் (நடன ஆசிரியை)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



நடனம் – வாழைச்சேனை இந்துக்கல்லூரி மாணவிகள்

நெறியாள்கை : திருமதி. சுகந்தி நிரஞ்சன் (நடன ஆசிரியை)




'கண்ணகி' நடனம்

செல்வி. அனுஜா வேதநாயகம் எம்.ஏ (சென்னைப்பல்கலைக்கழகம்)



நடனம் – மீராவோடை சக்தி வித்தியாலய மாணவிகள்

நெறியாள்கை : செல்வி. நாகராசா கஜேந்தினி (நடன ஆசிரியை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







'கண்ணகி' நாட்டியம் – சந்திவெளி சித்தி விநாயகர் வித்தியாலய மாணவிகள்

நெறியாள்கை :

திருமதி. நிவேதிதா அஜந்தன்

(நடன ஆசிரியை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








'கானல்வரி' நாட்டிய நாடகம் – நர்த்தன பவனம் நாட்டியப்பள்ளி மாணவிகள்

நெறியாள்கை : திருமதி. ஷர்மிலதா பிரபாகரன் (நடன ஆசிரியை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**நிறைவுரை**

**கலாநிதி அரிமா**

**அ.செல்வேந்திரன்**

(செயற்குழு உறுப்பினர்,
கண்ணகி கலை இலக்கியக்கூடல்)



சந்திவெளி கண்ணகை அம்மன் ஆலயத்திலிருந்து புறப்பட்ட பண்பாட்டுப் பவனியில் ஒற்றைச் சிலம்பைக் கையிலேந்திய கண்ணகி நிலை வேடம் தாங்கி ஆடாமல் அசையாமல் சிலை போன்றே ஆற்றுகை அளித்த **தெய்வநாயகம் விஜயகுமார்** அவர்களுக்கு விருது வழங்கல்.



**விழாக்குழுவுக்கான நினைவுச் சின்னம் வழங்கல்**



**நிகழ்ச்சித் தொகுப்பு**

**ஆ.ஜெயச்சந்திரன்**

(விழாக்குழு உறுப்பினர்)



**விழாக்குழு 2017, கிரான்**

**+**

**கண்ணகி கலை இலக்கியக் கூடல் தாய்ச் சங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "விபுலாநந்த விருது - 2018"

# வாழ்த்துப்பா

படுவான் மண்ணில் பதியமிட்ட விதையொன்று
பரந்தது விருட்சமாய் பாரினில் எழுந்தது
தொடுவார் இவர் தொல்லியல் ஆய்வுகளை
தொலைத்(ந்)த தொன்மங்கள் நிலைத்திடச் செய்தவர்.

கலைகள் கமகமக்கும் கன்னங்குடா ஈன்ற
கலைச்செல்வி தங்கேஸ்வரி தங்கம் நீ வாழி
பிழைகள் பொறுத்திடா பெண்மணி நீயல்லோ
பிழைகண்டு எழுந்த கண்ணகி வழியல்லோ

கல்வி கலை கலாசாரம் சமூகப் பணிகள்
காலத்தால் அழியாது இலக்கிய உலகில்
செல்வி தங்கேஸ்வரிக்கு சொல்லில்லை வாழ்த்த
செல்வாக்கும் சொல்வாக்கும் இவருக்கில்லை ஈடு


எறும்பும் தோற்றிடும் வண்ணம் இயங்கியே
எழுத்தில் மட்டுமா? இன்னும் பல துறைகளில்
இரும்புப் பெண்ணாக ஏற்றம் கண்டனை
இன்றுவரை கண்ணகி கூடலின் முதுசொம்

ஆய்வுப் பணியில் அகலக்கால் பதித்தனை
அயராத இலக்கிய கலைப்பணி புரிந்தணை
ஆய்வாளர் அம்மணிக்கு 'விபுலாநந்த விருது'
ஆன்றோர் அவையிலே கூடலின் விருந்து

ஆக்கம் : கதிரவன் த.இன்பராசா

கலை, இலக்கியம், பண்பாடு மற்றும் ஆய்வுப்பணிகளுக்கான கண்ணகி கலை இலக்கியக் கூடலின் "விபுலாநந்த விருது" முதன் முறையாக செல்வி கதிராமன் தங்கேஸ்வரி அவர்களுக்கு இவ்விழாவில் (2018) வழங்கப்பெற உள்ளது. இவ்விருது வழங்கல் வருடா வருடம் தொடரும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# தொல்லியலாய்வாளர் க.தங்கேஸ்வரி ஓர் அறிமுகம்



**மா.சசிகுமார்**
செயற்குழு உறுப்பினர்,
கண்ணகி கலை இலக்கிய கூடல்

கிழக்கிலங்கையில் பலராலும் அறியப்பட்ட எழுத்தாளராகவும் தொல்லியலாளராகவும் விளங்கும் செல்வி தங்கேஸ்வரி கதிராமன் அவர்கள் சுமார் 30 வருடங்களிற்கு மேலாக ஆய்வுத் துறையில் தன்னை ஈடுபடுத்தி தமிழரது பூர்வீக இருப்பை உறுதிப்படுத்துவதில் பங்களிப்புச் செய்துவருகின்ற ஆய்வாளராவார்.

மட்டக்களப்பின் கலாசார உத்தியோகத்தராகவும் பாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்து மட்டக்களப்புப் பிரதேச அபிவிருத்தியில் குறிப்பிடத்தக்க பங்களிப்புக்களை வழங்கியுள்ள இவரது பணிகள் மற்றும் படைப்புக்கள் தொடர்பாக அறிந்து கொள்வது அவசியம்.

இலங்கையில் தொல்லியல் மற்றும் அரசியல் துறைகளைப் பொறுத்தவரையில் பெண்களின் பங்களிப்பும் ஆர்வமும் மிகவும் தாழ்ந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது. ஆனால் இவர் இத்துறைகளில் ஆர்வம் செலுத்தி தமது சமூகத் தேவைகளை பூர்த்தி செய்வதில் முன்வந்துள்ளமை பாராட்டத்தக்கது. செல்வி.தங்கேஸ்வரி அவர்களின் வாழ்க்கை, அவரது ஆய்வுகள், ஆக்கங்கள், அரசியற் பணிகள் மற்றும் சமூக, சமய, கலாசாரப் பணிகள் தொடர்பாக நோக்குவோமாயின் மட்டக்களப்பின் மேற்கே பாரம்பரியங்களையும் மரபுரீதியான வழக்காறுகளையும் இன்றும் பேணிப்பாதுகாத்துவரும் பழம்பெரும் கிராமமான கன்னிகளியாத கன்னன்குடாவில் சீனித்தம்பி கதிராமன், வெள்ளையன் திருமஞ்சணம் தம்பதியினரின் சிரேஸ்ட புதல்வியாக 1952 ஆம் ஆண்டு மாசி மாதம் 26ஆம் நாள் (செவ்வாய் கிழமை) தங்கேஸ்வரி அவர்கள் பிறந்தார்.

இவரது தந்தை கதிராமன் விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும் மிக்க ஒரு விவசாயியாகவும் இலட்சிய வாதியாகவும் காணப்பட்டார். அவரது முயற்சியே தனது பிள்ளைகளது ஒளிமயமான எதிர்காலத்தைத் தீர்மானித்தது எனலாம். தனது பிள்ளைகளான தங்கேஸ்வரி, கனகரெட்ணம் ஆகிய இருவரின் எதிர்காலத்தையும் கருத்திற்கொண்டு கஸ்டங்களைப் பாராது நகரப்பாடசாலைகளில் சேர்த்து கல்வி கற்கச்செய்தார்.



இவர் தனது ஆரம்பக்கல்வியை கன்னன்குடா அரசினர் தமிழ்கலவன் பாடசாலையில் 1958ஆம் ஆண்டு (தற்போது கன்னன்குடா மகாவித்தியாலம்) ஆரம்பித்தார். ஐந்தாம் தரம் வரை அப் பாடசாலையில் கல்வியை தொடர்ந்த அவர். மட்/ஆனைப்பந்தி இராமகிருஸ்ணமிசன் மகளிர் பாடசாலையில் தரம் 6 தொடக்கம் 8 வரை இடைநிலைக் கல்வியைக் கற்றதுடன் மட்/ வின்சன்ட் மகளிர் பாடசாலையில் ஒன்பதாம் தரத்திலிருந்து உயர்தரம் வரை கற்றார். கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கிய இவர் உயர்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தரத்தில் கலைத்துறையில் கற்று வித்தியாலங்கார பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகினார். வித்தியாலயங்கார பல்கலைக்கழகத்தின் அழகியற்றுறையில் மொழியியல், தொல்பொருளியல், தமிழ்மொழி ஆகிய பாடங்களை அடிப்படைப் பாடங்களாகத் தெரிவு செய்ததுடன் முதல் வருடத்தில் இவர் காட்டிய கெட்டித் தனத்தாலும் தொல்பொருளியற்றுறை மீதான ஈடுபாட்டினாலும் தொல்பொருளியல் சிறப்புக் கற்கைநெறிக்குத் தெரிவானார்.பேரா.சேனக்க பண்டார நாயக்க, டாக்டர்.மார்கஸ் பெர்னாண்டோ, பேரா.அபய ஆரியசிங்க, டாக்டர்.லக்துசிங்க முதலியோரிடத்து சிங்கள மொழியில் தொல்பொருளியலை சிறப்புப் பட்டத்தினை தங்கேஸ்வரி அவர்கள் பெற்றுக்கொண்டார்.

பின்னர் M.sc மேற்படிப்பினை பேரா.க.சிற்றம்பலத்தின் வழிகாட்டலில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் 1996ஆம் ஆண்டு ஆரம்பித்தாலும் அதனை நிறைவு செய்வதற்கு முடியாமற் போய்விட்டது. "மட்டக்களப்பு பிரதேச தொல்பொருளியல் வரலாறு" என்ற தலைப்பில் இவர் தனது மேற்படிப்பின் நிமித்தம் ஆய்வு செய்தார். யுத்த சூழ்நிலை உக்கிரமடைந்த காரணத்தால் மேற்படிப்பை 1997ஆம் ஆண்டு இடைநிறுத்திக்கொள்ள வேண்டிய சூழ்நிலைக்கு உள்ளானமையால் அப்படிப்பு கைவிடப்பட்டது.

1993ஆம் ஆண்டு இடம்பெற்ற இலங்கை நிருவாக சேவை பரீட்சையில் மட்டக்களப்பில் இரண்டாவது இடத்தினைப் பெற்ற போதும் மட்டக்களப்பு மாவட்டத்தில் முதலிடம் பெற்றவரினை மட்டுமே நிருவாக சேவையில் உள்வாங்கும் அவசியத்தால் இவரிற்கு அச்சந்தர்ப்பம் கைநழுவிப்போனது. இவர் தனது பட்டப்படிப்பை 1978ஆம் ஆண்டு நிறைவு செய்த பின்னர் 1978-1983 வரையான கால கட்டத்தினுள் கன்னன்குடா மகாவித்தியாலயத்தில் தொண்டராசிரியராகக் கற்பித்தார். பிரதேச அபிவிருத்தி மற்றும் இந்து சமய கலாசார அமைச்சின் கீழ் கொழும்பில் இந்து கலாசார உத்தியோகத்தராக 1983ஆம் ஆண்டு அரச நியமனம் பெற்று 1988 வரை கொழும்பில் கடமையாற்றியதுடன் அக்காலத்தில் இந்துகலாசார அமைச்சினால் நடாத்தப்பட்ட அஸ்வமேத யாகம், முதலாவது சைவ மாநாடு என்பவற்றில் கணிசமான பங்களிப்புக்களை வழங்கியுள்ளார். 1988ஆம் ஆண்டு மார்கழி மாதம் முதல் மட்டக்களப்பு மாவட்ட கலாசார உத்தியோகஸ்தராக நியமனம் பெற்ற இவர் 2004 வரை சிறப்பாக தனது கடமைகளை மேற்கொண்டுள்ளார். அக்காலப்பகுதியில் இவர் செய்த சேவை இன்றும் நினைவு கூரப்படுகின்றது. அந்த வகையில் கச்சேரி நூதனசாலை முக்கியம் பெறுவதுடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகளவான அறநெறிப் பாடசாலைகளையும் பதிவுசெய்து செயற்படுத்திய பெருமையும் இவருக்கே உரியதாக அமைகிறது. இந் நிலையில் 2004ஆம் ஆண்டு நடந்த பாராளுமன்ற பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்பாக போட்டியிட்டு மட்டக்களப்பில் முதலாவது பெண் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டு 2010 வரை கடமையாற்றினார்.

இவர் கிழக்குப்பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறையில் பகுதிநேர விரிவுரையாளராகவும், இலங்கை கல்வித்திணைக்களத்தில் இந்துசமய பாடப்புத்தகக் குழு உறுப்பினராகவும், கிழக்குப்பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா இசை நடனக் கல்லூரி வளாகத்தின் கல்விக்குழுமத்தின் உறுப்பினராகவும், மட்டக்களப்பு கச்சேரியில் மாவட்ட கலாசார சபையின் செயலாளராகவும் கடமையாற்றியதுடன் மாகாண மற்றும் மாவட்ட மட்டத்தில் பல அமைப்புக்களில் முக்கிய பதவிகளில் இருந்து சமூக, சமய, இலக்கியப் பணிகளை மேற்கொண்டுள்ளதுடன் சர்வதேச மற்றும் தேசிய ரீதியாக நடைபெற்ற ஆய்வரங்குகளிலும் மாநாடுகளிலும் பங்குகொண்டுள்ளதுடன் அவ்வேளைகளில் ஆய்வுக் கட்டுரைகளையும் சமர்பித்துப் பாராட்டுக்களையும் பெற்றுள்ளார்.

இவரது வரலாறு மற்றும் தொல்லியல் ஆய்வுகளை நோக்குவோமாயின் லெமூரியாக் கண்டம் பற்றிய ஆய்வு, கிழக்கிலங்கையின் தொன்மை, ஈழத்தில் இந்து சமயத்தின் தொன்மையும் வரலாறும், கிழக்கிலங்கையில் முருக வழிபாட்டின் தொன்மை, திருப்படைக் கோயில்கள்,கிழக்கிலங்கை ஆலயங்கள், உகந்தை முருகன் ஆலயம், மண்ணம்பிட்டி தம்பன் கடவை ஸ்ரீ சித்திரவேலாயுதர் ஆலயம், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம், ஈழத்தில் பத்தினி தெய்வ வழிபாடு, ஈழத்தில் நாக வழிபாடு, பண்டைய தமிழரின் நடுகற்பண்பாடு, இலங்கையில் பௌத்தம், கலிங்க மன்னன் மாகோன் வரலாறு, குளக்கோட்டன் வரலாறு, விகாரமாதேவி, ஆனமீகவாதிகள், கிழக்கிலங்கை மக்களின் பாரம்பரியங்கள், மட்டக்களப்புப்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

